
# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்




மற்றும்

## பாலியல் உரிமைகள்

Women and Media Collective
Established 1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

முதலாம் அரையாண்டு - 2015
ISSN 1391-958X

---

**கௌரவ ஆசிரியை**
காயத்ரி டிவகலால

---

**சரவை நோக்கு**
குகநிதி குகநேசன்

---

**அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு**
வேலாயுதம் ஜெயச்சித்ரா

---

**அட்டைப் படம்**
நெதாலி சொயிசா

**சஞ்சிகை வெளியீடு**
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
56/1, சரசவி லேன், காசல் வீதி,
கொழும்பு - 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045/5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : wmcsrilanka@gmail.com
www.womenandmedia.org
facebook.com/womenandmediacollective
twitter.com/womenandmedia

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் சொல்ல விரும்புவது...

குறைந்தது மூன்று தசாப்த காலமாக இலங்கையின் வரலாற்றில் போரும் அது சார்ந்த அம்சங்களுமே முக்கிய இடத்தினைப் பெற்றிருந்தன. சமூகம், பொருளாதாரம், கலாசாரம் மற்றும் அரசியல் சார்ந்த விழுமியங்களும், போர் சார்ந்த விடயங்களுக்கூடாக அர்த்தப்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் நிலவியது. எமது கல்வியிலும் வரலாறுகள் எவ்வாறு கற்பிக்கப்படுகின்றன என்பதிலும் போரும் அதனை உருவாக்கிய காரணிகளும் அவை சார்ந்த அரசியலும் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவற்றின் வெளிப்பாடாக உருவாகிய செயல்வாதங்களும் மாற்றுச் சிந்தனைகளும் சில முக்கிய வெளிகளை விட பரந்துபட்டுச் செல்ல முடியவில்லை. அவசரகால நிலைப்பாடுகளும் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய தேவைகளுமே எமது சிந்தனை வெளிகளில் அதிக தாக்கத்தினைச் செலுத்தியிருந்தன.

கடந்த ஆறு வருடகாலமான போருக்குப் பின்னரான இலங்கையிலும் இந்நிலைப்பாட்டில் பெரியளவிலான மாற்றம் ஏற்படவில்லை. அரசியல் ரீதியான மாற்றங்கள் ஆரோக்கியப் பாதைகளை வலியுறுத்தினாலும் யதார்த்தத்தில் மாற்றங்கள் இன்னும் உணரப்படவில்லை. குறிப்பாக ஒதுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகங்கள் இன்னும் வலுப்பெறத் தொடங்கவில்லை. ஆதலால் மாற்றுநிலை வெளிப்பரப்புக்கள், கருத்தியல் உருவாக்கங்கள் மற்றும் தெளிவுகள் இன்னமும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. குறிப்பாகப் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் இதுவே எமது யதார்த்தமாகும். மட்டுப்படுத்தப்பட்ட வெளிப்பாடுகளை தனதாக்கிய கருப்பொருட்களில் ஒன்றுதான் பெண்களின் பாலியல் அல்லது பாலியல்பு மற்றும் இனவிருத்திச் சுகாதாரம் சார்ந்த உரிமைகளாகும்.

பெண்களின் இனவிருத்திச் சுகாதாரம் பெரும்பாலும் தாய்மையின் அடிப்படையிலேயே அர்த்தப்படுத்தப்படுகின்றது. தாய்மை என்று வரும்போது அங்கு பெண்களின் உரிமைகளை விட குழந்தையின் உரிமைகளே முதன்மைப்படுத்தப்படுகின்றன. பாலியல்பு என்று வரும்போது பெண்களுக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை என்ற நிலைப்பாடே சமூகத்தில் காணப்படுகின்றது. இந்நிலைப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்குவதோடு மாற்றங்களை ஏற்படுத்தும் வெளிப்பரப்புக்கள் போதியளவில் இல்லை. இங்கு சமூகம் மற்றும் கலாசார ரீதியான பல கட்டமைப்புக்களும் விழுமியங்களும் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. இது இலகுவான விடயமுமல்ல.

எமது சமூகங்களில் இவற்றைக் கேள்விக்குள்ளாக்கும் பெண்களைத் திரும்பவும் கேலிக்குள்ளாக்கும் நிலையே அதிகமாகக் காணப்படுகின்றது. ஆதலால் இவ்வாறான செயல்வாதப் பயணங்களைத் தமதாக்கிக் கொள்ளும் பெண்கள் பலதரப்பட்ட வகையில் தம்மை வல்லமைப்படுத்துவதோடு பொருத்தமான அணுகு முறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இதற்குக் காலமும் நிபுணத்துவமும் சக செயல்வாதிகளின் பங்களிப்பும் அவசியமாகின்றது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் இதுவரை காலமும் நாம் பழக்கப்பட்டுப் போன மாற்றுவழிச் சிந்தனை மரபுகள் கொடுத்த அனுபவக் கல்வியிலிருந்து அதிக கவனத்தை அல்லது உரிமை அடிப்படையிலான பார்வைகளைப் பெற்றிராத கருத்துருவாக்கங்களையும் செயல்வாதப் பரப்புக்களையும் உருவாக்கும் தருணம் இதுவாகும்.

அந்தவகையில் பெண்களது பாலியல் அல்லது பாலியல்பு மற்றும் இனவிருத்தி சம்பந்தப்பட்ட உரிமை அடிப்படையிலான அர்த்தப்பாடுகளுக்குக் களம் அமைக்கும் ஒரு முயற்ச்சியே இந்தப் பதிப்பாகும். இவை தொடர்பாக ஏற்கனவே தங்களது செயல்வாதப் பயணங்களை அல்லது போராட்டங்களை ஆரம்பித்துள்ள பெண்கள் உரிமைச் செயல்வாதிகளுடன் பங்கேற்பதில் சொல் மகிழ்வடைகின்றது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் விடுக்கும் அழைகூவல்!

இச் "சொல்" சவால் பாலியல், இனவிருத்தி சுகாதாரம் மற்றும் உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. இந்த விடயம் தொடர்பில் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் கலந்துரையாடுவதற்கும், உரையாடுவதற்கும் உகந்த சந்தர்ப்பமாக இந்த விடயம் உள்ளது.

அபிவிருத்தியை கண்காணிப்பதற்கான புதிய வகை இலக்குகளை நிர்ணயிப்பதற்கு சர்வதேச சமூகம் கவனம் செலுத்தி வரும் மிகவும் முக்கியமான வருடமாக 2015 உள்ளது. இந்த இலக்குகள் - தற்போது 17 உள்ளன. தற்போது நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குகள் எனப் பெயரிடப்பட்டுள்ளன. அடுத்து வரும் தசாப்தங்களுக்கான அபிவிருத்திக்கான வழிகாட்டலை இவை கட்டமைக்கும்.

நாம் புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளில் (Millennium Development Goals-MDGs) இருந்து நிலையான அபிவிருத்தி இலக்குகளினை (Sustainable Development Goals-SDG) நோக்கிச் செல்லும் இந்த சூழ்நிலையில் பெண்களின் மனித உரிமைகள் மதிக்கப்படுவதனை, பாதுகாக்கப்படுவதனை மற்றும் பூர்த்தி செய்யப்படுவதனை நாம் உறுதி செய்தல் வேண்டும். இப்புத்தாயிரமாண்டின் ஆரம்பத்தில், பாலியல், இனவிருத்தி சுகாதாரம் மற்றும் உரிமைகள் தொடர்பில் பெண்களின் மற்றும் சிறுமிகளின் வாழ்க்கையை கட்டமைக்கும் இரண்டு அம்சங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்தல் வேண்டும். இலங்கை உள்ளடங்கலாக பல நாடுகளில் பருவமானவர்கள் மற்றும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல் என்ற முதலாவது, மிகவும் முக்கியமான குடிப்பரம்பியல் விடயமாகும். எனவே, இளைஞர்கள், குறிப்பாக சிறுமிகளின் மனித உரிமைகள் மற்றும் பாலியல், இனவிருத்தி சுகாதார மற்றும் உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட விசேட தேவைகளை அடையாளப்படுத்தும் வகையில் அனைத்து முறைமைகளும் அமைதல் வேண்டும். மிகவும் முக்கியமாக, தொடர்ச்சியாக பலவந்தமான கைதுகள், வன்முறை மற்றும் அரச, அரச சாராத செயற்பாட்டாளர்களின் பல்வகையான பாரபட்சத்திற்கு உள்ளாகி வரும் ஓரினச் சேர்க்கையாளர்கள், இருபாலுறவினர், மற்றும் திருநங்கைகள், பால்வினைத் தொழிலாளர்கள் போன்ற ஒதுக்கப்பட்ட மற்றும் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய குழுக்களின் மனித உரிமைகளை நாம் உறுதி செய்தல் வேண்டும். பாரபட்சமின்றி அனைத்து மக்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நாம் பணியாற்றுவதனை உறுதி செய்தல் வேண்டும்.

சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி மற்றும் தொழில்கள் தொடர்பில் அபிவிருத்தி முயற்சிகள் அனைத்திலும் அவசியம் கவனம் செலுத்த வேண்டும். ஆனால், பெண்கள் மற்றும் சிறுமியர்கள் வன்முறையினின்று பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து கவனம் செலுத்தப்படல் அவசியமாகும். சிறுவர்கள் மற்றும் சிறுவயதுத் திருமணங்கள் போன்ற விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும். பிரசவத்தின் போதான மரணங்களைக் குறைப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் பாலியல் இனவிருத்தி சுகாதார மற்றும் உரிமைகள் (Sexual Reproductive Health and Rights-SRHR) ஆனது கவனம் செலுத்தும் அதேவேளை, உலகளாவிய ரீதியில் மகப்பேற்று மரணத்திற்கு காரணமாக அமையும் பாதுகாப்பற்ற கருக்கலைப்பின் அதிக ஆபத்துக்கள் குறித்தும் இலங்கை தீவிர கவனம் செலுத்தல் வேண்டும். மறைமுகமாக அதிகளவில் நடைபெறும் கருக்கலைப்பு குறித்த உண்மையை ஏற்றுக் கொள்வதற்கு நாம் தயங்கி வருகின்றோம். கருக்கலைப்பினை குற்றமற்றதாக்குவதற்கான அரசியல் மற்றும் ஒழுங்குசார் தார்மீக முனைப்பு இன்றி நாம் இருக்கின்றோம்.

இளைஞர்களுக்கு முழுமையான பாலியல் கல்வியை வினைத்திறனுடன் அறிமுகப்படுத்துவதில் இருந்து நாம் ஒதுங்கியிருக்கின்றோம். இதன் மூலம் அவர்கள் தமது பாலியல் மற்றும் பாலியல் நடத்தை குறித்து அறிந்த மற்றும் பாதுகாப்பான தெரிவுகளை முன்னெடுக்க முடியும். பாலியல் வல்லுறவு, கட்டாயமாக உடன் வாழ்தலை முன்னிறுத்தல் மற்றும் கலாசார விழுமியங்களை காக்கின்றோம் என்ற பெயரில் வல்லுறவு புரிந்துவர்களுடன் திருமணம் செய்து வைத்தல் உள்ளடங்கலாக இளம் பெண்களை சிறு வயதில் திருமணம் செய்து கொள்ளுதல் மற்றும் பலவந்தமான திருமணத்தை நாம் கண்டிக்கின்றோம். அவை சிறுமியர்களின் "கௌரவம்" குறித்து தவறான அபிப்பிராயத்தை உருவாக்குகின்றது. பாலியல் வல்லுறவில் இருந்து ஆண்களை காப்பாற்றும் நோக்குடன் திருமண வயதை குறைத்தல் என்ற ஆபத்தான எண்ணக்கருவிற்கு இந்த செயல் வழிவகுத்துள்ளது. சிறு வயதில் பெண்கள் கர்ப்பம் தரித்தல் மற்றும் திருமணம் செய்தலின் விளைவுகள் குறித்து அது கவனம் செலுத்துவதாக இல்லை. அது அவர்களின் வாழ்க்கைச் சந்தர்ப்பங்களை கட்டுப்படுத்துவதுடன், கல்வியின்மையால் நிதிசார்ந்து தங்கியிருத்தல், சமூக அந்தஸ்தில் வீழ்ச்சியடைதல் மற்றும் உள்ளக வன்முறையின் அதிகரித்த தன்மை என பல்வேறு மனித உரிமை மீறல்களுக்கும் வழிவகுக்கின்றது.

மே 13ஆம் திகதி, ஊர்காவற்றுறை, புங்குடு தீவில் 18 வயது பாடசாலை சிறுமியான வித்யா சிவலோகநாதன் அவர்கள் கூட்டு வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். நன்கு மது அருந்திய பல வயதுப் பிரிவுக்கும் உட்பட்ட ஆண்கள் சிலரால் வித்யா கொடூரமாக வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இந்த கொடூர செயலானது அவரது கிராமத்திலும், யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் எழுச்சிக்கு காரணமாக அமைந்தது. ஆரம்பத்தில் தமிழ் பத்திரிகைகளிலும், தொடர்ந்து ஆங்கில மற்றும் சிங்களப் பத்திரிகைகளிலும் அறிக்கையிடப்பட்டமை, சந்தேகநபர்களின் கைதுக்கு வழிவகுத்தது. கடந்த காலங்களில் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்படாமையினால், குற்றம் சுமத்தப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டபோது, உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் மற்றும் துரித சட்ட நடைமுறைப்படுத்தல், குற்றம் சுமத்தல் மற்றும் நீதி வழங்கல் என்பவற்றை கோரி மக்கள் வீதிக்கு இறங்கினர். வித்யாவின் தாயார் மற்றும் சகோதரனை ஜனாதிபதி சந்தித்தார். தற்போது சந்தேகநபர்கள் மீது குற்ற வழக்கு விசாரணை பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீதிக்கான கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் சட்டத்தின் இந்தச் செயற்பாடும், உடனடியான விசாரணை நடவடிக்கைகளையும் நாம் வரவேற்கின்றோம். எவ்வாறாயினும், மக்கள் வன்முறைச் செயல்களில் இருந்து பாதுகாக்கப்படுவதனையும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு, அவர்களுக்கு கால தாமதமின்றி நீதி கிடைப்பதனையும் உறுதி செய்ய வேண்டிய அவர்களது பொறுப்புக்களையும் மகளிர் குழுக்கள் குறிப்பிட்டதைப் போன்று, சட்ட அமுலாக்கல் அங்கங்களும் பூர்த்தி செய்தல் வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு தொடர்ச்சியாக தண்டனை வழங்கப்படாமை என்ற சிக்கலான காரணியும், நாடு முழுவதிலும் நிறைந்துள்ளது.

வித்யா மீது முன்னெடுக்கப்பட்ட வல்லுறவும், கொலையும் ஒரு ஒதுக்கப்பட்ட சம்பவமல்ல. பொலிசாரின் ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்படாமையும் புதிய விடயமல்ல. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான எதிர்க்கட்சி ஆணைக்குழுவின் தலைவர், 2015ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கையில் பெண்களுக்கு எதிரான அதிக எண்ணிக்கையிலான பாலியல் வன்முறை குறித்து அறிக்கையிடப்பட்டுள்ளது. பாலியல் வல்லுறவு தொடர்பில் பதிவாகியுள்ள அதிகளவிலான சம்பவங்களில், வெகுசில சம்பவங்களில் மாத்திரமே குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், கிடைக்கக் கூடியதாகவுள்ள பொலிஸ் புள்ளிவிபரங்களுக்கு ஏற்ப 2009 முதல் 0·7 என்ற அடிப்படையிலே குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பாலியல் வல்லுறவு அல்லது முறையற்ற வல்லுறவு தொடர்பில் குற்றம் சுமத்தல் செயற்பாடு தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அல்லது பொலிசாரினாலும் எந்தவொரு தகவலையும் தயாரித்துக் கொடுக்க முடியாதுள்ளது. நீதவான் நீதிமன்றங்களினால் விசாரிக்கப்பட்டு மற்றும் மேல் நீதிமன்றத்தால் குற்றப்பதிவு செய்யப்பட்ட பாலியல் வல்லுறவு சம்பவங்கள் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் தேர்ச்சியினைக் கண்காணிப்பதற்கான பொறியமைப்புக்கள் எதனையும் சட்டமா அதிபர் திணைக்களமோ, பொலிசாரோ முன்னெடுக்கவில்லை. எனவே, சம்பவங்களின் நிலைமை குறித்தும், ஏன் சிறிதளவு குற்றச்சாட்டுக்கள் மாத்திரம் உள்ளன என்பது குறித்து எந்தவொரு உணர்வும் நம்மிடம் இல்லை.

பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட ஒரே வழிமுறையாக சட்டங்களை அமைத்தல் மற்றும் கொள்கை இடையீடுகள் என்பவற்றை நாம் வரவேற்கின்றோம். வன்முறையின்றி சுதந்திரமாக இருப்பதற்கான பெண்களின் உரிமைகளை மதித்தல், பாதுகாத்தல் மற்றும் பூர்த்தி செய்தலுக்கான அரசின் பொறுப்பினையும் நாம் வலியுறுத்துகின்றோம். நடைமுறைப்படுத்தல் சிக்கலானது என்பதுடன், அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் மற்றும் அரசியல் தலைமைத்துவத்தின் அனைத்து மட்டங்களில் உறுதியான நடவடிக்கை இதற்கு அவசியமாகும்.

பெண்கள் வன்முறை மற்றும் ஆபத்தின்றி சுதந்திரமாக வாழ்வதனை உறுதி செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு தனிநபர்கள் மற்றும் சமூகம் என இருதரப்பினருக்கும் உள்ளது. இலங்கையின் ஐந்து மாவட்டங்களில் கெயார் இன்டர்நெஷனலினால் முன்னெடுக்கப்பட்ட சுயாதீன ஆய்வில், தமது மனைவி அல்லது வாழ்க்கைத் துணைக்கு எதிரான உடல்சார்ந்த வன்முறையைப் பயன்படுத்துவதனை 24 வீதமான ஆண்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். 15 வீதமான ஆண்கள், நிர்ப்பந்திக்கப்பட்ட வல்லுறவினை, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது வாழ்க்கைத் துணையை வல்லுறவு செய்வதாக ஒத்துக் கொண்டனர். ஒரு தடவைக்கு மேல் நிர்ப்பந்திக்கப்பட்ட வல்லுறவில் ஈடுபட்டதாக 65 வீதமானவர்கள் ஒத்துக் கொண்டனர். 40 வீதமானவர்கள் 20 வயதுக்கு முன்னர் நிர்ப்பந்திக்கப்பட்ட வல்லுறவில் ஈடுபட்டுள்ளனர். முறையற்ற பாலியல் வல்லுறவு சம்பவங்கள் அதிக அளவில் இடம்பெறுவதாகவும் இலங்கையில் பதிவாகியுள்ளது. பெண்கள் ஆய்வுக்கான நிலையத்தின் அறிக்கையில் (2012), மலைக்க வைக்கும் வகையில் 10,000 சிறுமியர், தமது குடும்ப உறவினர்களால் பாலியல் துஷ்பிரயோகத்தை எதிர்கொள்வது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் பெரும்பாலானவை தந்தையால் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், அவற்றில் 1 வீதமானவை மாத்திரமே பதிவாகின்றது.

பெண்கள் மீதான நிர்ப்பந்திக்கப்பட்ட வன்முறைகளில் ஆண்கள் ஈடுபவடுதனை இந்த ஆய்வு முடிவுகள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறை சாதாரணமான விடயமாக இருக்கும், அதிக முக்கியத்துவம் வழங்கப்படும் அல்லது மறுக்கப்படும் நிகழ்வாக பரந்த சமூக-கலாசார சூழ்நிலையில் கவனம் செலுத்தப்படாததாக உள்ளது. ஆதரவு மற்றும் நீதியை நாடுவதற்கு இருவரினது முயற்சிகளையும் குறைமதிப்பிற்கும் உட்படுத்துகின்றது. ஆணாதிக்க மற்றும் பெண்களுக்கு எதிரான தொடர்ச்சியான வன்முறையை அனுமதிக்கும் ஆண்களில் சமபாலுறவு நடத்தை முறைகளை பொறுத்தருளும் சமூகம் என எம்மை சுயபரிசோதனை செய்து கொள்வது வரவேற்கப்படுவதுடன், சவாலுக்குட்படுத்தப்படல் வேண்டும். ஆண்கள் தமது நடவடிக்கைக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களாக இருத்தல் வேண்டும். வன்முறைக்கு எதிராக சகிப்புத் தன்மையற்ற அரசியல் மற்றும் சிவில் என இருதரப்பு சமூகம் எமக்கு அவசியமாகும். அதற்கான அரசியல் மற்றும் தார்மீக ஆர்வமும் எமக்கு இருத்தல் வேண்டும்.■

**குமுதினி சாமுவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் பாலியல் ரீதியாக சுதந்திரம் பெறும் இடம்

1. கிழக்குக் கடற்கரையில் சுனாமியினால் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் தமிழ் மற்றும் முஸ்லீம் பெண்களாகும். முதலாவது அலை வந்து உடலில் இருந்த உடையை அடித்துச் சென்றதும், அவர்கள் கடலில் இருந்து வெளியே ஓடவில்லை. மாறாக மாற்றுத் துணியைத் தேடி வீட்டிற்குள் ஓடினர். இரண்டாவது அலையில் அவர்கள் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டனர் அல்லது வீட்டிற்குள் நீர் நிறைந்து மூழ்கினர் அல்லது வீட்டிற்குள் அடைபட்டு உயிரிழந்தனர். இது நீண்ட நாட்களுக்கு முன்னர் நிகழ்ந்த சம்பவம் அல்ல. எமது நாட்டில் 11 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த சம்பவமாகும்.

2. “இரவானதும் வீதியில் செல்வதற்கோ, டிஸ்கோவுக்கோ அல்லது பாருக்குச் செல்வதற்கோ பெண்களுக்கு உரிமை இல்லை. பெண்களுக்கு உரித்தானது வீட்டு வேலை மாத்திரமே. குடும்பப் பெண்ணாக அதனை மாத்திரம் செய்து கொண்டு இருப்பதற்கு அவர்கள் பழகிக் கொள்ள வேண்டும். தப்பான வேலை செய்தால், தப்பான ஆடை அணிந்தால், துஷ்பிரயோகத்திற்கு இலக்கான தவறும் பெண்களைச் சார்ந்தது ஆகும்”

அது எமக்கு அயல்நாட்டைச் (இந்தியா) சேர்ந்த, கூட்டு வல்லுறவுக்கு இலக்கான 23 வயதான வைத்தியப் பீட மாணவி குறித்து அறிக்கையாகிய ஆவணப்படத்தில், குற்றத்தைப் புரிந்த ஒருவர் தெரிவித்த கருத்தாகும். இதுவும் மிகவும் அண்மையில் நடைபெற்ற சம்பவமாகும்.

இந்த சூழ்நிலையில் தான் நமக்கு பாலியல் சுதந்திரம், பாலியல் உரிமைகள் மற்றும் பெண்களின் ஏனைய பாலியல் அம்சங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்க வேண்டிய நிலை தோன்றுகின்றது.



http://infinitefiend.deviantart.com/art/Ascensation-268286637

உண்மையில் இப்பாலியல் சுதந்திரம் என்பது என்ன?

“பெண்கள் தமது சக்தி குறித்து முழுமையாக அறிந்து கொள்ளாது உள்ளனர். நூலில் கட்டி வைக்கப்பட்ட யானையைப் போல பெண்கள் தம்மை அடிமைகளாக்கிக் கொள்வதற்கு மிகவும் விருப்புடன் இருக்கும் ஆண்களுக்கும், அடிபணிந்து இருக்கின்றனர்” பெண்களின் பாலியல் சுதந்திரம் குறித்து 19ஆவது நூற்றாண்டில் கருத்து தெரிவித்த விக்டோரியா வுட்கல், முன்வைத்த கருத்து இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாலியல் சுதந்திரம் என்பது திருமணத்திற்குள் மற்றும் திருமணத்திற்கு வெளியே நிகழும் பால்வினைத் தொழிலை இல்லாதொழித்தல்.

- பாலியல் சுதந்திரம் என்பது தமது உடல் குறித்து தீர்மானம் எடுக்கக் கூடிய நிலைமைக்கு பெண்கள் வருதல்.

- பாலியல் சுதந்திரம் என்பது பலவந்தமாகக் கர்ப்பம் தரித்தல் மற்றும் தமக்குத் தேவையற்ற பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதனைத் தவிர்த்துக் கொள்வதற்கு பெண்களுக்கு உள்ள உரிமையாகும்.

- பாலியல் சுதந்திரம் என்பது ஆண் ஒருவருடன் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதில் இருந்து மீளல்.

இது விக்டோரியா வுட்கல் அவர்கள் குறிப்பிட்ட கருத்துகளாகும்.

நமக்கு மேலும் இந்தப் போராட்ட நிலைக்கு வருவதற்கு சக்தி இல்லையெனும் போது இப்பேச்சுவார்த்தை ஆரம்பித்தவுடன் சிலர், 'பெண்களே பெண்கள் குறித்து கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். விசேடமாக தாய்மார்தான் பெண் குழந்தைகளை கட்டுப்படுத்துகின்றனர். கட்டுப்பட்டு இருப்பதற்கு கற்பிக்கின்றனர்.' என கூறுவார்கள்.

அப்போது நாம் கூறவேண்டியது, "அதில் போட்டிருப்பது எமது பண்பாடு, பாரம்பரியம் மற்றும் ஒழுக்கம் போன்ற விடயங்கள்" என்பதாகும்.

நமக்கு விருப்பமான ஆடையை அணிவதற்கு, நமக்கு விருப்பமானவரின் கையைப் பற்றிக் கொள்வதற்கு, விருப்பமான நேரத்திற்கு வீதியில் நடமாடுவதற்கு, பூங்காவிற்குச் செல்வதற்கு, திரைப்படம் ஒன்றைப் பார்ப்பதற்கு, விருந்து அல்லது டிஸ்கோவிற்குச் செல்வதற்கு, நாம் விருப்பமாக இருப்போம் அல்லவா? எமக்கு விருப்பமானவரை, விரும்பிய நேரத்தில் முத்தமிடுவதற்கு, எமக்கு விருப்பமானவருடன் இருந்து சிறிது மருந்து அருந்துவதற்கு, ஆடைகளின்றி கடலில் குளிப்பதற்கு, உஷ்ண காலத்தில் சௌகரியமான சிறிய உடையை அணிந்து கொள்வதற்கு எமக்கு விருப்பமாக இருக்கும் அல்லவா?.... ஹூம்.. அதை நினைக்கும் போதே உள்ளத்தில் குதூகலம் தோன்றும்... முதலில் கூறிய விடயம் எதுவாக இருப்பினும்... கீழுள்ள விடயங்கள்...? அது நமக்கு பொருந்தாது. அவ்வளவுதான். அதில் இரண்டு கருத்து இல்லை. எனவே? இதில் எதுவும் சரிவராது என இன்னொருவர் கூறுவார். அங்குதான் பிரச்சினை எழுகின்றது. கட்டுப்பாடு இருப்பது எங்கே? அந்த அதிகாரம் யாரிடம் இருக்கிறது? தீர்மானம் எடுக்கும் உரிமை எங்கு இருக்கிறது? கலாசாரம், பண்பாடு என்பதன் வரைவிலக்கணம் என்ன?

இந்த கட்டுப்பாட்டுக்கு ஒன்றாக முயற்சிக்கும் ஆண் கூறுவதாவது, "எமக்குத் தானே தெரியும் ஆண்களின் உண்மையான நிலை" என்பார். அந்தப் பெண்ணுக்கு வேண்டுமாயின், பாலியல் ஒழுக்கம் என்ற பட்டத்தை இடுவதற்கு எம்மால் இயலாமல் இல்லை.

**எவ்வாறாயினும், நாம் விரும்பும் ஆண்களே எமது உலகம் என பெண்களாகிய நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். அவர் எத்தனை முட்டாளாக, மோசமானவராக இருந்தாலும், நாம் திரும்பிச் சென்று அவர்களுடனேயே ஒட்டிக் கொள்கின்றோம். அந்த உடலிலேயே சேர்கின்றோம். நமக்குத் தேவையானவாறு அவரை மாற்ற முயற்சிக்கின்றோம். இறுதியில் எல்லாவற்றையும் விட்டு, அவர் இருக்கும் வகையில், அவர் உலகை பார்க்கும் வகையில், அவர் கோரும் வகையில் வாழ்க்கையை வாழ்வதற்கு மனதை மாற்றிக் கொள்கின்றோம். "ஏன் அப்படி இருக்கின்றீர்கள்" என யாரும் கேட்டால், "எமக்கு பாதுகாப்பு அவசியம்" எனக் கூறுவோம். பிள்ளைகள் இருப்பின் "பிள்ளைக்கு தந்தை வேண்டும்" எனக் கூறுவோம்.**

குடும்ப வாழ்க்கையை முன்னெடுக்கும், இலங்கையில் திருமணம் புரிந்த பெண்களில் பெருமளவிலானோருக்குத் தமக்கும் உணர்ச்சித் துடிப்பு இருக்கக் கூடும் எனத் தெரியாது (கல்யாணம் செய்யாத பலர் இறக்கும் வரை கன்னியாகும். அதனை இல்லாது செய்வதற்கு பிரம்மா, சுபநேரத்தில் தம்மை அடிமையாக்க வரும் வரை, வெள்ளை புடவையுடன் காத்துக் கொண்டிருப்பர்). அவ்வாறான விடயத்தை ஆண்கள் நம்பமாட்டார்கள். அது ஆண்களின் செயல். ஆண்களின் உரிமை. அது மாத்திரமல்ல, பாலியல் தேவை குறித்து மற்றும் பாலியல் தன்மை குறித்து கதைக்கும் பெண்கள், இலங்கையைப் பொறுத்தவரையில் நாகரீகமற்றவர்களாகக் கருதப்படுகின்றனர்.

பால்நிலை சமத்துவம், அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம், பாராளுமன்றத்தில் பெண்களின் சதவீதம், பெண்களின் உழைப்பு, பெண் உரிமைகள்.... இவ்வாறான தலைப்புக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைப்பதற்கு பயமின்றி பலர் வருவார்கள். இந்த ஆண்களின் உலகில், ஆண்களுக்கு அடிபணிந்த, அடிமையான உடலுக்கு, இல்லையெனில் ஆண்களால் பரவலுக்கு வழங்கப்படும் மற்றுமொரு சந்தர்ப்பம் மாத்திரமாகும் என்பது அவர்கள் மறந்துவிடும் விடயம்தான்.

பாலியல், பாலியல் சுதந்திரம் குறித்து கதைப்பவர்கள் திடீரென இந்த சமூகத்தில் இருந்து மறைந்து போவதில்லை. 'நாம் வித்தியாசமானவர்கள்' என பாலியல் அம்சம் குறித்து பயமின்றி வெளிப்பட்டு இருப்பதற்கு விருப்பமானவர்களை சந்திக்காமல் இருப்பதும் இல்லை. ஆனால் அந்த உரையாடல்கள் மற்றும் கருத்துக்களின் அடிப்படைத் தேவையை ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், அவற்றுக்கான எல்லையும் ஆண்கள் மற்றும் ஆண்களின் உலகிற்குள் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதுமாகும். பெண்ணாயிருந்தால், அந்த ஆண்களின் உலகில் 'சிறந்த பெண்' என்ற கிரீடத்தை அணிந்து கொள்வதாகும்.

பெரும்பாலும் இந்த விடயங்களை கதைப்பதற்கு ஆண்கள் முன்வருவது, பெண்களுடன் பொறுப்புடன், உறுதியுடன், அர்ப்பணிப்புடன் உறங்குவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காகும். தேவை பூர்த்தியானதும், அல்லது சலித்துப் போனால், தம்முடன் பாலியல் சுதந்திரத்துடன் நடந்து கொண்ட பெண்ணை பாலியல் அகௌரவம் நிறைந்த, பாலியல் ஓடுகாலித் தன்மை கொண்டவளாகக் கொண்டு சமூகத்திற்குள் தனிமைப்படுத்தல், கைவிட்டுச் செல்லல் என்பன இடம்பெறுகின்றது. அவ்வாறான பெண்களுக்கு இந்த சமூகத்தில் கிடைப்பது ஒன்று தனியாக வாழ்க்கையை எதிர்கொள்வதற்கான பொருளாதார, சமூக பலம், பின்புலம் இருக்க வேண்டும். இல்லையெனில், சமூகத்தின் பழிச்சொல்லுக்கு இலக்காக நேரிடும். இல்லையெனில், அவ்வாறான உளச்சிக்கலை எதிர்கொள்வதற்கு உதவி வழங்கும் நபர்களை கண்டறிவது இலகுவானது இல்லை. அதன் மத்தியல் குழந்தையும் இருந்தால் பெண்ணின் நிலை சிக்கல் நிறைந்ததாக அமையும்.

"சுதந்திரம்" குறித்து நிலவும் சூழ்நிலைக்கு வார்த்தையால் சவால் விடுவதுடன் நின்றுவிடாது, உண்மையான நிலைமையை உலகின் முன்னால் நிற்க வைப்பதன் மூலம், தமக்குள் ஏற்படும் மாற்றம் முதல், பதிவு செய்தவர்கள், வரலாற்றில் மாத்திரமல்ல நிகழ்காலத்திலும் உள்ளனர். அவர்கள் தான் வரலாறு முழுவதிலும் நிறைந்திருந்தனர்.

குறிப்பிட்ட காலம் வரை கல்லாகிக் கிடந்த நிலைமையை உடைத்தனர். அந்த மாற்றத்தை, புதிய பாதையை உருவாக்கியவர்களில் ஒருவர் கௌதம புத்தர்.

"அவர் எனக்கு அவ்வாறு செய்தார், இவ்வாறு செய்தார், எனக் கூறுவதில் அர்த்தம் இல்லை. நமக்குள் நாமே சுதந்திரம் அடைய வேண்டும். ஏனையோர் மீது குற்றம் சுமத்திப் பார்த்துக் கொண்டிருப்பதால், பழி மாத்திரமே எஞ்சும். வேறு எந்த நலனோ அல்லது புரட்சியோ அதன் மூலம் நிகழாது" எனக் கூறினார்.

**பாலியல், பாலியல் சுதந்திரம் குறித்துக் கதைப்பவர்கள் திடீரென இந்த சமூகத்தில் இருந்து மறைந்து போவதில்லை. "நாம் வித்தியாசமானவர்கள்" என பாலியல் அம்சம் குறித்துப் பயமின்றி வெளிப்பட்டு இருப்பதற்கு விருப்பமானவர்களை சந்திக்காமல் இருப்பதும் இல்லை.**

"அவர்கள் அறியாமல் செய்யும் பிழைகளை மன்னித்து, எம்மை சொர்க்கம் செல்லுமாறு" இயேசு கூறினார். அவர் கூறியது சுதந்திரமான உலகத்தை நோக்கித், தமக்குள் சுதந்திரம் அடைவதற்கு அவர் குறிப்பிட்டார். எமது காலத்திலும் புரட்சிகள் செய்தவர்கள் உள்ளனர். அவர்களில் ஒரு பெண்மணி தான் அமெரிக்காவைச் சேர்ந்த மாயா அஞ்சலோ. அவர் ஓர் நாட்டிற்கோ அல்லது ஓர் அரசாங்கத்திற்கோ சொந்தமானவர் அல்ல. முழு அண்டத்திற்கும் சொந்தமானவர். பெண்களை ஆண்கள் சமமாக நடத்தாத உலகை மாத்திரம் மாயா எதிர்கொள்ளவில்லை, கறுப்பாக இருப்பதனால் கீழ்மையாக நடத்தும் வெள்ளை உலகத்தையும், கறுப்பு என்பதால் அடிமைப்படுத்தும் உலகத்தையும், பெண்களை அடிமையாக நடத்தும் உலகத்தையும் அவர் எதிர்கொண்டார். அந்த உலகில் பெண்களுக்கு உரித்தாக இருந்தது ஆடைகளை துவைத்தலும், உணவு தயாரித்தலும் மற்றும் உணவு மேசையைத் தயார் செய்வதும், ஆடை தைப்பதும், அலங்காரம் செய்வதும், குழந்தைகளை வளர்ப்பதும், பாலியல் பொருளாக பயன்படுத்தப்படுவதும் என்பனவாகும்.

இந்த உலகில் அச்சமற்ற பெண்ணாக மாயா இருக்கின்றார். அவர் தமது வாழ்க்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு காலகட்டத்தில் பஸ் நடத்துனராக, நடிகராக, கவிஞராக, பேச்சாளராக, நாடகக் கலைஞராக, கல்வி செயற்பாட்டாளராக, சமூக மற்றும் அரசியல் செயற்பாட்டாளராக, பத்திரிகை மற்றும் சஞ்சிகை எழுத்தாளராக, பல்கலைக்கழக விரிவுரையாளராக, விருதுபெற்ற பேராசிரியாக மாத்திரமல்லாது, தாயாகவும் பல பாத்திரங்களை வகித்துள்ளார். இத்தொழில்கள் அனைத்திலுமே உலகின் மீதான அவரது காதலே இருந்தது. அவர் அதில் பெருமை கொண்டார். அவரைப்பற்றி அறிந்த அனைவருமே அதன் காரணமாக பெருமை கொள்கின்றனர்.

உங்களுடைய கசப்பான, திரிக்கப்பட்ட பொய்களால்

வரலாற்றில் என்னை கீழ்மையாக நீங்கள் எழுதலாம்,

அழுக்கில் இட்டு நீங்கள் என்னை மிதிக்கலாம்,

ஆனால், புழுதியைப் போல நான் எழுந்து வருவேன்.

என்னுடைய மரியாதை கொடுக்காத தன்மை உங்களுக்கு பதட்டம் தருகிறதா?

ஏன் உங்களை சோர்வு சூழ்ந்துள்ளது?

என்னுடைய வீட்டின் அறையில் இறைக்கும்,

எண்ணெய் கிணறுகளின் உரிமையாளர் போல் நான் நடந்து கொள்வதாலா,

சந்திரன்களையும், சூரியன்களையும் போல,

அலைகளின் நிச்சயத்தன்மையுடன்,

நம்பிக்கை அதிகம் முளைத்தெழ

நான் எழுந்து வருவேன்.

என மாயா எதிரிகளை எதிர்கொண்டார். ஏனைய ஊடகங்களில் மாத்திரமன்றி, பால் அடிப்படையிலும் அவர் சுதந்திரத்திற்காக போராடினார்.

சிறு வயதில் அவருக்கு நேர்ந்த அவலத்தின் காரணமாக அவர் அச்சமின்றி இருந்தார். 'எட்டு வயதுச் சிறுமி, தமது தாயின் காதலரால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார். அந்த அதிர்ச்சியினால் ஐந்து வருடங்கள் பேச முடியாது இருந்துள்ளார். எத்தனை கொடூரச் செயல்? இதனால் ஆகப்போவது என்ன?' எமது சமூகம் இந்த சம்பவத்தை இவ்வாறே வாசித்தது.

ஆனால், மாயாவின் தாய், தாயின் தாய், தந்தை, சகோதரன், மாமனார் ஆகியோர் அவ்வாறு செய்யவில்லை. அவருக்கு தீங்கு நேர்ந்தது என்ற கருத்தினை அவரது சிறு மூளையில் பதிவதற்கு இடமளிக்கவில்லை. சிறை செல்லாது, வெளியில் வந்த குற்றவாளியினை மாமனார் இணைந்து கொலை செய்தமையே அவருக்கு வேதனையை அளித்தது. அதனாலேயே அவர் அமைதி கொண்டார்.

17 வயதில் மாயாவுக்கு மகன் ஒருவர் பிறக்கின்றார். உயிரிழக்கும் வரை தமக்கு கிடைத்த பெரும் சொத்தாக மாயா அவரை கருதினார். ஆனால் குறித்த கர்ப்பம் தரித்தல், தமது வயதில் ஏனைய பெண்களைப் போல் பாலியல் சார்ந்து செயற்திறனுடன் இல்லாமையினால், தாம் ஒரு பெண் என்பதனை தமக்கு உறுதி செய்து கொள்வதற்காக, நாளாந்தம் சந்திக்கும் பேச்சுத்திறன் அற்றவருடன் உறவு கொண்டமையின் பிரதிபலனாக கிடைத்ததாகும். அதை அறிந்ததும், அவருடை தாய் அவரிடம் வினவியது "அவருக்கு உன்னை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா?" என்பதாகும். "இல்லை" என்பதே பதிலாக இருந்தது. அதற்கு அவர் கூறியது, வாழ்க்கையை இழக்க வேண்டியதில்லை, குழந்தையை வளர்ப்போம் எனக் கூறியுள்ளார். நாமாக இருந்தால்...

கறுப்பு அமெரிக்க பெண் எழுத்தாளர்கள் பெரும்பாலானோர், பால்நிலை குறித்து, உடலுறவு குறித்து, சுயஇன்பம் குறித்து, பாலியல் தேவை குறித்து வெளிப்படையாக எழுதியுள்ளனர். அவற்றின் சிறப்புத் தன்மையாக இருப்பது, ஆண்கள் உலகின் தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் எழுதப்படாமையாகும். அவை தமது சமூகத்தின் பெண்களின் அடையாளத்தை வெளிப்படுத்தும் அறிக்கைகளாகும். அவர்களில் பலர் 'Feminism' பேசுபவர்கள் அன்றி, 'Womanism' பேசுபவர்களாக இருந்தனர். அலிஸ் வோக்கர் என்ற பெண் எழுத்தாளர் 'Feminism' என்பது ஆண்களின் உலகிற்குள் இன்னொருவராக இருப்பது என்றும், 'Womanism' என்பது எந்தவொரு பண்பாட்டிலும் பூமியை பிளந்து வெளியில் வந்து பெண்கள் போராடுதல் என்றும் விளக்குகின்றார்.

எவ்வாறாயினும், இறுதியில் தமக்குள் சக்தியுடன், தாமே தம்மை நடத்துபவர் என்பதனை அறிந்து கொண்டு, விழிப்புடன் அனுபவிக்கக் கூடிய சுதந்திரமே, பாலியல் அடிப்படையில் நாம் சுதந்திரம் பெறும் சந்தர்ப்பமாகும்.■

**குமாரி குமாரகமகே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணினது வகிபாகம்



http://amimcoach.com/?p=56

**இன்றைய காலகட்டத்தை எடுத்துக் கொண்டால் ஆண் முன்னேற்ற வளர்ச்சியிலும் பார்க்க பெண் முன்னேற்ற வளர்ச்சி அதிகரித்துச் செல்வதைக் காணலாம். சகல துறைகளிலும் பெண்களது ஆளுமை வெளிக்காட்டப்படுகின்றது. பெண்களுக்கான வேலை வாய்ப்புக்கள் அதிகரித்துச் செல்வதைக் காணலாம்.**

பெண் சமூகத்தில் இன்றியமையாத ஓர் அங்கமாக விளங்குகின்றாள். அதற்கான காரணம் பற்றிப் பார்க்கும் போது ஆரம்ப கால கட்டத்தில் தாய்வழி சமூகமே தலைமைத்துவம் வகித்து வந்துள்ளது. தாயாட்சி குடும்ப ஆட்சியாகவே இருந்து வந்துள்ளது. தனிப்பட்டவர்களுக்கு சொத்து இருக்கவில்லை. சொத்துக்கள் எனும் போது நிலம் போன்ற அசைவற்ற பொருட்கள் பெண்களுக்கே சொந்தமாக இருந்தன. அம்பு, வில் போன்ற அசைவுள்ள பொருட்களே ஆடவருக்கு சொந்தமாக இருந்தன. தெய்வங்கள் வரிசையை எடுத்து நோக்கினாலும் தாய்க் கடவுள் பற்றிய கருத்துக்கள் முக்கியம் பெற்றுள்ளன. எல்லா அதிகாரமும் உடையவளாக தாய்த் தெய்வத்தை வழிபட்டனர். அவளுக்கு விலங்குகளுக்குள் வீரமுடையதான சிங்கம் வாகனமாக்கப்பட்டது. அவளே வீரத் தெய்வம் கொற்றவை எனப்பட்டாள்.

வரலாறுக்கு எட்டக் கூடிய காலம் முதல் பெண் வரலாற்றின் பகுதியாக இருந்து வருகின்றாள். பெண்ணே வரலாற்றுக்கு ஆதாரமாக உள்ளவள். ஆயினும் அவளது வரலாறு இருளடைந்துள்ளது. அரசியர்,கட்டழகியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை மாதர், கடவுள் பக்தைகள் போன்ற பெண்கள் சிலரே வரலாறுகளில் அங்கும் இங்கும் தோன்றுகின்றார்கள். மற்றைய பெண் சமூகத்தினரின் வாழ்க்கைச் செய்திகள் காலம் காலமாக இன்னும் இருளில் மறைந்து கிடக்கின்றன. நமக்கு முற்பட்ட மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்று நமக்குத் தெரிகின்றது. காலம் தோறும் எவ்வாறு பொருளாதார மாறுதல்கள் உண்டாகின்றன: எண்ணங்கள், கல்வி முறை, போர், ஒழுங்கு, ஆட்சி முறை போல்வன வெவ்வேறு காலங்களில் எவ்வாறு இருந்தன என்பது பற்றி அறிகின்றோம்.. இவ்வகை மாற்றங்கள் உண்டாகின்ற காலங்களில் வீட்டில் வாழும் பெண்ணின் நிலை எவ்வாறிருந்தது என்பதை நாம் ஊகங்களினால் மாத்திரம் அறிய முடிகின்றது. ஆண்கள் - பெண்களின் தொழில் முறை, பழக்க வழக்கங்கள், வாணிகத்தின் பொருட்டு அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் போல்வன இக்காலச் சரித்திரக்காரர்களால் தெளிவுறுத்தப்பட்டுள்ளன. ஆனால் பெண்கள் முன்னேற்ற வளர்ச்சி பற்றிய செய்திகள் உய்த்தறிதல் அளவில் இருந்து வருகின்றன.

ஆண் - பெண் இருபாலாருடைய வரலாறுகளையும் ஆராயும் போது நான்கு தன்மைகள் ஆடவரிடமிருந்து பெண்களைப் பிரித்துக் காட்டுகின்றன. அவை: பால்வேறுபாடு, போர்த் தொழில், பொருளாதார நிலை, கருத்துக்கள் என்பன. இவ் வேறுபாடுகள் ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு அறிய முடியாத வெவ்வேறு தன்மைகளுடையன: ஆனால் இவை பெண்களின் நிலைகளைத் தீர்மானிக்கும் கேள்விகளாக அமைந்துள்ளன. பொருளாதார நிலை பெண்களை விடுதலை அடையச் செய்கிறது. இதிலும் விதி விலக்குகள் பல உண்டு. பெண்கள் விடுதலை அடைதல் ஆண்களுக்குப் பயத்தைத் தோற்றுவிக்கிறது. உலகம் முழுவதும் பெண்கள் குறைந்த கூலிக்கு வேலை வாங்கப்படுகிறார்கள். எல்லா இடங்களிலும் பாலியல் ரீதியில் சுரண்டப்படுகிறார்கள். பால்நிலைப் பாகுபடுத்தலின் அடிப்படையில் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். ஆனால் தொழில் புரிவதற்க்கு இன்றியமையாதவர்களாக இருக்கின்றார்கள். இன்று வேலை செய்யும் பெண்ணொருத்தி கணவனுடைய பொருளாதார சுமையையும், தன்னடைய பொருளாதார சுமையையும் சுமக்க வேண்டியவளாக உள்ளாள்.

இன்றைய காலகட்டத்தை எடுத்துக் கொண்டால் ஆண் முன்னேற்ற வளர்ச்சியிலும் பார்க்க பெண் முன்னேற்ற வளர்ச்சி அதிகரித்துச் செல்வதைக் காணலாம். சகல துறைகளிலும் பெண்களது ஆளுமை வெளிக்காட்டப்படுகின்றது. பெண்களுக்கான வேலை வாய்ப்புக்கள் அதிகரித்துச் செல்வதைக் காணலாம். அரசியல், சமூகப் பணிகள், கல்வி, விளையாட்டுத்துறை, இலக்கியம், பொருளாதாரம், ஊடகம், நாட்டின் பாதுகாப்புத் துறை, சினிமா, விளம்பரம் என பெண்களின் தலைமைத்துவமும் பிரவேசமும் நாளுக்கு நாள் பல்கிப் பெருகிச் செல்கின்றன. பெண்களின் ஈடுபாடு மட்டுப்படுத்தப்படவில்லை. பெரும்பாலும் அவர்களது வருகை மற்றும் செயற்பாடு என்பன ஊக்குவிக்கப்படுகின்றது என்றே கூற வேண்டும். இதன் காரணமாக பெண்கள் தொடர்பாக காலம் காலமாகக் கூறப்பட்டுவந்த மரபு சார்ந்த மூடநம்பிக்கைகள், ஐதீகங்கள் போன்றன உடைத்தெறியப்படுகின்றன.

குடும்ப நிறுவனமொன்றை எடுத்துக் கொண்டால் அங்கே பெண் தலைமைத்துவத்தின் அவசியத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள முடியும். குடும்பத்தை நிர்வகித்தல் அதாவது வரவு செலவுகளுக்கு ஏற்ப குடும்பச் செலவுகளை தீர்மானித்தல் மற்றும் கொண்டு நடத்துகின்ற திறமை பெரும்பாலும் பெண்களாலேயே முடிகின்றது. முன்னைய காலங்கள் போலன்றி தற்காலத்தில் தோன்றியுள்ள பொருளாதாரச் சிக்கல் காரணமாக ஓர் குடும்பத்தில் ஆண் - பெண் இருவரும் தொழில் புரிய வேண்டிய கட்டாயம் தோன்றியுள்ளது. அது மட்டுமன்றி குடும்பத்தில் உள்ள உறவுகளை மென்மையாகக் கையாளுகின்ற உளவியல் பாங்கான திறமையும் பெண்களிடம் அதிகம் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே பெண்களால் குடும்பத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லவும் கட்டியெழுப்பவும் முடிகின்றது. அத்தோடு தன் கணவன், பிள்ளைகளின் ஆளுமைகளை வளர்க்கவும் பெண் அவசியமாகின்றாள். இதனை அடியொற்றியே "ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஓர் பெண் இருக்கிறாள்" என்ற வழக்கு கூறப்பட்டு வருகின்றது.

அதாவது ஓர் ஆணின் செயற்பாடுகள், குறிக்கோள், சிந்தனை போன்றவற்றிற்க்கு உந்து சக்தியாக பெண் விளங்குகிறாள் என்பதை இதனூடாக விளங்கிக் கொள்ளலாம். இவ்வாறு குடும்ப நிறுவனத்துள் அன்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம், கட்டுப்பாடு, கடமை போன்றவற்றை வலியுறுத்தி அங்கத்தவர்களின் ஆளுமை, சிறந்த பண்புகள் வளர பெண்ணினது பங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. ஆண் ஓர் உறுப்பினராக அங்கு செயற்படுவாரே தவிர பெண்ணின் வகி பங்கு அதிகம் என்றே கூற வேண்டும்.

இன்று எமது சமூகத்தில் திருமணம் குடும்பம் என்னும் பந்தத்தில் ஒரு சராசரி ஆண் பெண்ணிடமிருந்து பல விடயங்களை எதிர்பார்க்கின்றான். அந்தவகையில் சீதனம் (வீடு, நகை, பணம்), அழகு, சமையல் செய்யக்கூடியவள், வீட்டைப் பொறுப்பாகப் பராமரிக்கக் கூடியவள், சொத்துக்களைப் பாதுகாப்பவள், ஆணுக்கு வாரிசைப் பெற்றுக் கொடுக்கக் கூடியவள், பொருளாதார ரீதியாக வருமானத்தைப் பெற்றுத் தரக்கூடியவள் என பல அம்சங்களை எதிர்பார்க்கின்றான். அத்துடன் சாதி, சமயம், குடும்ப அந்தஸ்து போன்றனவும் கருத்திற் கொள்ளப்படுகின்றது. அதேநேரத்தில் ஒரு பெண்ணின் எதிர்பார்ப்புக்கள் கருத்திற் கொள்ளப்படுவதில்லை. பெண்கள் தமது விருப்பத்தைத் தெரிவிக்கும் போது அவளை இச்சமூகம் கலாசாரக் கட்டுக்குள் புறந்தள்ளி விடுகின்றது.

ஆணாதிக்க சமூகம் பெண்கள் வீட்டோடு இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை முன்பு விதித்தது. அதனால் பெண் முழுதாகவே பொருளாதார பலம் அற்றவளாகவும் ஆணில் தங்கியிருப்பவளாகவும் காணப்பட்டாள். ஆனால் இன்று விஞ்ஞான வளர்ச்சியாலும் புதிய புதிய மாற்றங்களாலும் கல்வி வாய்ப்பினைப் பெண்கள் பெற்றுப் பொருளாதார பலத்தைப் பெற்றுக் கொண்டு வந்தாலும் ஒப்பீட்டளவில் பொருளாதார பலம் அற்றவளாகவே கருதப்படுகின்றனர். கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றைப் பெற்றுக் கொண்டாலும் பெண்கள் கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்பது தொடர்ந்தும் நிலவி வருகின்றது. பொருளாதார பலம் எதுவுமற்ற ஒருவரைத் தமது துணைவராக தெரிவு செய்து குடும்ப வருமானத்தை பெண்களே தேடுபவளாக இருக்கும் பட்சத்தில் கூடக் குடும்பத்தில் பெண்ணின் கீழ்ப்படிவு என்பது கட்டாயமாக்கப்படுகின்றது.

பொதுவாக குடும்ப வாழ்வில் பெண்கள் பெருமளவு பொருளாதார பங்களிப்பினைச் செய்து வந்தாலும் கூட குறைவாகவே மதிக்கப்படுகின்றார்கள். பெண்ணினுடைய பொருளாதார பாத்திரம் குறைவாக மதிப்பிடப்படுவதுடன் பெண்களை வீட்டுக்குரியவளாகவே சமூக கருத்தியல்கள் அவதானிக்கின்றது. ஒரு பெண் செய்யும் அதேதொழிலையே ஒரு ஆண் செய்து வருமானம் பெற்று வரும் வேளையில் திருமணத்தின் போது சீதனம், வீடு, நகை என பெண்களிடமிருந்து பலவாறானவற்றை ஆண்கள் எதிர்பார்க்கின்றனர். பெரும்பாலான ஆண்கள் தமது வருமானத்தில் குறிப்பிடத்தக்க பகுதியை குடி, போதை, புகைப்பிடித்தல், சீட்டாடுதல் போன்ற பல பல தீய வழிகளில் செலவு செய்து வருவதோடு குறிப்பிட்டதொரு தொகையையே குடும்பச் செலவிற்காக ஒதுக்குகின்றனர். ஆனால் பெண்கள் உழைப்பில் ஈடுபடுபவர்களாயின் தமது வருமானத்தை அதிகளவில் குடும்பத் தேவைகளை நிறைவேற்றவே செலவிடுகின்றனர். எனவே, பெண்கள் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள்.

பெண்களின் செயற்பாடுகள் பற்றி குடும்பத்திற்கு வெளியே பார்ப்போமானால் அரசியல், சமூகம், கல்வி, பொருளாதாரம், ஆராய்சி, விளையாட்டுப் போன்ற சகல துறைகளிலும் பெண்களின் பங்குபற்றல் இடம்பெறுவது மட்டுமன்றி சாதனைகளும் நிகழ்த்தப்படுகின்றன. இன்று சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்ற பல தொழில்களின் தோற்றத்திற்குப் பெண்களே காரணமாக உள்ளனர். பெண்களின் சுதந்திரம் தொடர்பாக காணப்பட்ட இறுக்கமான சூழ்நிலையில் கூட தன்மை வெளிப்படுத்தி பெண்கள் உரிமைகள் தொடர்பாக பலர் போராடியுள்ளனர். இவ்வாறான பெண்ணின் செயற்பாடுகளை, முன்னேற்றத்தை விரும்பாத பழமைவாதிகளும் சமூகத்தில் காணப்படுகின்றனர். அவர்கள் பெண்ணின் இயல்பான நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றனர். ஆனால் பெண்கள் தங்கள் மனதில் உறுதியுடன் தமது முன்னேற்றத்தையும் இலக்கையும் கருத்தில் கொண்டு தன்நம்பிக்கை மற்றும் புரிதலுடன் முன்னோக்கிச் செல்லும் போது தடைகள் தகர்த்தெரியப்படுவது நிச்சயம்.■

**அமுதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்த்தமிழக்கும் ஓங்கார முக்கோணம்

தாயெனப் போற்றியும்
பேயெனத் தூற்றியும்
தாங்கள் நினைத்ததை
நிலைநிறுத்தியும்
காலங்காலமாய்
கடத்தினர் நாட்களை....

மஞ்சள் குங்குமம்
மங்கலக் காப்புடன்
சேலை உடுத்திய
லிங்கதாரிகள்
அம்மனாய் இன்னும்
ஆலயங்களில்......

கரையுடைத்துப் பாயும்
வெள்ளம் போலவும்
புகை கிளப்பிப் போகும்
ரொக்கெற் போலவும்
பகை கிளப்பிக் காய்கிறது
மனம்........

உயிர் தரும் வழியை
உடலியல் உணர்வை
உணராமனிதரின் செய்கையால்
ஓங்காரமுக்கோணமும்
ஓம் நமசிவாயவும்
அர்த்தமற்றுப் போனது.

உடுக்கடிக்கவும்
பறையடிக்கவும்
ஓங்காரமுக்கோணம்
உரத்துப் பாடவும்
அவர்களே இன்னமும்
ஆலயங்களில்...

இன்னும் இன்னும்
மாதவிலக்கு...
துடக்கு...
தெய்வப் பழி...
சாக்கடைச் சமூகம்.

சேரலாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆணாதிக்க சமூகமானது தமது அடக்குமுறைக்கு இசைவாக பல செயற்பாடுகளில் இறங்கியது. பழமொழிகளையும் பாரம்பரியக் கதைகளையும் தமக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொண்டு பெண்ணை அடிமைப்படுத்த முயற்சித்தது.**

# பெண்ணும் அவளது உடலும்

இயற்கை சார்ந்த உயிரியல் அமைப்பில் மக்கள் உடலமைப்பு ரீதியாக ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ பிறந்துள்ளார்கள் என்பது உயிரியல் உண்மை. ஆனால் இந்த உயிரியல் வேறுபாடே சமூகத்தில் வேறுபாட்டை ஏற்படுத்தியிருக்கின்றது. இன்றும் ஏற்படுத்தி வருகின்றது. ஆண்-பெண் பாகுபாடு என்பது விதிவசமானது. சமூகமானது ஆணை பாதுகாவலனாகவும் வலிமை பொருந்தியவனாகவும் சித்தரித்து அவனை உயர்நிலையில் வைக்கின்றது. ஆனால் பெண்ணோ பேதை. அவளை இரக்கத்திற்கும் அனுதாபத்திற்கும் கருதி அவளை இழிநிலைக்குத் தள்ளுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

ஆண்வழிச் சமூகமானது ஆரம்பத்தில் பெண்களை அடக்கி ஒடுக்கியதன் மூலம் ஆணாதிக்க கலாசாரத்தினை நிலைநிறுத்தியது. உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பெண்கள் ஆண்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர். அதன் முதற்கட்டமாக உலகில் பெண்கள் போகப்பொருட்களாக ஆண்களால் கணிக்கப்பட்டனர். தன்னலமின்மை தியாகம் பொறுமை போன்ற சில குணாம்சங்கள பெண்களிடம் இயல்பாகவே காணப்படுவதனால் ஆண்கள் அதை சாதகமாகப் பயன்படுத்தித் தமது நிலைப்பாட்டை நிலைநிறுத்தினர். அந்தவகையில் பெண்ணானவள் மனையைக் குறிக்கும் பெயரால் மனைவியானாள். கணவனோ கணங்களின் தலைவன் என்பதில் இருந்து கணவனானான். ஆண் சமூகத்தின் தலைவன் ஆக, பெண்ணோ வீட்டின் வேலைக்காரி ஆனாள்.



பிள்ளைகளைப் பெறுதல் அவர்களை வளர்த்தல் உணவு தயாரித்தல் வீட்டையும் வீட்டுச் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருத்தல் ஒவ்வொரு வழியிலும் கணவனுக்கு ஒத்தாசையாக இருத்தல் முதலியன திருமணமான ஒரு பெண்ணின் கடமைகளாக ஆண் சமூகத்தால் வரையறுக்கப்படுகின்றது. ஒரு பெண்ணின் வாழ்க்கையின் மெய்யான பணி கணவனுக்கும் குழந்தைகளுக்கும் பணி செய்தல் என்று ஆணாதிக்கம் கருதுகின்றது. பெண்களுக்கான வரையறைகளை வகுத்த ஆண் வீட்டில் ஆட்சியின் கடிவாளத்தைக் கைப்பற்றினான். பெண்ணோ இழிநிலைக்குத் தள்ளப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டாள். அவளின் வாழ்வு வீட்டுக்குள்ளேயே அமுங்கிவிடுகின்றது. அவளின் உரிமைகள், வளர்ச்சி என்பன திட்டமிட்டு ஆணாதிக்க சமூகத்தால் நசுக்கப்படுகின்றன.

இவ்வாறு ஆணின் அடக்குமுறைக்கு உள்ளான பெண் அவனின் உடலின்ப வேட்கைக்கு கருவியானாள். இதனால் கேவலம் குழந்தைகளைப் பெறுகின்ற சாதனமாக ஆகி விட்டாள். இது பெண்ணின் நிலையை மேலும் கீழ் இறக்குவதாக அமைகின்றது. பெண்களுக்கு ஒதுங்கி வாழும் நிலையையும் தங்கி வாழும் நிலையையும் உருவாக்கிய ஆணாதிக்க சமூகம் பெண்ணை ஆணின் பாலியல் தேவையை பூர்த்தி செய்யும் இயந்திரமாக பிள்ளை பெறும் கருவியாக மட்டுமன்றி ஆணுக்குச் சேவை செய்யும் அடிமையாகவும் கேவலப்படுத்தியது.

"பெண்கள் மரணமடையும் வரையிலும் குழந்தைகளைப் பெறட்டும். அவள் வேறெதுவாகவும் இருப்பதற்குத் தேவையுமில்லை அதற்கு உரிமையுமில்லை" என்ற டி.மார்ட்டின் லூதரின் கருத்தானது ஆணாதிக்க சமூகத்திற்கு துணை போவதாய் இருக்கின்றது. பெண் என்ன குழந்தைகளை உற்பத்தி செய்யும் கருவியா? அவளுக்கென்று தனிப்பட்ட உரிமைகள், உணர்வுகள் எதுவும் இருக்கக்கூடாதா?

இந்த ஆணாதிக்க சமூகமானது தமது அடக்குமுறைக்கு இசைவாக பல செயற்பாடுகளில் இறங்கியது. பழமொழிகளையும் பாரம்பரியக் கதைகளையும் தமக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொண்டு பெண்ணை அடிமைப்படுத்த முயற்சித்தது. அது அவர்களுக்கு ஆரம்பத்தில் வெற்றியையே தேடிக் கொடுத்தது எனலாம். அந்தவகையில் "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்று கூறியே பெண்ணின் அடிமைத்தனத்தை ஆண் சமுதாயம் பண்பாடாக்க முயற்சிக்கின்றது. கணவன் எவ்வளவு கீழ்த்தரமானவனாக இருந்தாலும் பெண் அவனுக்கு அடங்கிச் சேவை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

அச்சம், மடம், நாணம், பொறுமை, அடக்கம் என்பவை பெண்ணுக்கு மிக முக்கியமாக இருக்க வேண்டிய பண்புகள் எனக் கூறி ஆணாதிக்க சமூகத்துக்குள் பெண்ணை பேணி வைக்கின்றனர். பெண்ணை இவ்வாறு அடிமைப்படுத்தியதன் மூலம் ஆண் வழிச் சமூகம் வளர்ச்சி பெற்றது. இன்றும் பெற்று வருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இன்று ஆணாதிக்க கலாசாரம் சற்று பின்தங்கிவிட்டது எனக் கூறலாம். பெண்ணின் பெருமை உலகுக்குப் புரிய ஆரம்பித்துவிட்டது. "பெண் புத்தி பின் புத்தி அல்ல" பெண் புத்தி முன் புத்தி என்று புரியவைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெண்ணினம் எதிர்த்துப் போராட முயற்சி செய்யாததனால் தான் பெண்ணடிமைத்தனம் தொடர்ந்து வந்துள்ளது. ஆனால் பெண் இன்று போராடத் தயாராகி விட்டாள். பெண்கள் இன்று மிகவும் வலிமை வாய்ந்தவர்களாக வெல்லற்கரியவர்களாக மீண்டு எழுந்துள்ளார்கள். இன்று பெண்கள் பல துறைகளில் ஆண்களுக்கு ஒப்பாக நுழைந்து அவர்களால் சிறந்த முறையில் பணியாற்ற முடியும் ஜெயிக்க முடியும் என்பதை நிருபித்துக் கொண்டிருக்கினறனர்.

ஆணாதிக்கம் தகர்க்கப்பட்டு ஆண்-பெண் சமத்துவம் நிலவ வேண்டுமாயின் முதலில் ஆண்களுக்கு இணையான கருத்துச் சுதந்திரம் கல்விச் சுதந்திரம் பொருளாதாரச் சுதந்திரம் என்பன பெண்களுக்குப் பூரணமாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும். மணவாழ்க்கையில் கடமைகள் உரிமைகள் இருபாலாருக்கும் சமநிலையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பெண் மீதான ஆணின் அத்துமீறல்களுக்கு தண்டனை அளிக்கப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு பெண்ணடிமைத்தனம் ஒழிக்கப்பட்டால் தான் ஆண் பெண் சமத்துவம் நிலவமுடியும். ■

சிந்துரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் தனியார்துறையில் தொழில் புரியும் பெண்கள்:

## மகப்பேறு தொடர்பான ஒரு பார்வை

அண்மையில் இந்தியாவில் தனியார் துறையில் தொழில் புரிந்த பெண் ஒருவர் கர்ப்பமடைந்தமைக்காக அந்நிறுவனம் அவரை தொழிலிருந்து பலவந்தமாக விலக்கியிருந்ததை அறியக் கிடைத்தது. மற்றுமொரு பெண் ஊடகவியலாளர் தாம் தொழிலிருந்து விலகுவதற்கு குறிப்பிட்ட அச்சு ஊடக நிறுவனம் பலவந்தப்படுத்துவதாக நீமன்றத்தில் வழக்கு தொடரந்திருந்தார்[1]

இலங்கையில் இவ்வாறான சம்பவங்கள் வெளிப்படையாகக் கொண்டு வரப்படாது விட்டாலும், மறைமுகமாக பல்வேறு பாரபட்சங்கள் காட்டப்படுவது உண்மையாகும். இலங்கையில் தனியார் துறையில் பணிபுரியும் பெண்கள் திருமணத்திற்குப் பிறகு தொழிலிருந்து விலகுவதற்கு பல்வேறு காரணங்கள் காணப்பட்டாலும், தனியார் நிறுவனங்கள் சரியான விதத்தில் மகப்பேற்று மருத்துவ வசதிகளை செய்து கொடுக்காமையும், சட்டங்கள் மற்றும் கொள்கைகளை சரியான விதத்தில் அமுல்படுத்தாமையும் பிரதான காரணங்களாக நோக்கலாம்.

1 http://qz.com/385866/pregnancy-remains-a-curse-for-working-women-in-corporate-india/

பெரும்பாலான பெண்கள் திருமணம் முடித்த பின்னர் தொழிலிருந்து விலகி விடுவதாக இலங்கையின் பிரபலமான தனியார் வங்கி ஒன்றின் பெண் முகாமையாளர் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் குறிப்பிட்டார். அவரிடம் வங்கி கொண்டுள்ள மகப்பேற்று சலுகைகள் தொடர்பாக வினவியபோது குறித்த வங்கி அவ்வாறான எவ்விதமான சலுகைகளையும், அதாவது தொழிலாளர்களின் பிள்ளைகளை பராமரிப்பதற்கான நிலையங்கள் போன்றவற்றை வழங்கவில்லை எனக் குறிப்பிட்டார். ஆனால் இது இலங்கையில் காணப்படும் கொள்கை சட்டங்களை சரியான விதத்தில் கடைப் பிடிக்காமையை வெளிக்காட்டுகின்றது.

### இலங்கையில் மகப்பேறு தொடர்பான சட்டங்கள் மற்றும் கொள்கைகள்:

இலங்கையின் மகப்பேற்று சலுகைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் (THE MATERNITY BENEFITS ORDINANCE, 1939, 1941) ஒரு பெண் தனியார் துறையில் வேலை செய்தாலும் அரசாங்க தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் அவருக்கான பிரசவ விமுறை 12 கிழமைகளுக்கு வழங்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதிக்கான முழு சம்பளமும் வழங்கப்பட வேண்டும். இது அனைத்து விடுமுறைகளையும் உள்ளடக்கியதாகும்.

அடுத்ததாக கடை மற்றும் அலுவலக ஊழியர் சட் SHOP AND OFFICE EMPLOYEES ACT NO.15 OF 1954)84 சட்டமானது ( இந்த நாட்களை பிரசவ விடுமுறை வழங்குகின்றது. இதில் பொது விடுமுறை, பௌர்ணமி, வணிக விடுறை (Mercantile) ஆகிய தினங்கள் தவிர்க்கப்பட வேண்டும். இவ்விடுமுறையானது ஒரு பெண் விரும்பினால் பிரசவத்திற்கு முன்னர் 14 நாட்களையும், பிரசவத்திற்குப் பின்னர் மிகுதி உள்ள நாட்களையும் விடுமுறையாக பெற்றுக்கொள்ளலாம். இங்கு 14 நாட்கள் விடுமுறை எடுத்திருக்கும்போது, குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் குழந்தை பிறந்துவிட்டால் எஞ்சிய விடுமுறையை குழந்தை பிறந்ததன் பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

கீழ்வரும் அட்டவணையானது மேற்குறிப்பிட்ட இரண்டு சட்டங்களையும் சுருக்கமான ஒரு பார்வையில் விபரிக்கின்றது.

சட்டங்கள் சரியான முறையில் அமுல்படுத்தப்படுவதில்லை என தனியார் நிறுவனங்களை குறை கூறினாலும் சட்டங்களிலும் பல இடர்பாடுகள் காணப்படுவதை அவதானிக்கலாம். இதில் குறிப்பிட்டு கூறக்கூடிய விடயங்களை விமர்சன ரீதியாக நோக்க வேண்டியுள்ளது.

1. 84 நாட்கள் விடுமுறையானது முதலாவது மற்றும் இரண்டாவது குழந்தை பிறப்பிற்கே வழங்கப்படுகின்றது. மூன்றாவது குழந்தை பிறந்தால் 42 நாட்கள் மாத்திரமே விடுமுறை வழங்கப்படும். இச்சட்டங்களை உருவாக்கியபோதும், அதன் பின்னர் ஏற்படுத்திய திருத்தங்களின்போதும் பால்நிலைக் கண்ணோட்டத்தில் அவை ஏற்படுத்தப்படவில்லை என்பதே வெளிப்படுத்துகின்றது. ஏனெனில் எத்தனை குழந்தை பிறந்தாலும் பிரசவ வேதனை காணப்படுவதோடு பிரசவத்திற்கு பின்னர் முதல் குழந்தை பிறந்த பின்னர்

| பிரதான விடயங்கள் | கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தில் உள்ளடக்கியுள்ள விடயங்கள் | மகப்பேற்று சலுகைகள் கட்டளைச் சட்டத்தில் உள்ளடக்கியுள்ள விடயங்கள் |
|---|---|---|
| 1. முதலாவது மற்றும் இரண்டாவது குழந்தைக்கான விடுமுறை | பொது விடுமுறை, போயா, வணிக விடுறை ஆகியவற்றை தவிர்த்து 84 வேலை நாட்கள் விடுமுறையாக வழங்கப்படும் | பொது விடுமுறை, பௌர்ணமி, வணிக விடுறை ஆகியவற்றை உள்ளடக்கி 12 கிழமைகள் விடுமுறையாக வழங்கப்படும் |
| 2. மூன்றாவது மற்றும் அதற்குப் பின்னரான பிரசவம் | பொது விடுமுறை, போயா, வணிக விடுறை ஆகியவற்றை தவிர்த்து 42 வேலை நாட்கள் விடுமுறையாக வழங்கப்படும் | பொது விடுமுறை, பௌர்ணமி, வணிக விடுறை ஆகியவற்றை உள்ளடக்கி 6 கிழமைகள் விடுமுறையாக வழங்கப்படும் |
| 3. கொடுப்பனவுகள் | முழுச் சம்பளமும் வழங்கப்பட வேண்டும் | ஒரு கிழமையில் 6 வேலை நாட்கள் வீதம் ஒவ்வொரு கிழமைக்குமான சம்பளம் வழங்கப்படும் |
| 4. இடைநிறுத்துதல் | இக்காலப்பகுதியில் இடைநிறுத்த முடியாது | இக்காலப்பகுதியில் இடைநிறுத்த முடியாது |
| 5. காயங்களை ஏற்படுத்தும் தொழிலிருந்து கட்டுப்படுத்துதல் | பிரசவத்திற்கு முன்னர் மூன்று மாத காலப் பகுதிக்கும், பிரசவத்திற்குப் பின்னர் மூன்று மாத காலப் பகுதிக்கும் காயங்களை ஏற்படுத்தும் தொழிலிருந்து விலக்கி வைத்திருக்க வேண்டும் | பிரசவத்திற்கு முன்னர் மூன்று மாத காலப் பகுதிக்கும், பிரசவத்திற்குப் பின்னர் மூன்று மாத காலப்பகுதிக்கும் காயங்களை ஏற்படுத்தும் தொழிலிருந்து விலக்கி வைத்திருக்க வேண்டும் |
| 6. தாய்ப் பாலூட்டலுக்கான இடைவேளை | வழங்க வேண்டிய தேவை இல்லை | குழந்தைக்கு ஒரு வயது ஆகும் வரை, அரை மணித்தியாலயம் என்ற வகையில் நாளொன்றுக்கு இரண்டு தடவை வழங்க வேண்டும் |
| 7. குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் | வழங்க வேண்டிய தேவை இல்லை | 6 வயதிற்குக் குறைந்த அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். |

மூலம்: http://archives.dailynews.lk/2010/05/11/bus28.asp



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட தேவைகள் மற்றும் அதே கவனிப்பு மூன்றாவது குழந்தை பிறந்த பின்னரும் தேவைப்படும். எனவே எந்த அடிப்படையில் விடுமுறை நாட்கள் குறைக்கப்பட்டிருந்தாலும் அது மூன்றாவது குழந்தை பிரசவிக்கும் தாய்மார்களுக்கான பாரபட்சமேயாகும்.

2. மேற்கூறப்பட்ட விடயமானது இலங்கை அரசின் ஏனைய கொள்கைகளோடு முரண்படுவதைக் காணலாம். உதாரணமாக இலங்கை அரசானது மூன்று குழந்தைகள் உள்ள தாய்மார்களுக்கே LRT எனப்படுகின்ற நிரந்தர கருத்தடையை மேற்கொள்ள ஊக்குவிக்கின்றது. அரசாங்க வைத்தியசாலைகளில் இவ்வாறான தாய்மார்களுக்கு மாத்திரமே நிரந்தர கருத்தடை மேற்கொள்ளப்படுகின்றது. இரண்டு குழந்தைகள் உள்ள தாயொருவர் நிரந்தர கருத்தடை முறையைக் கோருவாராயின் அவர் நிராகரிக்கப்படுகின்றார். இதில் பெண்கள் பலமடங்கு பாரபட்சங்களை அனுபவிக்க நேரிடுகின்றது. ஒரு புறம் மூன்றாவது குழந்தை பிரசவிக்கும்போது சலுகைகள் குறைவடைகின்றது. மறுபுறம் இரண்டு குழந்தைகள் போதும் என்று நிரந்தர கருத்தடையை மேற்கொள்ள முடியாமலும் காணப்படுகின்றது. இந்நிலைமை ஒரு சில சந்தரப்பங்களில் சட்ட ரீதியற்ற கருக்கலைப்பிற்கு வழிகோலுகின்றன.

3. அரசாங்கத்தின் இவ்வாறான சட்டங்களும் கொள்கைகளும் ஒரு பெண்ணின் தன் உடம்பு தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையை மறுக்கின்றது. அதேநேரம் பெண்களை எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் ஒரு இயந்திரமாக மாத்திரம் அணுகும் முறையையும் காணலாம்.

4. கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் பிரகாரம் குழந்தை உயிருடன் இருந்தால் மாத்திரமே 84 நாட்கள் விடுமுறை வழங்கப்படுகின்றது. குழந்தை இறந்து பிறந்தால் நாட்களின் எண்ணிக்கை 42 ஆகக் குறைக்கப்படுகின்றது. இங்கு தாயின் நலம் பெண்கள் உரிமைகளின் கண்ணோட்டத்தில் நோக்கப்படவில்லை என்பதைக் காணலாம்.

அவ்வாறான குறைபாடுகள் காணப்படுகின்றமையால் இவை திருத்தத்திற்கு கொண்டுவரப்பட வேண்டும். அதேவேளை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை தனியார் நிறுவனங்கள் சரிவர அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். இது வெறுமனே legal procedure ஆகவன்றி அதாவது குறிப்பிட்ட நிறவனத்திற்கெதிராக வழக்குத் தொடர்வதற்கு அப்பால் நிறுவனங்கள் தங்களுடைய அடிப்படை கொள்கைகளில் ஒன்றாக இதனைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இன்று மகப்பேறு என்ற ஒரு விடயத்தைச் சுற்றிப் பல்வேறு மட்டங்களில், பல்வேறு வடிவங்களில் தனியார் துறையில் வேலை செய்யும் பெண்களுக்கெதிரான பாரபட்சங்கள் காட்டப்படுகின்றன. அவற்றை ஒவ்வொன்றாக ஆராயலாம்.

## தொழில் ஒப்பந்தங்கள்:

பல்வேறு தனியார் நிறுவனங்களும், வங்கிகளும் மற்றும் அரச சாரா அமைப்புகளும் தொழில் ஒப்பந்தங்களையே வழங்குகின்றன. நிரந்தர நியமனம் வழங்குவதென்பது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இவை பெரும்பாலும் வருடத்திற்கானதாகவும், ஒவ்வொரு வருடமும் பல்வேறு மதீப்பீட்டின் பின்னர் புதுப்பிக்கும் நோக்கிலேயே வழங்கப்படுகின்றன. தொழில் தருநர் கால அடிப்படையில் தொழில் ஒப்பந்தங்களை வழங்குவதில் பல்வேறு சாதகத் தன்மைகளைக் கொண்டுள்ளார். முதலாவதாகத் தொழிலாளியை வேலையிலிருந்து விலக்குவது மிகவும் சுலபமாகும். ஏனெனில் சிறப்பாகச் செயற்படவில்லை எனக்கூறி ஒரு மாதக்கால அறிவித்தலோடு (one month notice) தொழிலில் இருந்து இடைநிறுத்தக்கூடிய அதிகாரத்தை தொழில் தருநர் ஒப்பந்தத்தின் மூலம் கொண்டிருக்கின்றார். அதேநேரம் தொழில் பெறுநர் தனது தொழிலைத் தக்கவைத்துக் கொள்வதற்காக சிறப்பாகச் செயற்படுவார் எனவும் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் நடைமுறையில் இவை பெண்களுக்கே பெரும்பாலும் பாதகமாக அமைகின்றது. ஏனெனில் சில நிறுவனங்கள் பெண்கள் திருமணம் முடிக்கும்போதும், அவர்கள் கர்ப்பமடைந்துள்ளார்கள் என அறியும்போதும் தொழில் ஒப்பந்தத்தை நீடிக்காமல் முறித்து விடுகின்றன. இங்கு தொழிலில் சிறந்த முறையில் பங்களிப்புச் செய்யவில்லை அல்லது தொழிற் காலம் முடிவடைந்து விட்டது என்ற காரணங்களே எழுத்து வடிவில் குறிப்பிடப்படும். மாறாக உண்மையான காரணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில நிறுவனங்கள் தொழிலுக்கான வயதெல்லையை வைத்துள்ளன. உதாரணமாக சில விமான சேவை நிறுவனங்களின் ஓய்வு பெறும் வயதானது 35 அல்லது அதற்கும் குறைவாகவே நிர்ணயித்துள்ளதோடு ஆட்சேர்ப்பு செய்யும்போதும் திருமணம் முடிக்காத பெண்களையே உள்வாங்குகின்றன.**

வெளிப்படுத்தப்படமாட்டாது. இங்கு கர்ப்பம் தரித்தமை, கர்ப்பிணிப் பெண்கள் தொடர்பான முற்கற்பிதங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது கர்ப்பிணிப் பெண்களுக்குக் காலையில் ஏற்படும் வாந்தி, மயக்கம், உடற்சோர்வு, இலகுவில் களைப்படைதல் என்பவற்றால் அவர்களுக்கு சிறப்பாக தொழிலில் கவனம் செலுத்த முடியாது. நீண்ட நேரம் அவர்களுக்கு பிரயாணம் செய்யவோ அல்லது வேலைகளை விரைவாகச் செய்யவோ முடியாது என்ற தப்பான அபிப்பிராயம் பெரும்பாலானோர் மத்தியில் நிலவுகின்றமை காரணமாகும். சில விமான சேவை நிறுவனங்கள் தங்களின் தொழில் உடன்படிக்கையில் தொழில் புரியும் காலத்தில் கர்ப்பமடையக் கூடாது என ஓர் கட்டளையை விதிக்கின்றமையையும் நடைமுறையில் காணலாம்.

தொழில் ஒப்பந்தங்களில் பிரசவ விடுமுறை தொடர்பாக குறிப்பாக எதுவும் சொல்லப்படாமல், பொதுவாக இலங்கையின் தொழிற் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது என்றே தொழில் ஒப்பந்தங்களில் குறிப்பிடப்படுகின்றது. அதேநேரம் பெண்கள் உரிமை தொடர்பாகக் குரல் கொடுக்கும் அரச சாரா அமைப்புக்கள்கூட இதனை தொழில் ஒப்பந்தங்களில் உள்ளடக்குவதில்லை என்பதே யதார்த்தமாகும். தொழிற் சட்டங்கள் மக்கள் மத்தியில் இலகுபடுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு ஒருபுறமிருக்க, சட்டம் பயின்ற பெண் சட்டத்தரணிகள் கூட தொழில் ஒப்பந்தங்களின் போது இதனைக் கேள்வி கேட்பதில்லை. அத்தோடு கேள்வி கேட்கும் பட்சத்தில் தொழிலை இழந்துவிடுவோமோ என்ற அச்சம் பல பெண்களை தங்களது உரிமைக்காக குரலெழுப்ப முடியாமல் தடுத்து விடுகின்றது.

### வயது நிர்ணயம்:

சில நிறுவனங்கள் தொழிலுக்கான வயதெல்லையை வைத்துள்ளன. உதாரணமாக சில விமான சேவை நிறுவனங்களின் ஓய்வு பெறும் வயதானது 35 அல்லது அதற்கும் குறைவாகவே நிர்ணயித்துள்ளதோடு ஆட்சேர்ப்பு செய்யும்போதும் திருமணம் முடிக்காத பெண்களையே உள்வாங்குகின்றன. சில நிறுவனங்கள் குறிப்பிட்ட வயதிற்கு இடைப்பட்டவர்களை மாத்திரம் தொழிலிற்கு உள்வாங்குவதைக் காணலாம். இதனை நாம் தொழில் விளம்பரங்களில் கண்டுகொள்ளலாம்[2]. நாம் அன்றாடம் பார்க்கும் நடுத்தர வியாபார நிறுவனங்களின் தொழில் விளம்பரங்களில் வயதெல்லையாக 18-22 வரை குறிப்பிடப்பட்டிருக்கும். இவ்வயதிற்குட்பட்டவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்து, ஏதாவது தொழிற்கல்வி ஒன்றை கற்றிருப்பார்கள், குறிப்பாக திருமணம் முடித்திருக்க மாட்டார்கள் என்ற முற்கற்பிதத்திலேயே விளம்பரப்படுத்தப்படுகின்றது.

### திருமணமும் அதனோடு உள்ள முற்கற்பிதங்களும்:

பல தனியார்துறை நிறுவனங்கள் ஆட்சேர்ப்பு செய்யும்போதும் திருமணம் முடிக்காத பெண்களையே உள்வாங்குகின்றன. உதாரணமாக அண்மையில் விமான சேவை நிறுவனமொன்று, இரண்டு விமானப் பணிப்பெண்களை அவர்கள் கர்ப்பமடைந்தமையைக் காரணங்காட்டி சேவையிலிருந்து விலக்கியிருந்தது. அதேநேரம், விமானப் பணிப்பெண்கள் திருமணம் முடிப்பதாக இருந்தால் நிறுவனத்திடம் அனுமதி பெறவேண்டும் என்றும், கருத்தரித்திருந்தால் உடனடியாக குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் கட்டளையிட்டிருந்தது[3]. இவ்வாறான செயல்கள் மற்றும் கருத்துக்கள்

2 http://www.topjobs.lk/employer/advertismentpreview.jsp?jc=0000291953&rid=5&ac=0000000018&ec=0000000086

3 http://www.dailymail.co.uk/travel/travel_news/article-2955612/Forced-stay-single-facing-sack-pregnant-staggeringly-sexist-rules-female-cabin-crew-Gulf-airlines.html



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் தனிப்பட்ட சதந்நதிரத்தை பாதிப்பதோடு அவர்களின் திருமணம் முடித்தல் மற்றும் தீர்மானம் எடுக்கும் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதாகவே அமைகின்றன. ஆனால் இந்நிறுவனங்கள் குறிப்பிட்ட பெண்களின் நலனிற்காகவே, அதாவது கருச்சிதைவு போன்ற ஆபத்துக்கள் ஏற்படும் என்பதாலேயே இவ்வாறான சட்டங்களும் நடைமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என வாதிடுவதனால் பலரும் மௌனித்து இது தொடர்பாக கேள்வி எழுப்புவதில்லை.

இலங்கையில் பெரும்பாலும் தனியார் வங்கிகள் யுவதிகளையே ஆட்சேர்ப்பு செய்வதால் திருமணம் முடித்த பெண்களுக்கான வாய்ப்புகள் குறைவடைகின்றது. அத்தோடு திருமணம் முடிக்காத பெண்களுக்கு குடும்பச் சுமை குறைவாகக் காணப்படும். அதனால் அவர்கள் வேலையில் கவனஞ் செலுத்துவார்கள். மேலதிக நேரம் வேலை செய்யப் பணிக்கின்றபோது எவ்விதமான தடைகளையம் காட்டாமல் தொடர்ந்து வேலை செய்வார்கள் என்ற மனோபாவம் இவ்வாறான ஆட்சேர்ப்புக்கு வழிவகுக்குகின்றது. உண்மையில் ஆட்சேர்ப்புச் செய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய அனுபவம், திறமை, செயற்திறன் என்பன பெண்களை ஆட்சேர்ப்பு செய்யும்போது மிக அரிதாகவே கவனத்திற் கொள்ளப்படுகின்றது அல்லது அவை இரண்டாம் பட்சமானதாகக் கணிக்கப்படுகின்றது.

**குழந்தைப் பராமரிப்பிற்கான சலுகைகள்:**

பிள்ளை பராமரிப்பு என்பது பெண்களின் வகிபங்கு என்று சமூகத்தில் கட்டமைக்கப்பட்டிருப்பதால் தொழில் செய்யும் பெண்களும் அவர்களுடைய தொழிலைச் செய்வதோடு குழந்தைப் பராமரிப்பையும் பேண வேண்டும் என நிறுவனங்கள் கூட எதிர்பார்க்கின்றன. ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் சென்று குடும்பப் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்தாலும் பிள்ளைப் பராமரிப்பிலிருந்து ஆண்கள் பெரும்பாலும் விலகியிருக்கின்றனர். அதுமட்டுமன்றி குடும்ப அங்கத்தவர்களும் அது பெற்றவளுடைய பொறுப்பு என்று குழந்தையைப் பராமரிப்பது இல்லை. இதனாலேயே தொழில் புரியும் பெண்களுக்கு இரட்டைச் சுமை காணப்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் கூட்டுக் குடும்பங்கள் (extended Families) சாத்தியமில்லையாலும், தனிக் குடும்பங்கள் (Nuclear families) அதிகரித்து வருகின்றமையாலும் குழந்தைப் பராமரிப்பு என்பது தனித்தே பெண்களுக்குரிய ஒன்றாகவே மாற்றம் பெற்றுள்ளது. இது பெண்களின் ஆரம்ப நிலை நிலயிலும் பார்க்க மிகவும் மோசமான பின்தள்ளப்பட்ட ஒரு நிலைக்குக் கொண்டு செல்வதைக் காணலாம்.

தனியார் நிறுவனங்களும் குழந்தை பராமரிப்பானது பெண்களுக்குரியதாகவே கருதுவதை அவதானிக்கலாம். பல தனியார் நிறுவனங்களில் உயர்பதவி வகிக்கும் ஆண்கள், அங்கு தொழில் புரியும் பெண்களை குழந்தைப் பராமரிப்பு, அவர்களின் நலம் என்பவற்றை காரணங் காட்டி அதைரியப்படுத்துகின்றனர். மேலும், பல நிறுவனங்களில் ஆயிரத்திற்கு அதிகமானோர் தொழில் புரிந்தாலும் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான பராமரிப்பு நிலையங்களையோ, சலுகைகளையோ வழங்குவதில்லை. இதனால் வேலை செய்யும் பெண்களுக்கு ஒர் வகையான மன உளைச்சல் ஏற்படுவதோடு சரியான முறையில் தொழிலில் கவனஞ்ச் செலுத்த முடிவதில்லை. பல பெண்கள் மன உளைச்சல் காரணமாக தொழிலிலிருந்து இடைவிலகுவதை அன்றாடம் காணலாம். இதனாலேயே உயர் பதவிகளில் பெண்கள் குறைவாகவும் அவ்விடத்தை ஆண்கள் ஆக்கிரமித்தும் காணப்படுகின்றனர்.

**தீர்மானம் எடுக்கும் பதவிகளில் அதிக ஆண்கள்:**

பல்வேறு நிறுவனங்கள் ஆட்சேர்ப்பு செய்யும்போது சில உயர் பதவிகளையும், குறிப்பிட்ட சில தொழில்களையும் ஆண்களுக்குரியதாகவே வடிவமைக்கின்றன. உதாரணமாக முகாமையாளர், பணிப்பாளர் போன்ற பதவிகளுக்கு ஆண்களையே உள்வாங்கும் அதேவேளை, பெண்கள் அப்பதவிகளுக்கு விண்ணப்பித்திருந்தாலும் நேர்முகத் தேர்வில் அவர்களைத் தெரிவு செய்வதில்லை. இதற்குக் குறிப்பாக மகப்பேறு தொடர்பாக கொண்டிருக்கும் முற்கற்பிதங்கள் பிரதான காரணமாகும். இதன் காரணமாக தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தில் ஆண்கள் காணப்படுவதால் அங்கு பெண்களின் உரிமை தொடர்பான கண்ணோட்டத்தில் நிறுவனத்தின் கொள்கைகள் சட்டங்கள் வகுக்கப்படுவதில்லை. சில நிறுவனங்களில் பெண்கள் உயர் பதவிகளை வகித்தாலும் அவர்களுக்கான பல்வேறு மட்டுப்பாடுகள் காணப்படுவதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் அவர்களும் ஆணாதிக்கச் சிந்தனைக்கு உட்பட்டிருப்பதால் பெண்களின் நலனில் அக்கறை கொள்வதில்லை.

### தொழில் மதிப்பீடு (Employment appraisal)

தொழில் மதிப்பீடு என்ற அடிப்படையிலும் பெண்கள் பாரபட்சத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதாவது ஒரு வருடத்திற்கான செயற்திறன் மதிப்பீடானது மாதாந்த அடிப்படையில் பெறப்படுகின்றது. தொழில் பெறுநர் ஒருவர் ஒரு மாத காலத்திற்கோ அல்லது ஒரு சில வாரங்களுக்கோ விடுமுறையில் சென்றிருந்தால் அக்குறிப்பிட்ட மாதம் அவர் குறைந்தளவிலான பங்களிப்பையே நிறுவனத்திற்கு வழங்கியுள்ளார் என மதிப்பிடப்படும். ஆனால், ஒரு பெண் கர்ப்பமடைந்து பிரசவ விடுமுறையை எடுக்கும்போதும் இதே மதிப்பீட்டைச் செய்வது பாரபட்சமானதாகும். ஏனெனில் குழந்தைப் பிரசவம் என்பது ஒரு தனிநபருக்காகவேயன்றி முழு சமூகத்திற்குமானதாகும். எனவே, அவர்களுக்கான விசேட சலுகைகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான தொழில் மதிப்பீடுகளால் பெண்கள் நிரந்தரத் தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியாமலும், தொழிலிருந்து விலகுவதற்கும், விலக்குவதற்கும், பதவியுயர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமை போன்றவற்றிற்கும் காரணமாக அமைகின்றன.

மேற்கூறப்பட்டவாறான பல்வேறு விதமான பாரபட்சங்கள் தனியார் துறையில் தொழில் புரியும் பெண்களுக்குக் காணப்படுவதால் இவை தொடர்பாக தனியார் நிறுவனங்கள்/கம்பனிகள், அரசு, பெண்கள் உரிமை தொடர்பாக வேலை செய்யும் நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டிய ஓர் தேவை காணப்படுகின்றது. இவற்றை இல்லாமல் ஒழிப்பதற்குக் கீழ்வரும் பரிந்துரைகளை முன்வைக்கலாம்.

### பரிந்துரைகள்:

- மகப்பேற்று சலுகைகளை சரியான விதத்தில் தனியார் நிறுவனங்கள் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கான விசேட ஏற்பாடுகள் அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- தொழில் மதிப்பீட்டின்போது பிரசவ விடுமுறைக் காலப்பகுதியை ஏனைய காலப்பகுதியில் தொழிலாளி செய்த பங்களிப்பிற்குச் சமனானதாகவே கருதப்பட வேண்டும்.
- தொழில் விண்ணப்பங்களிலும், நேர்முகத் தேர்வுகளின்போதும் திருமண அந்தஸ்துப் பற்றி விசாரிப்பது சட்ட ரீதியான குற்றமாக மாற்றம் பெற வேண்டும்.
- தொழில் ஒப்பந்தங்களின் போது பிரசவ விடுமுறை கட்டாயமாகக் குறிப்பிடப்பட வேண்டியதோடு, கர்ப்பமாக உள்ள காலப்பகுதியில் எவ்வித காரணத்திற்காகவும் தொழிலில் இருந்து இடைநிறுத்த முடியாது என்ற சட்டத் திருத்தமும் கொண்டுவரப்பட வேண்டும்.
- பிரசவ விடுமுறை தந்தைக்கும் வழங்கப்பட வேண்டும். தற்போது நடைமுறையில் காணப்படும் 3 நாட்கள் அதிகரிக்கப்பட வேண்டும். இதன் மூலம் குழந்தை வளர்ப்பில் ஆண்களுக்கும் பங்குண்டு என்பதை வெளிக்கொணரலாம்.
- மகப்பேற்றுச் சலுகைகள், சட்டங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு குறிப்பாக தனியார் துறையில் வேலை செய்யும் பெண்களுக்கும் விழிப்புணர்வூட்ட வேண்டும். வழமையாகப் பெண்கள் உரிமைகள் தொடர்பாக வேலை செய்யும் நிறுவனங்கள் கிராம மட்டத்தில் வேலை செய்யும் பெண்களையும், சிவில் சமூகப் பெண்களையுமே இலக்காகக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்றன. தனியார் துறையில் தொழில் புரியும் பெண்களை இலக்கு வைத்து செயற்படுவது குறைவாகும். அவ்வாறு தனியார் துறையை இலக்கு வைத்து விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை செய்தாலும் அவை பெரும்பாலும் திறன்சாரா (non-skill) தொழிலில் ஈடுபடுபவர்களையும், உடல் உழைப்பில் (Manual Labour) ஈடுபடும் பெண்களையுமே கருத்திற் கொள்கின்றது. ஆனால், வங்கி மென்பொருள் நிறுவனம், பல்தேசியக் கம்பனிகள் போன்றவற்றில் தொழில் புரியும் கல்வி கற்ற பெண்களுக்கு இவ்விழிப்புணர்வு மற்றும் ஆதரவு என்பன அவசியமாக உள்ளன. பெண்கள் உரிமைகள் கண்ணோட்டத்தை இந்நிறுவனங்களிற்குள் கொண்டு வருவது கடினமாக இருக்கின்ற போதிலும் இதற்கானவொரு தனியான தந்திரோபாயம் அவசியமாகின்றது. ■

லெட்சுமணன் கமலேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுடைய வாசிப்பு

எனக்கு உன்னிடத்தில்
எந்தவொரு எதிர்பார்ப்புமில்லை.

ஆனால்
சில வேளைகளில்
உனக்கு
என்னிடத்தில்
எதிர்பார்ப்புகள் இருக்கலாம்.

அப்போது தெரியப்படுத்து.
நிச்சயமாக
முயற்சி செய்து
நிறைவேற்றுவேன்.

ஏனெனில்
தோல்விகளைக் கண்டு
தூர விலகி ஓடும் துணிச்சல் எனக்கில்லை.

இன்பத்தை போலவே
துன்பங்களையும்
துணிந்து
உள்வாங்கப் பழக்கப்பட்டவள் நான்.

எனக்கு என் மீது
உறுதியான
நம்பிக்கை உண்டு.

உன்
அலட்சியமும்
ஆதிக்கமும்
வெளிச்சத்தை தேடுகின்ற
எனக்கு
விட்டில் பூச்சிகள் போன்றவை.

உனது
வாழ்க்கை குறித்து தீர்மானிக்க
உனக்கு உரித்துண்டு.

ஆனால்
என் வாழ்க்கை குறித்த
விடயங்களை
நீ
தீர்மானிக்கவும்
செயற்படுத்தவும்
நான்
உடன்படப் போவதில்லை.

உன் ஆதிக்கத்துள்
என்னை பணிய வைக்க
முயற்சி செய்யாதே.

கணவன் என்ற
உனது
அந்தஸ்தும் அதிகாரமும்
எனது
விருப்பத்திற்கப்பால்
என்னை எதுவும் செய்து விடமாட்டாது.

எனினும்
நினைவு படுத்திக்கொள்.

இப்பொழுதும் சொல்கிறேன்
எனக்கு
உன்னிடத்தில்
எந்தவொரு எதிர்பார்ப்புமில்லை.

தர்சினி செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது உடலை மதிப்பவர்கள் ஏனையோரின் உடலுக்கும் மதிப்பளிபார்கள்

பெரும்பாலானோர் என்னிடம் எப்போதும் கேட்கும் கேள்வியாக இருப்பது, "நீங்கள் இப்போது என்ன செய்கின்றீர்கள்?" என்பதாகும். கேள்வியைத் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் பாடசாலை ஒன்றில் கற்பிப்பதாக பதில் கூறுவேன்.

"உண்மையாகவா, என்ன கற்பிக்கின்றீர்கள்?"

"பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதாரம்"

பெரும்பாலும் என்னுடைய பதிலின் பின்னர், கேள்வியை தொடுத்தவரே தலைப்பை மாற்றுவதற்கு முயற்சி செய்வார்.

"நீங்கள் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு ஆணுறை பயன்படுத்துவதற்குக் கற்பிப்பீர்களா?"

இது என்னிடம் பலரும் பொதுவாகக் கேட்கும் கேள்வியாகும். இந்தக் கேள்விக்கு பதிலளிப்பதற்கு எனக்கு சிறிது நேரம் எடுக்கும். இந்தக் கேள்வியை என்னிடம் கேட்கும் பலர் எண்ணுவது, பாலியல் கல்வி என்பது, பாலியல் நடத்தை சம்பந்தப்பட்ட விடயப்பரப்பு சார்ந்தது மாத்திரம் என்பதாகும். எமக்கு பாலியல் நடத்தை குறித்து எவரும் கற்பிக்க வேண்டிய அவசியம் இல்லை, ஏனெனில் நாம் இயற்கையாகவே பாலியல் விலங்குகளாகும்.

பாலியல் கல்வியை இளம் சமூகத்தினருக்கு கற்பிக்க வேண்டியது, கல்வி உரிமையாகுமே தவிர, அவர்களுக்கு பாலியல் நடத்தை அறியாத விடயம் என்பதனால் அல்ல. பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதார உரிமைகள் என்பது, சுதந்திரமான பாலியல் நடத்தைக்கான உரிமை அல்ல. பாலியல் குறித்து தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையாகும். தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற கல்வியின் ஊடாக தமது உடல் குறித்து, தவறற்ற தீர்மானம் எடுப்பதற்கு இளம் சமூகத்தினர் வலுவூட்டப்படுவர். தவறற்ற அறிவின் ஊடாகவே உரிமை உறுதி செய்யப்படுகின்றது.

**பாலியல் கல்வியில் தேவையான மனித உறவு என்பது, ஆண், பெண் உடலுறவு சம்பந்தப்பட்டது மாத்திரமல்ல என்பதனை இளம் தலைமுறையினருக்கு கற்பிப்பதாகும். பாலியல் கல்வி என்பது பாலியல் மற்றும் அது சார்ந்த தலைப்புக்கள் தொடர்பில் தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற அறிவினை வழங்கும் விடயப்பரப்பாகும்.**

தமது உடலில் உள்ள பாலியல் உறுப்புக்களின் தவறற்ற பெயரை சிறு வயது முதல் அறிந்து வைத்திருப்பதன் தவறு என்ன? உதாரணமாக, ஆணுறுப்பிற்கு, பட்டா, சுக்கா, குருள்ளா, சூச்சா போன்ற பெயர்களை கூறுவதனை விட்டு, ஆணுறுப்பு எனப் புரியச் செய்ய முடியுமெனில், அது எத்தனை சிறந்தது? ஆணுறுப்பு என்பது தவறான வார்த்தை அல்ல. அத்துடன், அது உடலின் உறுப்புகளிலொன்று என்பதால் அதற்காக வெட்கம் கொள்ள வேண்டியதில்லை. சிறு வயது முதலே, எமது உடல் குறித்து சிறந்த புரிந்துணர்வு எமக்குள் தோன்றுமாயின், பிற்காலத்தில் நோயில் இருந்து பாதுகாப்புப் பெறுவதுடன், தமது உடலுக்கு முறையான மரியாதை வழங்குவதற்கும் முயற்சிப்பர்.

**தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வியின் பிரதானமான நோக்கமாக இருப்பது, தமது உடல் குறித்து சிறுவயது முதலே மரியாதையை உருவாக்குவதாகும். தமது உடலுக்கு மரியாதை வழங்கும் நபர் ஒருவர், மற்றைய நபரின் உடலுக்கும் மரியாதை வழங்குவார். அவ்வாறு தமக்குள் சுய மரியாதையை கட்டியெழுப்பும் நபர், ஏனைய நபருக்கு மரியாதை அளிப்பார். மற்றையோரின் உடல் மீது மரியாதை காட்டும் நபர்கள், ஏனையோரை தாழ்வாக நடத்துவதற்கோ, பாரபட்சமாக நடத்துவதற்கோ முன்னர் இரண்டு முறை சிந்திப்பார்.** தமக்குள்ள உரிமை, ஏனையோருக்கும் உள்ளது என ஏற்றுக் கொள்வார். எனவே, தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வியைப் பெறும் நபர், மற்றுமொருவரின் மரியாதையை குலைக்கும் வகையில் நடந்து கொள்ளமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் தரத்தில் கல்வி கற்கும் சிறுவர்களுக்கு நான் கற்பிக்கும் பாடல், பின்வருமாறு:

நல்ல தொடுகை - கெட்ட தொடுகை
எனக்குத் தெரியும் இப்போது
அம்மா முத்தமிட்டால்
அப்பா அள்ளி அணைத்தால்,
தரும் சுகத்தை
நான் விரும்புகின்றேன்.

நல்ல தொடுகை - கெட்ட தொடுகை
எனக்குத் தெரியும் இப்போது
எனக்கு பிடிக்கவில்லையென்றால், உங்களால்
முடியாது என்னைத் தொட
கீழ் உள்ளாடையில் கைவைக்க இடமளிக்கக்
கூடாது என்பதனை நினைவில் கொள்ளுங்கள்

நல்ல தொடுகை - கெட்ட தொடுகை
எனக்குத் தெரியும் இப்போது
தள்ளி விடுவதற்கு
அடிப்பதற்கு
வலிப்பதற்கு
யாருக்கு பிடிக்கும்
யாருக்கும் அல்ல

எனக்கு இடையூறு விளைவிக்க யாருக்கும்
அனுமதி இல்லை
நல்ல தொடுகை - கெட்ட தொடுகை
எனக்குத் தெரியும் இப்போது

இந்தப் பாடலில் நல்ல தொடுகை மற்றும் கெட்ட தொடுகை, அவ்வாறான சிறுவர் துஷ்பிரயோகத்தில் இருந்து எச்சரிக்கையாக இருக்கும் விதம், யாரும் தவறாக நடந்தால் வேண்டாம் என்று கூறுதல், ஓடி விடுதல், பெரியவர்களிடம் கூறுதல் என்பன குறித்து நான் கற்பிக்கின்றேன். சட்டத்தை பின்பற்றுவதற்கு பிள்ளைகளுக்கு கற்பித்தல் இதன் நோக்கமாகும். தமக்கு விருப்பமில்லையெனின், தமது உடலைத் தொடுவதற்கு எவருக்கும் அனுமதி இல்லை என்பதனையும், எவரும் தப்பான விதத்தில் தமக்கு அசௌகரியம் ஏற்படும் விதத்தில் தொட்டால் உடனடியாக வேண்டாம் என்று கூறுவதற்கும், அங்கிருந்து வெளியேறி நம்பிக்கையுள்ள நபரிடம் சென்று தெரிவிப்பதற்கும் உதவும். மேலோட்டமாகப் பார்க்கும் போது சாதாரண விடயமாக இருந்தாலும், இதன் மூலம் தெரிவிக்கப்படும் செய்தியாக இருப்பது, எமது உலகில் இருக்கும் சிக்கல்கள் பலவற்றை தீர்க்கும் ஆற்றல் மிக்கதாக இந்த விடயப்பரப்பு உள்ளது.

## ஏனையோரின் விருப்பத்திற்கு மதிப்பளித்தல்

1. தமது உடலைத் தொடுவதற்கு இன்னொருவருக்கு இயலாது என்பதுடன், தமக்கும் இன்னொருவரின் உடலைத் தொடுவதற்கான உரிமை இல்லை என்பது உண்மையாகும். பாலியல் நடத்தையில் விருப்பமான, ஆங்கிலமொழியில் கூறுவதாயின் Consent மிகவும் அவசியமாகும். மற்றைய நபரின் விருப்பமின்றி முன்னெடுக்கப்படும் பாலியல் நடத்தையை துஷ்பிரயோகம் அல்லது பாலியல் பலாத்காரம் எனக் குறிப்பிடப்படுகின்றது. சிறு வயது முதலே ஏனையோரின் விருப்பு குறித்து



http://www.st-marks-southampton.org.uk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கும் சிறுவர்கள், விருப்பத்தை மதிப்பதற்கு பழகுவர். அவர்கள் பெரியவர்களானதும் பாலியல் நடத்தையின் ஊடாக மாத்திரமின்றி, வாழ்க்கையின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஏனையோரின் விருப்பத்திற்கும் மதிப்பளிப்பர். ஏனையோரின் விருப்பத்திற்கு மதிப்பளிக்கும் சமூகம், பெண்களை தாக்காது. பெண்கள் மீது துஷ்பிரயோகம் செய்யமாட்டார்கள். சிறுவர்கள் மீது துஷ்பிரயோகம் செய்யமாட்டார்கள். பலவந்தமாக திருமணம் செய்யமாட்டார்கள். பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது பெற்றுக் கொள்ளாது இருப்பதற்கு பலவந்தப்படுத்தமாட்டார்கள். சுருக்கமாக சொல்வதாயின், ஏனையோரின் விருப்பதற்கு மதிப்பளிக்கும் சமூகம் ஒன்று கட்டியெழுப்பப்படும்.

**சிறுவயது முதலே தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வி வழங்குவதன் ஊடாக சிறுமிகளைப் போன்றே, சிறுவர்களுக்கும் தமது கருத்து மற்றும் விருப்பம் குறித்து குரல் எழுப்புவதற்கு தைரியம் கிடைக்கும். உதவி பெற்று, வாழ்க்கையை சிறப்பாக முன்னெடுப்பதற்கு தைரியம் ஏற்படும்.**

## எதிர்ப்பதற்கான தைரியம்

2. வேண்டாம் எனக் கூறுதல், ஓடுதல், நம்பிக்கையானவரிடம் கூறுதல், சட்டமும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட சட்டம் அல்ல. அவ்வாறே தமது கருத்தினை நேரடியாக தெரிவிப்பதற்கு பிள்ளைகளுக்கு தைரியம் வழங்கல். தமக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும், இன்னல் ஏற்படுத்தும் நபர்களில் இருந்து வெளியேறுவதற்கு தைரியப்படுத்தல். தாம் எதிர்கொள்ளும் இடையூறு குறித்துக் கதைப்பதற்கும் மற்றும் அவற்றிலிருந்து வெளியேறுவதற்கு உதவுவதற்கும் தைரியம் கிடைக்கும். எமது நாட்டில் வன்முறையை எதிர்கொள்ளும் பெண்களில் பெரும்பாலானோர் அது குறித்து கதைப்பதற்கு, அவற்றிலிருந்து விலகுவதற்கு மற்றும் உதவி பெறுவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். அவ்வாறே உதவி பெறுவதற்கு முன்வரும் பெண்களும், மீண்டும் வன்முறைக்கு உள்ளாகின்றனர். பெண்களுக்குத் தமது பாலியல் வாழ்க்கை, பொருளாதார வாழ்க்கையைப் போன்று, சமூக வாழ்க்கை குறித்து சுயாதீனமாக தீர்மானம் எடுப்பதற்கு உள்ள வசதி குறைவாகும். சிறுவயது முதலே தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வி வழங்குவதன் ஊடாக சிறுமிகளைப் போன்றே, சிறுவர்களுக்கும் தமது கருத்து மற்றும் விருப்பம் குறித்து குரல் எழுப்புவதற்கு தைரியம் கிடைக்கும். உதவி பெற்று, வாழ்க்கையை சிறப்பாக முன்னெடுப்பதற்கு தைரியம் ஏற்படும்.

சிறுவயதிலேயே கௌரவம், செவிமடுத்தல் போன்ற விடயங்களை கற்பதன் ஊடாக சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். எனினும், அந்தக் கற்றல் வயதுக்கு ஏற்ற வகையில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாகும். உதாரணமாக, பூப்படைதல் மற்றும் அது சார்ந்த மாற்றங்கள் குறித்து கற்றல் முக்கியமாகும். அவ்வாறான மாற்றங்கள் இயற்கை உயிர்வாழ்க்கை மாற்றங்கள் எனவும், அது குறித்து வெட்கப்படத் தேவையில்லை எனவும், இளைய சமூகத்திற்கு புரிந்துணர்வை ஏற்படுத்துவது அவசியமாக இருப்பது, தமது உடல் குறித்த அவர்களின் மதிப்பினை அதிகரிப்பதற்காகும்.

பாலியல் கல்வி தொடர்பில் நிலவும் பிரதான சிக்கலாக இருப்பது, பாலியல் குறித்த கற்றலின் ஊடாக இளைஞர் சமூகம் விரைவாக பாலியல் நடத்தையில் ஈடுபடும் என்ற கருத்தாகும். பாலியல் கல்வியானது அடிப்படையில் இரண்டு வகையாக பிரிக்கப்படலாம்.

1. விலகியிருத்தலை அடிப்படையாகக் கொண்ட பாலியல் கல்வி (Abstinence based sex education)
2. தவறற்ற, முழுமையான, மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வி (Accurate, comprehensive & age appropriate sex education)

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் உலகம் முழுவதும் முன்னெடுக்கப்படும் பாலியல் கல்வி நிகழ்ச்சி 35இனை பயன்படுத்தி நடத்தப்பட்ட கல்வியின் முடிவாக இருப்பது, தவறற்ற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற கல்வியின் ஊடாக இளைய சமூகத்தினர் பாலியல் நடத்தையில் ஈடுபடுவதாக கூறப்படுவதில் எவ்வித ஆதாரமும் இல்லை என்பதாகும். அவ்வாறே விலகியிருத்தலை அடிப்படையாகக் கொண்ட கல்வி நிகழ்ச்சிகளின் பயனுறுதித் தன்மை தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வி நிகழ்ச்சிகளை விடக் குறைவு என்பதாகும்.

பாலியல் குறித்த தவறான மற்றும் கண்டனத் தகவல்களினால் இளைய சமூகமானது பாலியல் நடத்தையில் இருந்து விலகியிருக்கப் போவதில்லை. அதனால் ஏற்படும் பிரச்சினைகளை செவிமடுத்தல் மற்றும் முழுமையான புரிந்துணர்வுடைய வசதிகளை பெறுதலாகும். பாலியல் தொடர்பிலான சிக்கல்களை கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்காது போகும். பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கு இடையில் ஏற்படக் கூடிய திருமண கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பங்கள் மூடப்படும். இணக்க பாலியல் நடத்தை மற்றும் பாலியல் பலாத்காரம் என்பவற்றிற்கு இடையிலான வேறுபாடு தெளிவின்றிப் போகும். பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளான நபர்கள் வெட்கத்திற்கு உள்ளாவர். அவ்வாறே, அவர்களின் தவறானவர்கள் என்ற உணர்வு தோன்றும்.

## பால்நிலை சமத்துவம் தொடர்பான புரிந்துணர்வு

தொடர்புகள் ஊடாக அதிகாரம் நிகழும் விதம் மற்றும் சமத்துவம் குறித்த புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான சிறந்த முறை தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வியாகும். அவ்வாறான பாலியல் கல்வியின் ஊடாக இளைஞர் சமூகத்திற்கு கற்பிப்பது ஆணுறை பயன்பாடு மற்றும் குழந்தைக் கட்டுப்பாடு முறை குறித்து மாத்திரமல்ல. தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வியின் ஊடாக நபர்களின் தொடர்பு குறித்து மிகவும் சிறந்த கருத்தினை கட்டியெழுப்புவதுடன், வன்முறை குறைந்த உறவும் கட்டியெழுப்பப்படும்.

பாலியல் கல்வி தொடர்பான யுனெஸ்கோ வழிகாட்டி தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வி குறித்த சிறந்த ஆதாரமாகும். பாலியல் குறித்த தகவல்களை மாத்திரம் வழங்குவது போதியது அல்ல எனக் குறிப்பிடும் அந்த வழிகாட்டி, அதில் உள்ளடக்கப்பட வேண்டிய அத்தியாவசியமான 7 விடயங்களை முன்வைக்கின்றது. அவையாவன, பால்நிலை சமத்துவம், பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதாரமும், உரிமையும், எச்.ஐ.வி உள்ளடங்கலாக பாலியல் சார் தொற்றுகள், பாலியல் பங்கேற்பு, திருப்தி, வன்முறை, பல்வகைமை மற்றும் நபர்களுக்கு இடையிலான தொடர்பு என்பனவாகும்.

குறிப்பிட்ட தகவல்கள் உள்ளடங்கிய தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வியின் ஊடாகப் பெறுமதி மிக்க, ஒருவருக்கு ஒருவர் உரிமைகளை மதிக்கும், இளைய சமூகத்தை உருவாக்க முடியும். தமது உடல் குறித்து மரியாதை கொண்ட இளைஞர் சமூகம் ஏனையோரின் பாலியல் வாழ்க்கையின் தீர்மானங்களுக்கு மரியாதை அளிப்பர். அவ்வாறான மரியாதை நிறைந்த சமூகத்தில் வன்முறைக்கு அதிக சந்தர்ப்பம் கிடைக்காது.

இதன் காரணமாகத்தான் எம்மைப் போன்ற நாட்டிற்கு தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்விமுறை அவசியமாகும். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பெரும்பாலானோர் பாலியல் குறித்து கதைப்பது எமது கலாசாரத்திற்கு விரோதமானது என்கின்றனர். அவ்வாறு எண்ணுபவர்களிடம் கேட்க வேண்டியது ஒரு கேள்வியே. உங்கள் கலாசாரம் பெண்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவதை அனுமதிக்கின்றதா? உங்களுடைய பதில் 'இல்லை' என்பதாயின், பாடசாலைக்குள் தவறற்ற, முழுமையான மற்றும் வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வி வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். கல்வி என்பது உங்களுடைய குழந்தையின் உரிமை என்பதனை நினைவில் கொள்ளுங்கள்.

உங்களுடய பதில் ஆம் என்பதாயின், உங்களுடைய கலாசாரத்தை மாற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். உங்களால் அதனை செய்ய முடியவில்லையெனின், விரைவாக அந்த கலாசாரத்தை விட்டு வெளியேச் செல்லுங்கள். அடுத்த நிமிடத்திலேயே, உங்களுடைய குழந்தை, சகோதரர், கணவர் அல்லது மனைவி, பெற்றோர், மதத் தலைவர்கள், பொலிஸார், அரசியல்வாதிகள் அல்லது எந்தவொரு நபராலும் நீங்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகலாம். ■

பிரபா தேசப்பிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அது அவளுடைய கர்ப்பப்பை



பெண் ஓர் அற்புதமான மனித உயிரி. இந்தப் பௌதீக உலகிலே மானிட இருப்பினைத் தக்கவைப்பதில் அவளின் கருப்பை எனும் சின்னஞ் சிறிய உலகுக்கு மிகப் பெரும் பங்குண்டு. அந்த மனித மறு உற்பத்தி ஆற்றல் ஒரு வரமாக இருப்பது போலவே, வேறு சில சந்தர்ப்பங்களில் ஒரு சாபமாக மாறிவிடும் நிலையும் அறவே இல்லாமல் இல்லை.

கடந்த காலங்களில் இலங்கை முஸ்லிம் சமூகம் பற்றிய கதையாடல்களின் போதோ, முஸ்லிம் சமூகத்தின் மீதான வெறுப்பரசியல் உணர்வு தூண்டப்படும் போதோ, அவர்கள் அதிக பிள்ளைகளைப் பெறுவது பற்றிய கருத்து மேலெழுந்தது. அவ்வாறே, தீவிர வலதுசாரி சிங்கள பௌத்தர்களால் தமது இனத்தின் நிலைபேறாக்கத்திற்காக ஒவ்வொரு சிங்களப் பெண்ணும் குறைந்தது ஐந்து பிள்ளைகளைப் பெற்றுத் தரவேண்டும் என்ற குரல் எழுப்பப்பட்டது. இந்தியாவிலும் வலதுசாரி ஹிந்துத்துவா அமைப்பினர் இதே கோரிக்கையை முன்வைத்து, ஹிந்துப் பெண்கள் அதிக பிள்ளைகளைப் பெறவேண்டும் எனக் கோரினர். பொஸ்னியப் பெண்களை முகாம்களில் அடைத்து வைத்து, அவர்கள் கருவுறும் வரையும் சேர்பிய இராணுவம் தொடர்ச்சியாகக் கூட்டுப் பாலியல் வல்லுறவு செய்தது. நைதீரியாவின் பொகோ ஹராம் தீவிரவாதக் குழு பள்ளிச் சிறுமியரைக் கடத்திச் சென்று பாலியல் அடிமைகளாய் நடத்தியதில் அனேக சிறுமிகள் கர்ப்பவதிகள் ஆகியிருந்தனர். தமது இனத்தை, மதத்தை, சாதியைச் சார்ந்த பெண், அதே இனத்தை, மதத்தை, சாதியைச் சாராத ஒருவரால் கருவுறும் நிலையைச் சகிக்க முடியாமல் ஆங்காங்கே கௌரவக் கொலைகள் இடம்பெற்று வருகின்றன. ஹிட்லர் கால ஜேர்மன் அரசும் தற்போதைய இஸ்ரேலிய அரசும் இனத்தூய்மை, பிற இனக் கலப்பின்மை தொடர்பில் கொண்ட தீவிர அக்கறை மிக வெளிப்படையானது. சீன அரசு ஒரு குழந்தைக்குமேல் பெறக்கூடாது எனச் சட்டம் இயற்றியிருந்தது.

இவ்வாறாக, இனத்துவ - சமய மோதல்கள் என்று வரும்போதும், அதிகாரப் போட்டி உள்ளிட்ட பல்வேறு காரணங்களை அடிப்படியாக வைத்தும் அவற்றின் விளைவினைப் பெண்ணுடல் மீது நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ பிரயோகிக்கும் முறைமை - இன்னொரு வகையில் சொல்வதானால் பெண்ணுடல்,

> **"இனத்துவ - சமய மோதல்கள் என்று வரும்போதும், அதிகாரப் போட்டி உள்ளிட்ட பல்வேறு காரணங்களை அடிப்படியாக வைத்தும் அவற்றின் விளைவினைப் பெண்ணுடல் மீது நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ பிரயோகிக்கும் முறைமை - இன்னொரு வகையில் சொல்வதானால் பெண்ணுடல், அல்லது அவளுடைய கருப்பை அரசியலாக்கப்படுகின்றது."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அவளுடைய கருப்பை அரசியலாக்கப்படுவது - தொன்று தொட்டு உலகின் பல்வேறு நிலங்களிலும் நிலவி வருகின்றது என்பதையே மேற்படி நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆக மொத்தத்தில் காலங் காலமாகப் பெண்ணுடல், குறிப்பாக அவளுடைய கருப்பை ஓர் அரசியல், இனத்துவ, சமூகப் பொருளாதார ஆயுதமாகவும் மறுதலையாக, வன்மத்துக்கு இலக்காக்கிப் பழி தீர்க்கும் போர்க் களமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை வரலாறு நெடுகிலும் நாம் காண்கிறோம்.

மனித மறுவுருவாக்கம் என்பது பெண்ணுடைய இயற்கையான ஆற்றலாகும். அதனை அடிப்படையாக வைத்து, அவள் அதிக குழந்தைகளைப் பெற்றுத் தர வேண்டும் என்றோ, ஒரேயொரு பிள்ளைக்குமேல் பெறக்கூடாது என்றோ, ஆண் குழந்தைகளை மட்டுமே பெறவேண்டும் என்றோ ஒரு பெண்ணின் கருப்பை மீது பிறப்பிக்கப்படும் சட்டங்களும் நிர்ப்பந்தங்களும் அவள் மீதான அத்துமீறலாகும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

நாம் வாழும் சமூகத்தில் பெண்களின் நிலை முன்னரை விட மேம்பட்டுள்ளது, சுதந்திரமானதாக மாறியுள்ளது என்றெல்லாம் பேசப்பட்டு வருகின்றது. அதேவேளை, அவள் குழந்தை பெறும் ஓர் இயந்திரமாகக் கருதப்படும் சமூக மனநிலை முற்றாக மாறிவிட்டது என்று ஏக மனதாகச் சொல்ல முடியாத ஒரு சூழ்நிலை காணப்படுவதையும் மறுப்பதற்கு இல்லை.

இந்நிலையில்,'அது அவளுடைய கருப்பை' என்ற பிரக்ஞையும் அதனூடு எப்போது, எத்தனை பிள்ளைகள் பெறவேண்டும் முதலான தீர்மானங்களின்போது அவளுடைய வகிபாகமும் மிகவும் அடிப்படையானது. தேவையான போது குடும்பத் திட்டமிடல் மேற்கொள்வதில் எந்தத் தவறுமில்லை என்பன தொடர்பில் ஆழமான புரிதலும் மக்கள் மத்தியில் பரவலடைய வேண்டும்.

இந்தப் பின்புலத்தில், குழந்தைப்பேறு மற்றும் குடும்பத் திட்டமிடல் தொடர்பில் இஸ்லாம் என்ன சொல்கிறது என்பதை ஆராய்வதும், முஸ்லிம் சமூகத்தில், குறிப்பாகப் பெண்கள் மத்தியில் அது பற்றிய புரிந்துணர்வைப் பரவலாக்குவதுமே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

*மனித மறுவுருவாக்கம் என்பது பெண்ணுடைய இயற்கையான ஆற்றலாகும். அதனை அடிப்படையாக வைத்து, அவள் அதிக குழந்தைகளைப் பெற்றுத் தர வேண்டும் என்றோ, ஒரேயொரு பிள்ளைக்குமேல் பெறக்கூடாது என்றோ, ஆண் குழந்தைகளை மட்டுமே பெறவேண்டும் என்றோ ஒரு பெண்ணின் கருப்பை மீது பிறப்பிக்கப்படும் சட்டங்களும் நிர்ப்பந்தங்களும் அவள் மீதான அத்துமீறலாகும்*

இஸ்லாம் குழந்தைப் பேற்றைக் கணவன் - மனைவி இருவருக்கும் இடையிலான ஒரு கூட்டு உரிமையாகவே (Shared right) கருதுகின்றது. அவர்கள் இருவரதும் ஒருங்கிணைந்த முடிவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டிய ஒரு நடைமுறையாகும். முஸ்லிம் சமூகத்தில் உள்ள பலர் நம்பிக்கொண்டு இருப்பதுபோல, அது தனியே கணவனின் தீர்மானத்துக்கு மட்டும் உரியது என இஸ்லாம் ஒருபோதும் கூறவில்லை. எனினும், சிலர் அது கணவனின் தனி உரிமையே என்று நிறுவும் பொருட்டுப் பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை ஆதாரமாகக் காட்டுவார்கள்:

"உங்கள் மனைவியர் உங்கள் விளைநிலங்கள் ஆவார்கள். எனவே, உங்கள் விருப்பப்படி உங்கள் விளை நிலங்களுக்குச் செல்லுங்கள்..." (சூறா அல்பகரா:223)

எனினும், இந்தக் குர்ஆன் வசனம், உடலுறவின் போதான உச்ச இன்பத்தைப் பெறுவதில் தெளிவாக தடைவிதிக்கப்பட்ட சில நடைமுறைகள் தவிர்த்து ஏனைய வழிமுறைகள் ஆகுமானவையே என்பதைக் குறிப்பிடும் வகையிலேயே உள்ளதே அல்லாமல், பிள்ளைப்பேறு தொடர்பில் கணவனின் தனித் தீர்மானத்தை நிர்ணயிப்பதற்காக அருளப்பட்டதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக, முஸ்லிம்களின் மத்தியில் குடும்பத் திட்டமிடல் தொடர்பில் எதிர்மறையான கருத்து நிலவிவருவதை நாம் அறிவோம். அதற்கான காரணம், அதனை ஒரு பாவச் செயல் என்றும், சிசுக்கொலை என்றும் அவர்கள் நம்பி வருவதாகும். இஸ்லாம் அதனை அங்கீகரித்துள்ளது என்ற விடயம் பற்றிப் போதிய தெளிவின்மையே இதற்கான காரணமாகும். உண்மையில், நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் காலத்தில் "அஸ்ல்" எனப்படும் குடும்பக் கட்டுப்பாட்டு முறை ஒன்று கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அதாவது, உடலுறவின் போது, கணவன் தனது விந்தினை மனைவியின் கருப்பைக்குள் விடாமல், வெளியே விடும் முறையே "அஸ்ல்" எனப்படுகின்றது. அதேவேளை, உடலுறவின் போதான இன்பம் தொடர்பில் பெண்ணின் உரிமையைக் கருத்திற்கொண்டு அவ்வாறு 'அஸ்ல்' செய்யும் போதுகூட மனைவியின் விருப்பமும் அனுமதியும் முக்கியமானது என நபியவர்கள் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

குடும்பத் திட்டமிடல் தொடர்பில் இஸ்லாத்தின் நிலைபாட்டைத் தெளிவுறுத்துமுகமான இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைச் சற்று விரிவாக நோக்குவது அது பற்றிய தெளிவினைப் பரவலாக்கும். எனவே, இஸ்லாமிய அறிஞர்கள் சிலரின் கருத்துக்களை நோக்குவோம்:

**அல் அஸ்ஹரின் இஸ்லாமிய அறிஞர் கலாநிதி மர்ஹூம் ∴புஆத் முகைமார்:** இஸ்லாத்தைப் பொறுத்தவரை, திருமணத்தின் அதி உன்னதப் பயன் குழந்தைப் பேறாகும். எனினும், கணவன் - மனைவி இருவருக்கும் குழந்தை பெற்றுக்கொள்வது தொடர்பில் ஏதேனும் இடர்ப்பாடுகள் நிலவும் பட்சத்தில், அதன் விளைவாக அவர்களிடையேயான அன்புக்கும் அன்னியோன்னியத்துக்கும் ஊறு விளையாது என்ற உத்தரவாதத்துடனான உடன்பாட்டின் அடிப்படையில் அவர்கள் அதனைத் தவிர்த்துக்கொள்ளலாம். அவர்களின் பொறுமைக்கு அல்லாஹ் அருள்செய்வானாக.

**இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள் மற்றும் ஆய்வுகளுக்கான ஐரோப்பியக் கவுன்ஸிலின் பிரதிப் பணிப்பாளரான அஷ்ஷேய்க் ∴பைஸல் மவ்லவி:** சில அறிஞர்கள் மனைவியின் விருப்பம் இல்லாமலும் அஸ்ல் செய்யலாம் எனக்கூறியுள்ள போதிலும், ஒரு கணவன் தன் மனைவியின் அனுமதியோடு 'அஸ்ல்' செய்யலாம் என்பதை பெரும்பான்மையான இஸ்லாமிய அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். மேலும், மார்க்கம் அனுமதிக்கும் காரணங்களுக்காக அல் அஸ்லின் நோக்கத்தை அடையக்கூடிய விதத்திலான நவீன விஞ்ஞான நடைமுறைகளைப் பின்பற்றலாம் என்பதைப் பெரும்பான்மையான இஸ்லாமிய அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அவ்வாறே, ஒரு மனைவி குழந்தை பெற்றுக்கொள்வதை விரும்பவில்லை எனில், எல்லா வகையான 'அஸ்ல்' முறைகளும் அனுமதிக்கப்பட்டதாகும் என்பதை அனைத்து அறிஞர்களும் ஏற்றுக்கொள்கின்றனர்.

**அஷ்ஷேய்க் அப்துல் காலிக் ஹஸன் அஷ்ஷரீ∴ப்:** இஸ்லாத்தின் பார்வையில் திருமண வாழ்வின் மிக அடிப்படையான எதிர்பார்க்கைகளில் குழந்தைப் பேறும் ஒன்றாகும். சட்டபூர்வமான முறையில் தமது வாரிசைப் பெறுவதையும் பாலியல் இயல்பூக்கத்தைப் பூர்த்திசெய்வதையும் இறைவன் அனுமதித்துள்ளான். முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கு 'அல் அஸ்ல்' செய்வதற்கு அனுமதித்துள்ளதோடு, குழந்தைப் பேறு தொடர்பில் அல்லாஹ் நாடியதை யாராலும் தடுத்துவிட முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, கணவன் - மனைவி ஆகிய இருவரதும் உடன்பாட்டின் அடிப்படையில் 'அல் அஸ்ல்' செய்வதை இஸ்லாமிய அறிஞர்கள் அங்கீகரித்துள்ளார்கள். எனின், மனைவி அதனை விரும்பவில்லை என்றால், அவ்வாறு செய்வது தடுக்கப்பட்டுள்ளது. ஒரு மனைவி தாய்மை எய்த விரும்பினால் அவளுடைய அவ்வுரிமையை மறுப்பதற்கு அவளது கணவனுக்கு எந்தவித சட்டபூர்வ உரிமையும் இல்லை.

**அஷ்ஷேய்க் யூஸு∴ப் அல் கர்ளாவி:** மனித இனம் அழிவுற்று விடாமல் காக்கும் வகையில் மனித மறு உற்பத்தியை மேற்கொள்வது திருமணத்தின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும். அதன்படி, குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதை இஸ்லாம் வரவேற்கிறது. ஆண் - பெண் சந்ததிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் நன்மாராயம் கூறுகின்றது. நியாயமான காரணங்களுக்காகவும் தேவைப்பாடுகளுக்காகவும் குடும்பத் திட்டமிடலை இஸ்லாம் அங்கீகரித்துள்ளது. இதன் பொருட்டு நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பொதுவான குடும்பத்திட்ட நடவடிக்கையாக 'அல் அஸ்ல்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டுள்ளது. அல்குர்ஆன் அருளப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில்கூட நபித்தோழர்கள் இம்முறையைக் கைக்கொள்பவர்களாக இருந்துள்ளனர் என ஜாபிர் (றழி) அறிவித்துள்ளார்கள். (ஸஹீஹ் புஹாரி, முஸ்லிம்). மேலும், மற்றோர் அறிவிப்பில் "இறைதூதர் (ஸல்) அவர்களது காலத்திலும் நாம் 'அஸ்ல்' செய்து கொண்டிருந்தோம். அது பற்றிய செய்தி அவர்களை எட்டிய போதிலும், அவர்கள் எங்களை அதிலிருந்து தடுக்கவில்லை" (ஸஹீஹ் முஸ்லிம்) என ஜாபிர் (றழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாறாக, இஸ்லாத்தில் குடும்பத் திட்டமிடலுக்கான அனுமதியும் வழிகாட்டலும் வழங்கப்பட்டுள்ளதோடு, குழந்தையைப் பெற்றுக் கொள்வதா, இல்லையா என்ற இறுதித் தீர்மானம் தொடர்பில் கருவைச் சுமப்பவளான பெண்ணுக்குள்ள உரிமைக்குக் கண்ணியமளித்துள்ளது. கருவைச் சுமக்கும் பெண்ணின் உடல்நிலை, மனநிலை பற்றிய கரிசனையை இஸ்லாம் வலியுறுத்துகின்றது என்பதும் பெண்ணை வெறுமனே ஒரு குழந்தை பெறும் இயந்திரமாகப் பார்ப்பதை அது அங்கீகரிக்கவில்லை என்பதும் இதன்மூலம் மிகத் தெளிவாகப் புலப்படுகின்றது.

எனவே, ஒரு குழந்தையைப் பெறுவது தொடர்பில் பெண்ணின் உடல்நிலை, மனநிலை, குடும்பச் சூழல், தாய் - சேய் ஆரோக்கியம் முதலான இன்னோரன்ன அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இவ்வம்சங்களைக் கருத்திற்கொள்வதோடு, இரண்டு குழந்தைகளுக்கு இடையில் ஆகக் குறைந்த பட்சம் இரண்டு வருட இடைவெளியையேனும் பேணுவதை ஊக்குவிக்கின்றது என்பதை, 'இரண்டு வருடகாலம் குழந்தைக்கு நிரப்பமாகப் பாலூட்டுதல்' தொடர்பான குர்ஆன் (2:233) வசனத்தில் இருந்து அறிந்துகொள்ள முடியும். அங்கும்கூட, தாய்ப்பாலை இடைநிறுத்துவது தொடர்பில் கணவனும் மனைவியும் கலந்து பேசி முடிவெடுப்பதை இஸ்லாம் வரவேற்கிறது.

குடும்பத்திட்டமிடல் குறித்த பேச்சு மேலெழும் போதெல்லாம், சிலர் அதனைப் பாவகாரியமாகக் கருதுவதோடு, "நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள் அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை (வாழ்க்கை வசதிகளையும்)

ஒரு குழந்தையைப் பெறுவது தொடர்பில் பெண்ணின் உடல்நிலை, மனநிலை, குடும்பச் சூழல், தாய் - சேய் ஆரோக்கியம் முதலான இன்னோரன்ன அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

அளிக்கின்றோம் - அவர்களைக் கொல்லுதல் நிச்சயமாகப் பெரும் பிழையாகும்." (17:31.) என்ற குர்ஆன் வசனத்தை முன்வைத்து, தமது குடும்பத்தின் பொருளாதார நிலையினைக் கருத்திற் கொண்ட எந்தத் திட்டமிடலும் இன்றி அடுத்தடுத்துக் குழந்தைகள் பெறுவதைச் சரியான நடைமுறை எனக் கருதுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதுவும் ஒரு தவறான புரிதலாகும். காரணம், சிசுக் கொலையைத் தடுக்கும் முகமான இறை வசனமே அதுவாகும். வறுமையைக் காரணமாக வைத்துப் பெற்ற குழந்தையைக் கொல்வதும், தெருவிலே வீசி எறிந்துவிட்டுச் செல்வதும் மனிதத்தன்மையற்ற செயல்களே என்பதை அறிவுள்ள எவரும் ஏற்றுக்கொள்வர். எனவே, அவ்வாறு பிள்ளையைப் பெற்றபின் அநீதி இழைப்பதை விட, உரிய திட்டமிடல்களோடு குழந்தைப் பேற்றினைக் கையாள்வது மேலானதாகும் என்பதில் ஐயமில்லை.

உண்மையில், குடும்பத்தின் பொருளாதார நிலைமையை அடிப்படையாக வைத்து வாழ்க்கைத் தீர்மானங்கள் எடுப்பதை இஸ்லாம் புறக்கணிக்கவில்லை என்பதற்குப் பின்வரும் அல்குர்ஆன் வசனமும் நபிமொழியும் ஆதாரமாக இருக்கின்றன:
"விவாகம் செய்வதற்கு (உரிய வசதிகளைப்) பெற்றுக் கொள்ளாதவர்கள் - அவர்களை அல்லாஹ் தம் நல்லருளினால் சீமான்களாக்கும் வரை - அவர்கள் ஒழுக்கம் பேணட்டும்..." (24:33.)

"இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில், திருமணத்திற்கான செலவினங்களுக்குச் சக்திபெற்றவர் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யட்டும். ஏனெனில், திருமணம் (அன்னியப் பெண்களைப் பார்ப்பதைவிட்டும்) பார்வையைக் கட்டுப்படுத்தும் கற்பைக் காக்கும். யார் அதற்குச் சக்தி பெறவில்லையோ அவர் நோன்பு நோற்கட்டும். அது அவரின் இச்சையைக் கட்டுப்படுத்தும்" என அப்துல்லாஹ் (ரலி) அறிவித்தார். (ஸஹீஹ் புஹாரி 1905).
எனவே, ஒருவர் திருமணம் முடிப்பதற்கான முன்னிபந்தனையாக அவரது பொருளாதார நிலைமை கவனத்திற் கொள்ளப்படுகின்றது. அதாவது, அவரது குடும்ப வாழ்வைக் கொண்டு நடத்துவதற்கான, மனைவி மற்றும் குழந்தைகளின் தேவைகளை நிறைவுசெய்யும் பொருளாதாரத்தை அவர் கொண்டிருக்க வேண்டும் என்பது அடிப்படை நிபந்தனை என்றாகிறது. ஆகவே, "இறைவன் தருகிறான், பெறுகின்றோம்" என்று கூறிக்கொண்டு, தேவையான தயாரிப்புகள் அற்ற நிலையில் வருடந்தோறும் அடுக்கடுக்காய்க் குழந்தைகளைப் பெறுவதோ, அவர்களின் உணவு, கல்வி முதலான அடிப்படைத் தேவைகளை உரிய விதத்தில் நிறைவேற்ற முடியாமல் அல்லாடுவதோ இஸ்லாம் காட்டித்தரும் முறைமை அல்ல என்ற புரிந்துணர்வும், இதுபோன்ற விடயங்களில் போதிய திட்டமிடலும், நிதானமான போக்கும் கைக்கொள்ளப்படல் வேண்டும் என்ற விழிப்புணர்வும் பாமர மக்களிடையே பரவலாக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அடுத்து, கருக்கலைப்பு தொடர்பில் இஸ்லாத்தின் கண்ணோட்டம் என்ன என்பது பற்றியும் நோக்குதல் வேண்டும். கருக்கலைப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் பேராசிரியர் தாரிக் ரமதான், 'இதுதொடர்பில் இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் வித்தியாசமான கருத்துக்கள் நிலவுகின்றன. கருக்கலைப்புக் கூடாது என்பதே ஒருமித்த பொதுவான கருத்தாக இருக்கின்றது. ஒரேயொரு விதிவிலக்கான சந்தர்ப்பத்தில் மட்டுமே கருக்கலைப்பினை மேற்கொள்ளலாம் எனப் பெரும்பாலான அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர். கருவில் இருக்கும் குழந்தையினால், தாயின் உயிருக்கு ஆபத்து நேரும் என இருக்குமானால், தாயைக் காக்கும் நோக்கில் கருக்கலைப்பினை மேற்கொள்ளலாம் என்பதே அப்பொதுவான நிலைப்பாடாகும். எனினும், 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இஸ்லாமிய அறிஞர் அபூ ஹாமித் முஹம்மத் அல் கஸ்ஸாலி அவர்கள், சிலகுறிப்பிட்ட நியாயமான காரணங்களின் அடிப்படையில் கருவுற்ற மூன்று மாத காலங்களுக்குள் கருக்கலைப்புச் செய்யலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். பாலியல் வல்லுறவினால் கருத்தரித்த ஒரு பெண்ணைப் பொருத்தவரையில், அக்கருவினைக் கலைப்பது தொடர்பில் ஸவூதியை மையமாகக் கொண்ட அறிஞர்கள் கூடாது என்றே கருத்துரைத்த போதிலும் ஏனைய அறிஞர்கள் அவ்வாறு செய்ய இயலும் என்றே குறிப்பிடுகின்றனர். அவ்வறே, பிறக்கப்போகும் குழந்தை மூளை வளர்ச்சி குன்றியதாகவோ அதுபோன்ற வேறு மோசமான நோய்க்குறிகளைக் கொண்டதாகவோ அமையுமிடத்தும் உரிய வழிகாட்டல்களுக்கு அமைய கருக்கலைப்பினை மேற்கொள்ளலாம்' எனத் தனது உரையொன்றில் தெளிவுறுத்துகின்றார்.
எனினும், 'கருக்கலைப்பு ஆகுமானது, அனுமதிக்கப்பட்டது என்று எல்லோருக்கும் பொதுவான ஒரு முடிவு எடுக்க முடியாது' எனவும், 'மருத்துவக் காரணங்கள், பாலியல் வல்லுறவினாலான கர்ப்பம் முதலாக மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகளின்போது மட்டும், உரிய வழிகாட்டல்களோடு செய்யத்தக்க விதிவிலக்கான ஒரு செயற்பாடாகுமே அன்றி ஒரு பொதுவான செயற்பாடல்ல' என்றும் அவர் தனது உரையில் திட்டவட்டமாக அறிவுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, பிள்ளைப்பேறு, குடும்பத்திட்டமிடல், கருக்கலைப்பு முதலான அம்சங்களில் இஸ்லாம் பெண்ணின் விருப்பம், உடல்நிலை, மனநிலை முதலான இன்னோரன்ன நலன்சார்ந்த அம்சங்களை அடிப்படையாக வைத்து பெண்ணுடைய உரிமைகளுக்குப் போதிய முக்கியத்துவம் வழங்கியுள்ளது என்பதையும், அவை தொடர்பான விழிப்புணர்வும் புரிந்துணர்வும் சமூகத்தில் பரவலாக வேண்டிய தேவை உள்ளது என்பதையும் நாம் உணர்ந்துகொள்ளலாம். ■

லறீனா ஏ. ஹக்

---

உசாத்துணைகள்:
*யூஸுப் அல் கர்ளாவி, (2008)* ஸுன்னாவை அணுகும் முறை: அடிப்படைகளும் நியமங்களும் *(மொழிபெயர்ப்பு), தர்கா நகர்: /புஸின் டெக்ஸ்ட்ஸ்.*
වෛද්‍ය නජිමුදීන් එම්.එල්.,
ඉස්ලාම් ධර්මය සහ පවුල් සැලසුම්, දර්ගා නගරය:
පාඨක කවය (ස්ටඩි සර්කල්)
http://goo.gl/j4Qe0B
https://www.youtube.com/watch?v=IrFJHqr77DQ
https://goo.gl/hjg7H9
http://academicjournals.org/article/article1379855512_Noor%20et%20al.pdf



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் சடங்கு நிகழ்த்துகையும் பெண்ணிலைப் பங்குபற்றலும்



தாய்த் தெய்வவழிபாட்டுமுறை தொன்றுதொட்டே இருந்து வந்துள்ளது. சிவனைக் குறிக்கும் இலிங்க வணக்கமும் (ஆண்குறி) சக்தி அல்லது (பெண்) தாயைக் குறிக்கும் முக்கோணமும் (பெண்குறி) சிந்துவெளி நாகரிக காலந்தொட்டே காணப்படுகிறது. மனிதர் பிறப்பதற்குக் காரணமாக இருக்கும் உறுப்பையும் அவ்வுறுப்பை உடையவளையும் கடவுளென வழிபடுவது மரபாகக் காணப்பட்டது. இத்தகைய மரபின் தொடர்ச்சியாகவே தாய்த் தெய்வ வழிபாட்டு மரபு அம்மன் சடங்காக நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

ஈழத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் அவதானித்தமைக்கமைய அம்மன் சடங்குக் கோயில்களில் சடங்கு நிகழ்த்துகையில் அதிகளவில் ஆண்களே சம்மந்தப்படுவதனைக் காணலாம். தாய்த தெய்வ வழிபாட்டு முறையில் பெண்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். பெரும்பாலும் அம்மன் கோயில்களில் நிகழும் பூசைகளைச் செய்யும் பூசகர் ஆணாகவே உள்ளார். பூசகர் அம்மனாக வேடமணிந்து ஊர்வலம் போதல், தீமிதித்தல் முதலான வழிபாட்டு நிகழ்வுகளில் மஞ்சள்பூசி குங்குமமிட்டு சேலை, வளையல் அணிந்து சடங்கை நிகழ்த்துவார். அம்மன் சடங்கு

*ஓங்காரமுக்கோணம் என்னும் அடிப்படையில் மனிதர் பிறப்பதற்குக் காரணமான பெண்ணுறுப்பைப் போற்றுவதான தாய்த் தெய்வ வழிபாட்டு மரபைப் பின்பற்றும் அதேவேளை, பிறப்புக்கு காரணமாக அமையும் பெண்ணின் உடலியல் அம்சம் "விலக்கு" எனவும் "துடக்கு" எனவும்" "தெய்வக்குற்றம" எனவும் ஓதுக்கப்படுவது முரண்நிலையினையும் பெண்ணிலைப் புறக்கணிப்பினையும் வெளிப்படுத்துகிறது.*

நிகழும் எந்தவொரு ஆலயத்திலும் பூசகர் எனும் நிலையில் பெண்களின் பங்களிப்பைக் காணமுடியவில்லை.

ஆலயக் கடமைகளில் பெண்களின் பங்குபற்றல் மறுக்கப்படுவதற்கு - மாதவிலக்காதலைக் காரணம் காட்டிவந்துள்ளனர். இதனைத் துடக்கு எனவும் தெய்வக் குற்றம் எனவும் கூறிவந்துள்ளனர். இதனால் இத்தகைய உடலியல் தன்மைகொண்ட பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கடமைகளில் ஈடுபடுவது
தவிர்க்கப்படல் வேண்டும் என்பது
வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

ஓங்காரமுக்கோணம் என்னும்
அடிப்படையில் மனிதர் பிறப்பதற்குக்
காரணமான பெண்ணுறுப்பைப்
போற்றுவதான தாய்த் தெய்வ வழிபாட்டு
மரபைப் பின்பற்றும் அதேவேளை
பிறப்புக்கு காரணமாக அமையும்
பெண்ணின் உடலியல் அம்சம்
விலக்கு எனவும் துடக்கு எனவும்
தெய்வக்குற்றம் எனவும் ஒதுக்கப்படுவது
முரண்நிலையினையும் பெண்ணிலைப்
புறக்கணிப்பினையும் வெளிப்படுத்துகிறது.

அம்மன் சடங்கு நிகழ்த்துகையுடன்
தொடர்புபட்ட அம்மன் சடங்குப்
பாடல்களைப் பாடுவோர் மரபினை
நோக்கும்போதும் இதேநிலைமையையே
அவதானிக்கலாம். காவியம்,
அம்மானை, தவநிலை, உருவேற்றல்
முதலான பாடல்களை ஆண்களே
பாடுகின்றனர். உடுக்கு மற்றும்
பறை முதலா இசைக்கருவிகளையும்
இவர்களே இசைக்கின்றனர்.
இதற்கும் மேற்குறிப்பிட்ட காரணமே
அடிப்படையாகும்.


தெய்வம் ஆடுதல் என்னும் நிலையினை
நோக்கும் போதும் மாரி, காளி,
பேச்சி முதலான பெண் தெய்வங்கள்
ஏறிஆடுபவர்களாக ஆண்களே
உள்ளனர். ஒரு சில ஆலயங்களில்
மிகவும் வயதான பெண்கள் குந்தி, மாரி
முதலான பெண் தெய்வங்களாக உருவேறி
ஆடுகின்றமையை அவதானிக்கலாம்.
இதுவும் அரிதாகவே காணப்படுகிறது.

"ஓங்கார முக்கோணம்- என் தாயே நீ

ஓடிவர வேணுமம்மா"

எனஅம்மன் கோயில்களில்
உரத்துப்பாடும் ஆண்கள் அதன்
அர்த்தத்தை விளங்கிக் கொள்ளாமல்
அல்லது முரண்நிலையில்
அதற்குமாறானதாக பெண்களைப்
புறக்கணித்து வருவது காலங்காலமாக
இருந்துவரும் செயற்பாடாகும். ■

சேரலாதன்



# மறக்கப்பட வேண்டியவை

என்னைப் புரிந்து கொள்ளாத
உறவுகளிடையே
தனிமையை உணர்கின்றேன்.
என் எதிர்பார்ப்புக்களுக்கெல்லாம் கிடைத்த
ஒரே பதில் மௌனம் மட்டுமே.

ஒரு பூ ந்தோட்டமாக
பூ த்துக் குலுங்க எனக்கும் ஆசை தான்.
ஆனால்,
காய்ந்து போன சருகு என்று
காரணங்கள் கற்பிக்கப்பட்டேன்.
இரகசியமாக
என் கனவுகள்
ஆசைகள்
இருட்டடிப்புச் செய்யப்பட்டன.
எவர் எப்படி என்னை
விமர்சித்தாலும் கவலையில்லை.
என் உணர்வுகள்
எனக்கே உரித்துடையவை.
இன்னும் என்னால்
இறந்த காலங்களுடன்
வாழ முடியாது.
நான் பட்ட மரமல்ல
துளிர்விடுவேன்
இன்னும்
புதுப் பொலிவுடன்.


கௌதமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை...

# கிணற்றிலிருந்து மீண்டவள்



https://lwgsummerland.wordpress.com

**"அதுக்கு உங்களை மாதிரி சீதேவியப் பெத்திருக்கணும்மா. எனக்கு அதுக்கெல்லாம் கொடுப்பின இல்ல."**

தங்கம் என்னைப் பார்த்துக் கொண்டே உம்மாவிடம் சொன்னபோது எனது முகத்தில் என்ன உணர்ச்சியைக் கொண்டு வருவதென்று எனக்குத் தெரியவில்லை. அவள் சொன்னது ஒரு மெல்லிய புகையைப் போல அந்த இடமெங்கிலும் பரவியது. அந்தச் சமையலறையை அடைத்துக் கொண்டு வெளியேற முடியாமல் தவிப்பதைப் போலத் தோன்றியது. சில்லறைக் காசைச் சுரண்டுவது போல ஒரு குரல் தங்கத்துக்கு. பேசும்போது குரல் பிசிறடிக்கும். மெல்லிய குரலும் பலத்த குரலும் ஒன்றுடனொன்று பின்னிக் கொண்டு வெளியே வரப்பார்க்கும். ஆனாலும் வாய் ஓயாமல் ஏதாவது பேசிக் கொண்டே இருப்பாள்.

எனது சிறு வயதில் தங்கம் இப்படிச் சொல்லி உம்மாவிடம் சலித்துக் கொள்ளும்போதெல்லாம் சிரித்துக் கொண்டே வெட்கத்தோடு உம்மாவின் மடியில் தலை புதைத்துக் கொள்வேன். உம்மா தலைகோதி விடுவாள். அப்பொழுதே எனக்கு நீளமான தலைமயிர். தங்கம் அருகே அழைத்து, காலடியில் அமரவைத்துக் கொண்டு, பொறுமையாக வலிக்காமல் சிக்கெடுத்து, எண்ணெய் வைத்துப் பின்னி ரிப்பனால் கட்டிவிடுவாள். பின் திரும்பச் சொல்லி முகத்தைப் பார்த்து, தனது வலது கை விரல்களால் என் கன்னத்தை வழித்தெடுத்து தனது உதட்டருகே வைத்து விரல்களுக்கு முத்தமிட்டுக் கொள்வாள். இல்லாவிட்டால் எனது நெற்றியின் இரு பாகங்களிலும் அவளது இரு கை முஷ்டிகளையும் முட்டுக் கொடுப்பதுபோல் வைத்து திருஷ்டி கழிப்பாள். "ராசாத்தி, யாரோட கண்ணும் படாம செழிப்பா நல்லா இருக்கணும்" என்பாள்.

அவளது மகள் புஷ்பராணிக்கு என்னை விடவும் ஓரிரு வயது குறைவு. சிறுவயதில் அவளது தலைமுடி எண்ணெய் காணாது செம்பட்டைக் கலரில் காற்றில் அலைபாய்ந்தபடியிருக்கும். அதிலும் சுருட்டை முடி. சுருண்டு சுருண்டு மேலும் சுருள் வழியற்றுப்போன அளவுக்குச் சுருட்டை முடி. சிக்கலும் ஈரும் பேனும் நிறைந்து இருக்கும். அவளது தோளில், சட்டையிலென சின்னச் சின்னப் பேன் குஞ்சுகள் ஊர்ந்து திரியும். இதனாலேயே உம்மா ஒரு நாளும் அவளுடன் சேர்ந்து விளையாட என்னை அனுமதித்ததில்லை. இப்பொழுது வரைக்கும் ஒரு நாளும் தங்கம் அவளை அருகிலமர்த்திப் பேன் பார்த்து, எண்ணெய் வைத்துத் தலை சீவி விடுவதை நான் கண்டதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம் எங்கள் வாழைத் தோட்டத்துக்கு மத்தியிலிருந்த குடிசையில்தான் வசித்து வந்தாள். எங்கள் வாழைத்தோட்டத்தை யாராவது இருந்து பராமரிக்கவென்று அமைத்த குடிசை அது. நான் பிறக்கமுன்பே அவ்வேலைக்கென்று புஷ்பராணியின் அப்பா வந்துவிட்டாராம். அவராகவே நிர்மாணித்த அக்குடிசையிலிருந்துதான் இப்பொழுதிருக்கும் வாழைக் கன்றுகளின் தாய்வாழைகளை நட்டிருக்கிறார். பிறகு அவர் ஒரு முறை ஊருக்குப் போய் வரும்போது தங்கத்தைத் திருமணம் முடித்து அழைத்து வந்திருக்கிறார். உம்மாவுக்குப் பிரசவநேரம். கையுதவிக்கு ஒரு பெண் கிடைத்தாயிற்று என வாப்பாவும் ஒன்றும் சொல்லவில்லையாம். புஷ்பராணியின் அப்பா தோட்டவேலைகளைக் கவனிக்க, தங்கம் எங்கள் வீட்டுவேலைகளைப் பொறுப்பெடுத்துக் கொண்டாள். பிறகுதான் புஷ்பராணி பிறந்தாள். அவள் பிறந்து ஓரிரு நாளில் தங்கத்தின் அம்மா இறந்துவிட்டதாகச் செய்தி வந்தது. மூத்தது பெண்ணாய்ப் பிறந்ததுவும், அதுவும் பிறந்த உடனேயே தன் உறவு ஒன்றினைக் காவு எடுத்ததுவும் தங்கத்துக்குப் பிடிக்காமல் போயிற்று. புஷ்பராணி பிறந்தது அபசகுனமெனத் திட்டிக் கொண்டே இருந்தாள்.

அவர்களது குடிசை அருகே வாழைக்கன்றுகளுக்கு நீர் இறைக்கவென சற்று ஆழமான ஒரு கிணறு இருக்கிறது. அக்காலத்தில் கிணற்றருகே உள்ள சலவைக் கல்லிலமர்ந்து கொண்டே ஒரு கோப்பையால் நீரள்ளி தலையில் ஊற்றிக் கொள்ளலாம். நீர் மிதந்து வழியும்படியான கிணறு. தெளிந்த நீர். ஆற்றிலிருந்து கொண்டு வந்து போடப்பட்ட மீன்குஞ்சுகள் ஆழத்தில் நீந்துவது மேலிருந்து பார்க்கும்போதே தெளிவாகத் தெரியும். அப்பொழுது கிணற்றைச் சுற்றிவர தடுப்புச் சுவரேதும் இல்லை. நடந்து போகையில் அதனருகே சறுக்கினால் கிணற்றுக்குள்தான் விழ வேண்டும். அப்படித்தான் ஒரு நாள் சிறுவயதில் புஷ்பராணி அதில் விழுந்தாள். எவ்வளவு குளிராயினும் விடிகாலையிலேயே எழுந்து தங்கம் திட்டத்திட்ட குளித்துக் கொள்வது அவளது வழக்கம். அப்பொழுது அவளுக்கு பத்து வயதிருக்கும். சறுக்கிவிழுந்தவள் நீருக்குள் அமிழ்வதும் எழுவதுமாய் இருந்தாள். பல் விளக்கிக் கொண்டே எங்கள் வீட்டுக்கொல்லையில் நின்றுகொண்டிருந்த எனது வாப்பா கண்டு ஓடிப் போய் வெளியே இழுத்துப் போட்டுக் காப்பாற்றினார். அப்பா போட்ட சத்தத்தில் நானும் உம்மாவும் ஓடிப் போய்ப் பார்த்தோம். "ஏனய்யா காப்பாத்தினீக? சனியன் செத்தொழிஞ்சிருக்கணும்" என்று தங்கம் அழுகையினூடே கத்திக் கொண்டிருந்தாள். மகள் உயிர் பிழைத்த ஆனந்தத்தில் அழுகிறாளா, சாகவில்லை என்று அழுகிறாளா என்று தெரியவில்லை. புஷ்பராணி குளிரிலும் பயத்திலும் வெடவெடத்தபடி நின்று தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அன்றே வாப்பா அந்தக் கிணற்றுக்கு ஆள் வைத்து சுற்றுவர தடுப்புச் சுவர் எழுப்பிக் கட்டினார். எப்படியோ அந்தக் குடிசையிலேயே வசிக்கவந்து கிட்டத்தட்ட இப்பொழுது இருபது வருடங்கள் ஆயிற்று. இடையில் எப்பொழுதாவது அவர்களது ஊருக்குப் போய்வருவார்கள். அப்படிப் போகும்போதெல்லாம் புஷ்பராணியை எங்கள் வீட்டில் விட்டுப்போவார்கள்.

---

**கனத்த மழை பெய்யத் தொடங்கியது. பெருஞ் சத்தத்தோடு தூரத்திலெங்கோ இடி விழுந்த ஓசையும் கேட்டது. வாப்பா வந்ததும் அவரிடமும் உம்மா விடயத்தைச் சொன்னாள். வாப்பா எதுவும் பதில் பேசவில்லை. உம்மா வேறு யாருக்கோ சொல்வதைக் கேட்பதுபோல கேட்டுவிட்டு கையிலிருந்த பத்திரிகையைத் தொடர்ந்தும் வாசிக்கத் தொடங்கினார்.**

---

போனமுறை இப்படித்தான். ஊருக்குப் போன இடத்தில் புஷ்பராணிக்கு ஒரு சம்பந்தத்தைப் பேசி முடித்து வந்திருந்தார்கள். தங்கத்தின் அண்ணன் மகன். உறவு விட்டுப் போய்விடக் கூடாது என்பதை விடவும், தன் குடிகார மகனுக்கு வேறு யாரும் பெண் கொடுக்கமாட்டார்களென்ற யதார்த்தம் புரிந்ததால், அண்ணனாகவே வந்து தங்கத்திடம் பெண் கேட்டிருக்கிறார். தங்கம் பூரித்துப் போனாள். துரதிர்ஷ்டக் கட்டைக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பாரேன் என்று தனக்குத்தானே சொல்லிச் சிரித்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாம்பல் மூடிய தணலாய் விடயம் ஓய்ந்திருந்ததென்பதைப் பின்னர்தான் அறிந்தோம். இருள் ஒரு இராட்சஸப் பேயைப் போல எங்கும் பரவத் தொடங்கியது.**

இருந்த சேமிப்பை ஒரு முறை எண்ணிப் பார்த்துக்கொண்டாள். இங்கு வரும்போது பூ, பழம், சேலை என்று ராணிக்குப் பலதும் வாங்கிக்கொண்டு வந்திருந்தாள். சமையலறைத் தரையில் கால்நீட்டி அமர்ந்துகொண்டவள், உம்மாவை அழைத்து "இம்புட்டுத்தூரம் நானும் வண்டியில வந்தேன். நடந்துவந்தேன். பூரிச்சுப் போய் சிரிச்சி சிரிச்சி வர்றதப்பார்த்துட்டு ஒவ்வொருத்தியும் மூஞ்சிக்கு நேர நின்னு என்னடின்னு கேட்டாளுக. மகராசிக்கிட்டத்தான் முதமுதல்ல சொல்லணும்னு வாயைத் தைச்சவளாட்டம் மூஞ்சத் திருப்பிக்கிட்டு வெரசா வந்தேன்" என்றாள். உம்மா என்ன விஷயமெனக் கேட்டு அருகிலிருந்த கதிரையில் அமர்ந்துகொண்டதும் அவள் மேலும் மகிழ்ந்துபோய் விடயத்தைச் சொன்னாள். புஷ்பராணியும் நானும் அந்த இடத்தில்தான் இருந்தோம். திருமண விடயம் தெரிந்ததும் எனக்கும் மகிழ்வாகத்தான் இருந்தது. திரும்பி ராணியைப் பார்த்தேன். அவள் சோர்ந்துபோயிருந்தாள். இந்தக் கல்யாண விடயமே வேறு யாருக்கோ என்பதைப் போல தூணில் சாய்ந்து, தூர இருந்த தென்னை மரத்தைப் பார்த்தவாறிருந்தாள். தங்கம் ஆசையாக வாங்கிக் கொண்டு வந்திருந்த, மாடு கண்டால் முட்ட வரக் கூடிய, அடிக்கிற சிவப்பு நிறத்திலிருந்த சேலையை அவள் திரும்பியும் பார்க்கவில்லை. தங்கம், உம்மாவிடம் எல்லாம் பேசி முடித்து இன்ன தேதியில் கல்யாணத்தை கோயிலில் வைத்துக் கொள்ளலாமெனச் சொன்னபோது மட்டும் ராணி தலையை உயர்த்தி சத்தமாக இந்தக் கல்யாணத்தில் தனக்குத் துளியும் இஷ்டமில்லை எனச் சொன்னாள். சொல்லிவிட்டு நிற்காமல் முற்றத்திலிறங்கி தனது குடிசையை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

பேய் பிடித்தவள் போல தங்கம் எழுந்து கத்திக் கொண்டே அவள் பின்னால் ஓடினாள். ராணி ஓடவில்லை. இலேசான பள்ளத்தில் நீர் இறங்குவதைப் போல சிறிதும் சலனமற்ற அமைதியான நடை. தங்கம் ஓடிப் போய் அவளது முழங்கைக்கு மேலால் இறுகப் பிடித்து முதுகில் அடித்தாள். ஏதேதோ கெட்டவார்த்தைகளைச் சத்தமாகச் சொல்லிச் சொல்லி அடித்தாள். ராணி அழவில்லை. இறுகிப் போன பாறை போல முகத்தையும் உடம்பையும் வைத்துக் கொண்டு வளைந்து கொடுத்தாள். உம்மாவும் நானும் ஓடிப்போய் ஒருவரையொருவர் விலக்கியெடுத்தோம். தோட்டத்தைப் பார்க்கப்போன அவளது அப்பா சத்தம் கேட்டு ஓடி வந்ததும் தங்கம் அவரிடம் விடயத்தைச் சொல்லிவிட்டாள். அவரும் தன் பங்குக்கு அவளை அடிக்கும் முன் உம்மா, ராணியைத் தன் முதுகுக்குப் பின்னால் இழுத்து வைத்துக் கொண்டாள். மழை தூற ஆரம்பித்தது. ராணி அன்றும் என் வீட்டில் தங்கட்டுமென அம்மா சொல்லித் தன்னோடு நிறுத்திக் கொண்டாள். தங்கமும், கணவனும் குடிசைக்குப் போனார்கள். பூவும் பழமும் சேலையும் சமையலறையில் விழுந்து கிடந்தது. உம்மா அதை எடுத்து மடித்து வைத்தாள்.

கனத்த மழை பெய்யத் தொடங்கியது. பெருஞ் சத்தத்தோடு தூரத்திலெங்கோ இடி விழுந்த ஓசையும் கேட்டது. வாப்பா வந்ததும் அவரிடமும் உம்மா விடயத்தைச் சொன்னாள். வாப்பா எதுவும் பதில் பேசவில்லை. உம்மா வேறு யாருக்கோ சொல்வதைக் கேட்பதுபோல கேட்டுவிட்டு கையிலிருந்த பத்திரிகையைத் தொடர்ந்தும் வாசிக்கத் தொடங்கினார். இரவு உம்மா கொடுத்த சாப்பாட்டைக் கூடத் தொடாமல் புஷ்பராணி அழுதுகொண்டே இருந்தாள். அம்மா "அழாதே" என அன்பாகச் சொல்லி இந்தக் கல்யாணம் பிடிக்காத காரணத்தை அவளிடம் வெகு இயல்பாகக் கேட்டாள். உம்மா கேட்பதற்காகவே காத்திருந்தவள் போல ஒரு குடிகாரனுக்கு இரண்டாவது தாரமாக வாழ்க்கைப்பட்டுத் தன் வாழ்க்கையை சீரழித்துக் கொள்ளத் தான் விரும்பவில்லை எனச் சொல்லி மேலும் ஏங்கி ஏங்கி விசும்பத் தொடங்கினாள். அன்று உம்மா ரகசியமாக என்னிடம் புஷ்பராணியை எனது அறையிலே தூங்க வைத்துக்கொள்ளும்படி சொன்னாள். அவள் ஏதாவது செய்துகொள்ளக் கூடுமென உம்மா பயந்திருப்பாள். வெளியே மழை விடிய விடியப் பெய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் காலை தங்கம் வீட்டுவேலைக்கு வந்தபோதிலிருந்து அவளும் ராணியும் எதிரெதிர் சந்திக்க நேர்ந்தால் கூட இருவரும் எதுவுமே பேசிக் கொள்ளவில்லை. யாரோ தெரியாதவரைக் கடந்து செல்வதைப் போல ஒருவரையொருவர் கடந்து சென்றனர். இருவருக்குமிடையில் மௌனம் ஒரு செங்குத்துத் திரை போல விரிந்து கிடந்தது. சமையலறையில் இருவரும் வேலையிலிருக்கும்போது புஷ்பராணிக்குக் கேட்பதற்கென்றே உம்மாவிடம் தனது அண்ணன் மகனுக்கு இருக்கும் சொத்துக்கள் பற்றியும் பண வசதி பற்றியும் சொல்லிக் கொண்டிருந்தாள் தங்கம். உம்மா, அவனது மூத்த தாரத்துக்கு என்ன நடந்தது என ஓரிரு முறை கேட்டும் பதிலளிக்காமல் அவள், அவனது வசதிகளைப் பற்றியே சொல்லிக் கொண்டிருந்தாள். புஷ்பராணி அன்று யாருடனும் ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. நேற்று எதுவுமே நடக்கவில்லை என்பது போலவும், நடந்தவை எதிலும் தனக்குச் சம்பந்தமில்லை என்பது போலவும் அவளது அமைதியான முகபாவனையும் நடவடிக்கைகளும் இருந்தன. தங்கம் வேலைகளை எல்லாம் முடித்து இரவு தனது குடிசைக்குப் போகும்போது உம்மா அவள் விட்டுச் சென்றிருந்த புடவை, பூ, பழங்களை அவளிடம் கொடுத்தாள். பூ வாடிப் போயிருந்தது. அவள் பூவைக் கசக்கிக் குப்பைத் தொட்டியில் எறிந்தாள். அவள் போன கொஞ்ச நேரத்துக்குப் பிறகு புஷ்பராணி பின்னால் போனாள். "போனால் தங்கம் அடிப்பாள். போகாதே" என உம்மா சொல்லிப் பார்த்தாள். அவள் கேட்கவில்லை. சாம்பல் மூடிய தணலாய் விடயம் ஓய்ந்திருந்ததென்பதைப் பின்னர்தான் அறிந்தோம். இருள் ஒரு இராட்சஸப் பேயைப் போல எங்கும் பரவத் தொடங்கியது.

இரவு என்ன நடந்ததோ, எந்த நேரத்தில் குதித்தாளோ மறுநாள் விடிகாலையில் உம்மா எழும்பிப் பார்க்கும்போது எங்கள் வீட்டுக் கிணற்றில் புஷ்பராணி மிதந்தாள். நல்லவேளையாக செத்துப் போய் மிதக்கவில்லை. தலையை மட்டும் ஒரு தாமரை இலையைப் போல வானம் பார்க்க வைத்தபடி அவள் மிதந்து மேலே பார்த்துக் கொண்டிருந்தாள். தண்ணீரள்ளப் போன உம்மா பார்த்துவிட்டு அலறினாள். வாப்பாவும் நானும் எழுந்து ஓடிவந்தோம். வாப்பா கயிறு கொண்டுவரும்படி போட்ட சப்தத்தில் தங்கமும் அவள் கணவனும் எங்கள் வீட்டுப் பக்கம் ஓடிவந்தார்கள். உம்மா பயந்து நடுங்கிக் கொண்டிருந்தாள். தங்கம் பார்த்துவிட்டு "இதையெல்லாம் பார்க்க நான் இன்னும் உசிரோடு இருக்கேனே" என்று மாரோடு அடித்துக் கொண்டாள். அவள் கணவன் கோபத்தில் உறுமிக் கொண்டே வாப்பாவுடன் சேர்ந்து நன்கு தடித்த கயிற்றை கிணற்றுக்குள் விட்டு அவளை அதைப் பிடித்து ஏறி வரச் சொன்னான். எவ்வளவு நேரமாக நீரினுள்ளே கிடந்தாளோ, கை விரல்களெல்லாம் ஊறிப்போய் வெளிறி சுருங்கிக் கிடந்தன. வெளியே வந்தவளை தங்கம் அடிக்கவெனப் பாய்ந்தாள். நான் தடுத்து புஷ்பராணியை எங்கள் வீட்டுக்குள்ளே எனது அறைக்கு அழைத்துச் சென்று ஈரத்தைத் துடைக்க துவாயைக் கொடுத்தேன். பிறகு ஒரு சல்வாரைக் கொடுத்து அணிந்துகொள்ளச் சொன்னேன். உம்மா அதற்குள் சூடாகக் கோப்பி ஊற்றி எடுத்துவந்தாள். தங்கமும் அவள் கணவனும் சமையலறையில் கோபத்தோடு கத்திக் கொண்டிருந்தது அறைக்குள்ளேயே கேட்டது. உம்மா கோப்பியைத் தந்துவிட்டு அறையை உட்புறமாகத் தாழிட்டுக் கொள்ளச் சொல்லி நகர்ந்தாள்.

வெளியே சத்தம் பலமாகக் கேட்டது. வாப்பா அமைதியாக அவர்களைச் சமாதானப்படுத்தப் பார்த்தார். அவர்களது குரல் பலத்துக் கொண்டே வந்தபோது வாப்பாவின் குரல் ஓங்கியது. அதைத் தொடர்ந்து ஒரு கனத்த மௌனம். எந்த ஓசைகளுமில்லை. அழுதுகொண்டே இருந்த புஷ்பராணியும் நானும் என்ன நடக்கிறது என்பதுபோல ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம். வாப்பாவின் குரல் சாந்தமானதாகவும் உறுதியானதாகவும் வெளியே கேட்டது. "சே..நான் காப்பாத்துன உசுரு.. இப்படிக் கொல்லப் பார்க்குறீங்களே.. இனி ராணியும் எங்க வீட்டுப் பொண்ணுதான். அவளுக்குப் புடிச்சமாதிரி நானே அவளுக்கொரு கல்யாணத்தைப் பண்ணி வைக்கிறேன். அதுவரைக்கும் அவள் இங்கேயே இருக்கட்டும்" என்று வாப்பா சொன்னதும் தங்கம் அவர் காலில் விழுந்ததாக உம்மா பிறகு சொன்னாள்.

புஷ்பராணி குதித்தது நாங்கள் குடிக்க நீரெடுக்கும் கிணற்றில்தான். அதுவும் சற்று ஆழமானதொரு கிணறு. இனி அதனை இறைக்காமல் நீரெடுக்க முடியாது. இறைக்கும்வரை பக்கத்து வீட்டிலிருந்து குடம்குடமாக நீரெடுத்து வந்து தந்தாள் தங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றை இறைக்கும் வேலையை வாப்பா வார இறுதி விடுமுறை நாளுக்கு ஒத்திப் போட்டார். அதுவரை காத்திருக்க முடியாமல், தங்கம் ஒருவனை அழைத்துவந்தாள். கிணற்றை இறைக்கவேண்டுமென அவனிடம் சொல்லாமல் எனது வைரமோதிரமொன்று தவறி அதில் விழுந்ததாகவும் அதனை எடுக்கவேண்டுமெனச் சொல்லி அழைத்து வந்தாள். அவன் வந்து பார்த்து கிணறு ஆழமென்றும் கிணற்றை இறைக்காமல் மோதிரத்தை எடுக்க முடியாதெனவும் இறைப்பதற்குக் கூலியாக தான் அந்த மோதிரத்தை எடுத்துக் கொள்வதாகவும் சொன்னான். இது எதுவும் வீட்டில் தையல் வேலையிலிருந்த உம்மாவுக்கோ எனக்கோ யாருக்குமோ தெரியாது. காலையில் வந்தவன் மதியச் சாப்பாட்டுக்குப் பின்னரும் அவனும் தங்கமும் சேர்ந்து கிணற்றில் ஒரு சொட்டு நீர் கூட இல்லாமல் இறைத்துவிட்டார்கள். இறுதியில் அவன் மோதிரம் கிடைக்கவில்லையென்று கூலி கேட்டு சண்டை பிடிக்கத் தொடங்கினான். பிறகுதான் உம்மா விசாரித்ததில் தங்கத்தின் சூழ்ச்சி புரிந்தது. உம்மா அவன் முன்னால் எதுவுமே பேசாமல் அவன் கேட்ட பணத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். அவன் போன பின் என்றுமே தங்கத்தை திட்டியிராத உம்மா அன்று அவள் பொய் சொல்லி வேலை வாங்கியதற்காக நன்றாக ஏசிவிட்டாள்.

வாப்பா ஒரே மாதத்தில் புஷ்பராணிக்கு ஒரு பையனைப் பார்த்துவிட்டார். அவரது அலுவலகத்தில் காவல் வேலை செய்பவரின் மகன். அந்தப் பையனும் ஒரு கல்லூரியில் காவல் வேலை செய்பவன்தான். வாப்பா சொல்லி அந்தப் பையனும் குடும்பத்தாரும் வந்து புஷ்பராணியைப் பார்த்தார்கள். அவர்களுக்கு அவளைப் பிடித்துவிட்டது. அவளுக்கும்தான். தாலி, தோடு என்பவற்றைப் பெண்வீட்டார் செய்துபோட்டு இன்னும் ஒரு மாதத்தில் கல்யாணத்தை கோயிலில் எளிமையாக வைத்துக்கொள்ளலாமெனச் சொல்லிவிட்டார்கள். அவர்கள் வந்துபோனதிலிருந்து அவள் தனியாகச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

திருமண விடயம் கேள்விப்பட்டு தங்கத்தின் அண்ணனும் மகனும் வந்து அவளது குடிசைக்கருகே சத்தம் போட்டார்கள். புஷ்பராணி எங்கள் வீட்டிலிருந்தாள். அவளை அறைக்குள் வைத்து நாங்கள் உள்ளே பூட்டிக்கொண்டோம். வாப்பா வேலைக்குப் போயிருந்தார். அவர்கள் வந்து எங்கள் வீட்டு வாசலருகேயும் சத்தம் போட்டார்கள். எல்லோரையும் கொல்லப் போவதாகவும் ராணி எப்படி இன்னொருத்தனுடன் வாழப்போகிறாளெனத் தாங்கள் பார்க்கப் போவதாகவும் கூச்சலிட்டார்கள். எங்களது இதயங்கள் தடதடவென அடித்துக் கொண்டன. உடல் பதற ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம். அதிலும் புஷ்பராணி மிக அதிகமாக வெலவெலத்துப் போயிருந்தாள். பயத்தில் சல்வார் முந்தானையை வாய்க்குள் அதக்கிக் கொண்டு விசும்பினாள். ஒரு பெரும் மலையிலிருந்து கற்கள் தொடராக உருண்டு வந்து ஓய்ந்துவிட்டதைப் போல அவர்களது கூச்சல், சந்தடி ஓய்ந்தபிறகுதான் நாங்கள் கதவைத் திறந்தோம். தங்கமும் அவள் கணவனும் அடிபட்ட காயங்களோடு வந்து எங்களிடம் மன்னிப்புக் கேட்டார்கள். வாப்பா வந்தபிறகு நடந்த விடயமறிந்து அவர்களிருவரையும் கூட்டிக்கொண்டு போய் பொலிஸில் முறைப்பாடு கொடுத்தார்.

இன்று மதியம் உம்மாவின் தூரத்து உறவுமுறையிலிருந்து என்னைப் பெண் பார்க்க வந்திருந்தார்கள். வந்தவர்களுக்கு என்னைப் பிடித்துப் போயிற்றா அல்லது வாப்பா, உம்மாவிற்குப் பிறகு எனக்கு வர இருக்கும் நகைகள், வீடு, காணி நிலபுலன்கள் பிடித்துப் போயிற்றா என்று தெரியவில்லை. பெண் வீட்டாருக்கு எந்தச் செலவும் வைக்காமல் என்னை மணமுடிக்கப் போவதாக வாக்குறுதி தந்தார்கள். அவர்கள் போன பின்பு உம்மா இது பற்றி பெரும் மகிழ்வோடு சொன்னதைக் கேட்டுவிட்டுத்தான் தங்கம் "அதுக்கு உங்களை மாதிரி சீதேவியப் பெத்திருக்கணும்மா. எனக்கு அதுக்கெல்லாம் கொடுப்பின இல்ல" என்று சொன்னாள். விழிகள் கலங்க மௌனமாக நின்றபடி நான் புஷ்பராணியைப் பார்த்தேன். கீரையை ஆய்ந்துகொண்டு என்னையே பார்த்தபடியிருந்தவள் தலைகுனிந்து கொண்டாள். அவளுக்கு எல்லாம் தெரியும். ஒரு கல்வியறிவற்ற ஏழைப்பெண்ணுக்கு தனது எதிர்கால வாழ்க்கை நல்லபடியாக அமையவேண்டுமென்ற எண்ணத்தோடு அமைதியாகவும், அதிரடியாகவும் போராடி தனது வாழ்க்கையைத் தீர்மானித்துக் கொள்ள முடிந்திருக்கிறது என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல இயலும் என்னால்? ■

எம்.ரிஷான் ஷெரீப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன அடையாளம், மதம் மற்றும் தேசியம்:

## பெண்களின் பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதாரம் மற்றும் உரிமைகளுக்கு அவை அச்சுறுத்தலா?

2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ) இலங்கைப் படையினரால் தோற்கடிக்கப்பட்டதன் மூலம் 26 வருடங்களாக நீடித்த சிவில் யுத்தம் முடிவுக்கு வந்தது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியிலும், தெற்கின் சில தெரிவு செய்யப்பட்ட பகுதிகளிலும் நல்லிணக்கத்திற்கான தற்காலிக முயற்சிகளுடன் துரித உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான புதிய அத்தியாயத்தினை இது ஆரம்பித்து வைத்தது. கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை அமைத்தல் மற்றும் விசாரணை, ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நல்லிணக்கம், பொறுப்பு கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரேரணை என்பன அந்த முயற்சிகளில் உள்ளடங்கின.

2009ஆம் மே மாதத்திற்கும், 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கும் இடைப்பட்ட, யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் வேறு பல மாற்றங்களும் அவதானிக்கப்பட்டன. இலங்கையில் முஸ்லீம்களின் சனத்தொகை அதிகரிப்பதானது சிங்கள இனத்தினருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது:, சில சக்திகளின் சதி முயற்சியால் சிங்கள-பௌத்த தேசம் என்ற இலங்கையின் அடையாளம் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது போன்ற அதியுயர் தேசிய உணர்வுகளை இலக்கு வைத்த கருத்துக்களும் வெளியாக ஆரம்பித்தன. இந்தக் கருத்துக்களுடன் இணைந்ததாக இன-மத மிதவாதக் குழுக்களின் எழுச்சி மற்றும் பள்ளிவாசல்கள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் போன்ற பௌத்தம் சாராத மத வழிபாட்டுத் தலங்களின், வேறு மத மற்றும் சமுதாயங்களின்  மீதான தாக்குதல்களும் முன்னெடுக்கப்பட்டன. மிதவாதக் குழுக்கள் மற்றும் அதிகாரத்தில் இருந்த அப்போதைய அரசாங்கத்தினால் கருத்தியல் சார்ந்த அறிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அவை பெண்களை கலாசாரத்தின் மற்றும் தேசிய அடையாளத்தின் காவலராகவும், சிங்கள பௌத்தர்களின் புதிய தலைமுறையை உருவாக்குவதற்கான வாகனங்களாகவும் குறிப்பிட்டன.

இன-மத மற்றும் தேசிய கருத்துக்களின் வெளிப்பாட்டிற்கும், இலங்கையின் பெண்கள், குறிப்பாக அவர்களின் பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதாரம், உரிமைகள் (SRHR) என்பவற்றுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குவதாக இந்த நிகழ்வுகள் அமைந்திருந்தன. மகப்பேற்றுச் சுகாதாரம், குடும்பத் திட்டமிடல் மற்றும் கருத்தடை, கருவளம் மற்றும் சம்பந்தட்ட சேவைகளும், தெரிவுகளும், பாலியல் ரீதியாக பரவும் நோய்கள், பால்நிலை அல்லது பாலியல் தொடர்பான பாரபட்சம் மற்றும் வன்முறை, பாலியல் கல்வி, மற்றும் இவற்றின் கிடைக்கக் கூடிய தன்மை, அணுகும் தன்மை மற்றும் பெற்றுக் கொள்ளும் தன்மை போன்ற விடயங்கள் SRHRஇன் கீழ் உள்ளடங்குகின்றன. மிதவாதக் குழுக்கள் தமது நிகழ்ச்சி நிரலுக்கு பெண்களை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதனை மேலும் விளக்குவதற்கு, கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதியில் செய்தித் தாளில் வெளியான சில ஆக்கங்களினையும், இணையத்தில் வெளியான பதிவுகளையும் நாம் கவனத்தில் கொள்கின்றோம். குழந்தை பெற்றுக் கொள்வதற்கான அல்லது பெற்றுக் கொள்ளாதிருப்பதற்கான தெரிவு, குடும்பத்தின் அளவு குறித்த தெரிவு, கருத்தடை முறையைப் பயன்படுத்துவதற்கான தெரிவு மற்றும் SRH சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான தெரிவு போன்ற தமது இனவிருத்திச் சுகாதாரம் தொடர்பான பெண்களின் தெரிவுகள் மற்றும் உரிமைகள் எவ்வாறு கேள்விக்குட்படுத்தப்பட்டன மற்றும் அச்சுறுத்தப்பட்டன என்பதனை இந்த சாரம்சங்கள் விளக்குகின்றன:

- "இன்று அவர்கள் (பெண்கள்) தமது உடலமைப்பு குறித்து மாத்திரமே எண்ணுகின்றனர். அந்த எண்ணத்தோடு இருத்தல் என்பது, தேசத்தின் குறைப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகோலும். குடும்பத் திட்டமிடல் குறித்துக் கற்பிப்பதற்கு குடும்ப நல உத்தியோகத்தர் வருவாராயின், அவரை வெளியே விரட்டுங்கள். இன்று நாம் இயல்பாகவே அழிந்து வருகின்றோம். தாய்மார் விரும்பின், பிள்ளைகளைப் பெற்று பௌத்த அருளாட்சிக்கு ஒப்படைக்கலாம்." - (பொதுபலசேனா அமைப்பின் தேசிய அமைப்பாளர் வித்தாரந்தெனியானந்த தேரர் அவர்களால் வெளியிடப்பட்ட கருத்தின் மொழிபெயர்ப்பு. இலங்கக்கோன் மெனிக்கே குணவதி. லங்காதீப, செவ்வாய்க்கிழமை 12 மார்ச் 2013).

- "இந்த நாட்டின் சனத்தொகை அதிகரிக்க வேண்டும். நாட்டின் மக்களை விருத்தி செய்ய வேண்டியது அத்தியாவசியமாகும். குடும்பம் ஒன்றிற்கு ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகள் போதும் என்று நினைப்பது தவறு. குழந்தை பிறப்பதனை பலவந்தமாக தடுப்பது என்பதும் எமது மதத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. அதுவும் கொலையாகும்." - (கொழும்பு மேயர் திரு. ஏ.ஜே.எம். முசாம்மில் அவர்களால் கூறப்பட்ட கருத்தின் மொழிபெயர்க்கப்பட்ட அறிக்கை. லங்காதீப, வியாழக்கிழமை 28, பெப்ரவரி, 2013).
- "பிறப்பினைக் கட்டுப்படுத்தும் சத்திர சிகிச்சைகள் ஊடாக எமது சிங்கள மக்கள் தொகையின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கு காரணமாகும் வெளிநாட்டு சக்திகளின் மூலம் செயற்படும் நிறுவனங்கள் இங்கு உள்ளன. அந்த நிறுவனங்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளினை எடுப்பதன் மூலம் எம்மால் LRT சத்திர சிகிச்சைகளை நிறுத்த முடிந்தது." - (கலபொட அத்தே ஞானசார தேரர் அவர்களினது அறிக்கையின் மொழிபெயர்ப்பு: லங்காதீப, திங்கட்கிழமை 18 மார்ச் 2013).
- "இந்த மிட்டாய்களில் உள்ள மேலிக் ஆசிட் என்பது சிங்களவர்களின் டீ.என்.ஏயில் தாக்கம் புரிவதற்காக வடிவமைக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா? சிங்களவர்களின் இரத்தத்தில் கலந்தால் மாத்திரமே மேலிக் ஆசிட் செயற்பட ஆரம்பிக்கும். சிங்களவர்கள் சிங்கத்தில் இருந்து தோன்றியவர்கள் என மகாவம்சம் கூறுகின்றது. முற்காலத்தில் சிங்கத்திடமிருந்து விடுபடுவதற்கு மேலிக் அசிட் பயன்பட்டது." - (சிங்கள பௌத்த /பேஸ்புக் பக்கத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது. மார்ச் 2015 எடுக்கப்பட்டது)
- "இன்று எமது இனம் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. சிங்களவர்கள் மத்தியில் ஒரு மில்லியனானவர்கள் மாத்திரமே குழந்தை பெற்றுக் கொள்ளும் வயதில் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் நாம் எதிர்கொள்ளும் பெரும் சவாலை அறிந்தவர்களாக இல்லை." - (கலாநிதி. மெதகொட அபேதிஸ்ஸ தேரர் அவர்களினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் மொழிபெயர்ப்பு. திவயின, திங்கட்கிழமை 18 பெப்ரவரி 2013).

முழுமையான பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதார உரிமைகள் என்ற அடிப்படையை வழங்கும் சர்வதேச இணக்க ஆவணங்கள் மற்றும் உள்ளூர் சட்ட, கொள்கை என பல மனித உரிமைகள் ஆவணத்தில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது, ஏற்புறுதி செய்துள்ளது மற்றும் வடிவமைத்துள்ளது. இவற்றில் 1981இல், பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாரட்பட்சத்தையும் ஒழிப்பதற்கான ஐ.நாவின் சாசனம் (CEDAW), 1994இல் நடவடிக்கைக்கான சனத்தொகை மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சி தொடர்பான சர்வதேச சாசனம் (ICPD), 1995இல் நடவடிக்கைக்கான பீஜிங் இயங்குதளம் (Beijing Platform for Action - BPfA) மற்றும் 2000இல் புத்தாயிரமாண்டு பிரகடனம் என்பன உள்ளடங்குகின்றன.

பால், மதம் மற்றும் இனம் என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் செய்யப்படக் கூடாது என்ற உத்தரவாதத்தை இலங்கை அரசியலமைப்பு வழங்குகின்றது. எனினும், இந்த ஆவணங்களில் போற்றப்பட்ட உரிமைகள் அல்லது குறிக்கப்பட்ட அபிவிருத்தி தொடர்பில் சிறிதளவேனும் அல்லது எந்தவித கவனமும் செலுத்தப்படவில்லை என வனப்புரை தெரிவிக்கின்றது. குடும்பத் திட்டமிடல், கருத்தடை மற்றும் சுகாதார சேவைகள் தொடர்பில் தகவலறிந்த தெரிவுக்கான அணுகும் வசதியும் பெண் உரிமைகளுக்கு எதிரான அரசியல் மற்றும் மத பார்வையிலேயே பார்க்கப்படுகின்றது. இது பெண்களதும், குடும்பத்தினரதும் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக அமையலாம்.

அவ்வாறாயின், இவை யாவும் உங்களில் எவ்வாறு சுமையாக அமைகின்றன? உங்களுடைய எண்ணக்கருக்கள் அல்லது நடவடிக்கைகளில் அவை செல்வாக்கு செலுத்துகின்றதா? இந்த விடயங்கள் குறித்து சிந்தியுங்கள். அவற்றைக் கேள்விக்கு உட்படுத்துங்கள். செயற்படுவதற்கு முன்னர் கற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில், உங்களுடைய ஆரோக்கியத்தில் மற்றும் உங்களுடைய குடும்பத்தின் எதிர்காலத்தில் செல்வாக்கு செலுத்தும் தீர்மானங்களை எடுக்கும் முன்னர் இந்த விடயங்கள் உங்களுக்கு உதவும் வகையில் பார்த்துக் கொள்ளுங்கள்.

- **உங்களுடைய நம்பிக்கை மற்றும் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்:** பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளுதல் அல்லது பெற்றுக் கொள்ளாதிருத்தல், எத்தனை குழந்தைகளைப் பெற்றுக் கொள்வது, குழந்தைகளுக்கு இடையிலான இடைவெளியை தீர்மானித்தல், உங்கள் கல்வி அல்லது வேலைவாய்ப்பினை முன்னெடுத்தல், அல்லது உங்களுடைய உடல்நலன், நலன், மற்றும் உங்களுடைய துணை மற்றும் குடும்பம் என்பன குறித்து சிந்தித்தல் என்பன உள்ளடங்கலாக நீங்கள் தெரிவுகளை எடுப்பதற்கு முன்னர் சிந்திக்க முடியும்.

- பகிர்வதற்கு முன்னர் சிந்தியுங்கள்: /பேஸ்புக் அல்லது வேறு புதிய ஊடகத் தளங்களில், பெயர் தெரியாமை மற்றும் சுதந்திரம் குறித்த உணர்வு இருக்கின்ற இணைய வழி கலந்துரையாடல்களில் செல்வாக்கு செலுத்தப்படல் மற்றும் சிக்குவது எளிதாகும். நாளாந்த அடிப்படையில் பெருமளவு தகவல்கள் பகிரப்படுவதால், நீங்கள் எதனை பார்க்கின்றீர்கள் என்பது குறித்து சிந்தியுங்கள். விடயங்களை கேள்விக்கு உட்படுத்துங்கள். மூலங்களை கண்டறியுங்கள். ஒழுங்குகள் குறித்து சிந்தியுங்கள். 'like' அல்லது 'share' பொத்தான்களை அழுத்துவதற்கு முன்னர் சூழ்நிலையைப் புரிந்துகொள்ளுங்கள்.

- **உங்களுக்கு எது தேவையோ அதனை பெற்றுக் கொள்ளுங்கள்:** உங்களுடைய உடல் நலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தகவல் அல்லது சேவைகள் மேலதிகமாக தேவையாக இருப்பின், நீங்கள் நாடிச் செல்லுங்கள். உங்களுக்குத் தேவையான தகவல்களும், சேவைகளும் அணுகக் கூடியதாக மற்றும் பெறக் கூடியதாக இருக்கின்றதா எனக் கண்டறியுங்கள். பொது சுகாதார தாதியரால் வழங்கப்படும் மற்றும் சுகாதார அமைச்சு, குடும்ப நல பணியகம், குடும்பத் திட்டமிடல் அமைப்புப் போன்ற இணையம் ஊடாகக் கிடைக்கும் தகவல்கள் உள்ளடங்கலாக சுகாதார சேவைகளின் பரந்த வலையமைப்பு போன்றவற்றின் வளங்களை பயன்படுத்துவதனை உறுதி செய்யுங்கள்.

- **வாக்களிப்பதற்கு முன்னர் உங்களை கற்பித்துக் கொள்ளுங்கள்:** உங்களுடைய அரசியல் பிரதிநிதிகளின் விஞ்ஞாபனம், கொள்கை மற்றும் அபிவிருத்தி திட்டங்களில் உங்களுடைய தேவைகள் உள்ளடக்கப்படுவதனை உறுதி செய்யுங்கள். உங்களுடைய வாக்குகளை இடுவதற்கு முன்னர், வேறு ஒருவருடைய குறுகிய நோக்குடைய அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு இலக்காகது இருப்பதனை உறுதி செய்து கொள்ளுங்கள். ஆனால், உங்களுடைய குடும்பத்தின், சமுதாயத்தின் மற்றும் நாட்டின் தேவைகளை அடையாளப்படுத்துவதாக உங்கள் வாக்கு அமைவதனை உறுதி செய்யுங்கள்.

- **பொறுப்புடையவர்களின் பொறுப்புக் கூறலை வெளிப்படுத்தச் செய்யுங்கள்:** உங்களுடைய உரிமைகள், கிடைக்கக் கூடியதாக உள்ள கொள்கைள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பொறுப்பானவர்கள் யார் என்பதனை நீங்கள் அறிந்து கொண்டதும், உயர்தரமாக அவற்றை வழங்குவதற்கு அவர்களுக்குள்ள பொறுப்பை உறுதி செய்வது உங்களுடைய கடமையாகும். உங்களுடைய தேவைகள் செவிமடுக்கப்படுவது மற்றும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படுவதற்கு தனியார் அல்லது குழுவாக குரல் எழுப்புங்கள்.

இறுதியாக, பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமைகள் யாவும் மனித உரிமைகள் என்பதனை நினைவில் கொள்ளுங்கள். கடந்த சில தசாப்தங்களில் பெண்களின் நிலைமையை மேம்படுத்துவது தொடர்பில் நாம் பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். எனவே, அந்த உரிமைகளை நிறைவேற்றி, முன்னேறிச் செல்வோம். ■

---

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பினால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட மத அடிப்படைவாதம் அல்லது மிதவாதம் மற்றும் SRHR தொடர்பான ஆய்வின் தொடர்ச்சியாக பொதுமக்கள் ஆதரவு தேடலுக்கான பரிந்துரையின் ஓர் அங்கமாக இந்தக் கட்டுரை வெளியாகின்றது. பெண்களுக்கான ஆசிய-பசுபிக் வள மற்றும் ஆய்வு நிலையத்தின் (ARROW) உதவியுடன் இந்த முயற்சி சாத்தியமாகியுள்ளது. இந்தக் கட்டுரையின் உள்ளடக்கங்கள் யாவும் ஆசிரியரின் தனிப்பட்ட பொறுப்பாகும். எந்தவகையிலும் ARROWஇன் கருத்தினை பிரதிபலிப்பதாக அமையாது. இந்தக் கற்கை தொடர்பான மேலதிக தகவல்களுக்கும், மேலதிக வாசித்தலுக்கும் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பினைத் தொடர்பு கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடவடிக்கைக்கான ICPD நிகழ்ச்சியை இலங்கை எவ்வாறு முன்கொண்டு செல்ல முடியும்?

நாம் இப்போது 2015ஆம் ஆண்டில் இருக்கின்றோம். இனியும் உலக அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் எவ்வாறு இருக்கும் எனக் காத்திருக்கத் தேவையில்லை. ஏனெனில், செயற்பாடனது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது என்பதனை நாம் அனைவரும் அறிவோம்.

இரண்டு பிரதான கேள்விகள் எஞ்சியுள்ளன: இந்த உலகளாவிய நிகழ்ச்சி நிரலை ஏற்றுக் கொள்வதற்கு நாம் எவ்வளவு தூரம் தயாராக உள்ளோம் மற்றும் எமது தேசிய, உள்ளூர் முன்னுரிமைகள் மற்றும் தேவைகளுக்கு அவை எவ்வாறு உண்மையாக பொருந்துகின்றன?

ரியோ20 (Rio+20)மாநாட்டிற்குப் பின்னர், கடந்த மூன்று வருடங்களில், சர்வதேச சமூகமானது (அரசாங்கக் கொள்கை வகுப்பவர்கள், சிவில் சமூகப் பரிந்துரைப்பாளர்கள், நன்கொடையாளர்கள், பல்தரப்பு நிறுவனங்கள் உள்ளடங்கலாக) 2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் (ஐ.நா) பொது மாநாட்டில் உள்வாங்கும் எதிர்பார்ப்போடு புதிய உலகளாவிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் ஒன்றை பேரம் பேசுவதற்கும், வடிவமைப்பதற்கும் பெரும் முதலீடு ஒன்றை செய்துள்ளது. நாம் அனைவரும் அறிந்த வகையில்," 2015இற்குப் பின்னரான அபிவிருத்தி வரைபுநகல்" என நாம் அழைக்கும் இந்தப் புதிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலானது, ஏற்கனவே எட்டப்பட்ட அல்லது புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளின் (MDG) ஊடாக எட்டுவதற்கு வழி சமைக்கப்பட்ட அம்சங்களில் இருந்து தொடர்ந்து கட்டியெழுப்பப்படும். 1990களின் போது, முன்னெடுக்கப்பட்ட தொடர்ச்சியான உயர்மட்ட சர்வதேச மாநாடுகள் மற்றும் சட்டங்கள், கொள்கைகள், முறைகள் மற்றும் சேவைகள் சார்ந்து நாடுகள் முன்னேற்றம் காணக் கூடிய பொருத்தமான தளத்தை வழங்கிய பிரதான மாநாடுகளில் ஒன்றான சனத்தொகை மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச மாநாடு (ICPD) என்பனவற்றில் இருந்து MDG உருவானது. இனவிருத்திச் சுகாதாரத்திற்கு உலகளாவிய அணுகும் வசதியை உறுதி செய்வதற்கு, அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவதற்கு, வறுமையை ஒழிப்பதற்கு, பால்நிலை சமத்துவத்தை பாதுகாப்பதற்கு, மற்றும் சுற்றுச் சூழலை காப்பதற்கு முழுமையான நடவடிக்கைக்கான நிகழ்ச்சிக்கு 179 அரசாங்கங்கள் இணக்கம் கண்ட கூட்டமாக ICPD அமைகின்றது.

பாதுகாப்பான கருக்கலைப்பு, பருவமானவர் பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதார சேவைகள், முழுமையான பாலியல் கல்வி, அல்லது பால் உரிமைகள் போன்ற ICPD நிகழ்ச்சி நிரலுக்குள் சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பில் தமது புரிந்துணர்வை அதிகரித்துக் கொள்வதற்கு குறிப்பிட்டளவு அரசாங்கங்கள், பல்வேறு தெற்காசிய நாடுகள் உள்ளடங்கலாக, முயற்சிகள் எடுத்தன என்பதனை இங்கு குறிப்பிடுவது முக்கியமானது என நான் நினைக்கின்றேன். நாம் அறிந்த வகையில், 1994ஆம் ஆண்டு முதல், இலக்குகளை அடைவதற்கு பொருத்தமான வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகளுடன் தேர்ச்சியான மற்றும் முன்னவீன எண்ணக் கொள்கைகளின் உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தலின் ஊடாக இலங்கையிலும் இனவிருத்திச் சுகாதாரம் தொடர்பான பல பிரதான வெற்றிகளை அடைந்தது. மேலும், அந்தக் கொள்கைகள் அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் சமூக கொள்கைகளை ஆதரிப்பதாக இருந்தன. எவ்வாறாயினும், இந்த முயற்சிகள் பிரதானமாக மகப்பேற்று, குழந்தை மற்றும் சிறுவர்களின் இறப்பு வீதம் மற்றும் நோய்த்தாக்க வீதத்தைக் குறைப்பதனை இலக்கு வைத்தவையாக இருந்தன. இருப்பினும், ICPD நிகழ்ச்சிக்குள் மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் இலங்கை சிறிதளவு தேர்ச்சியையே எட்டியுள்ளது எனக் கூறியாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதார அம்சங்களை அடையாளம் காண்பதில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய கல்வி முறையை இலங்கை இன்னும் அறிமுகப்படுத்தவில்லை. ஏனையோர் மீதான கௌரவம், பல்வகைத் தன்மையை புரிந்து கொள்ளல் மற்றும் நெகிழ்வுத் தன்மைக்கான இயலுமை உள்ளடங்கலாக சமூகத் திறன்கள் மற்றும் சிறுவர்கள் உறவுகளை விருத்தி செய்யும் இடமாக பாடசாலை உள்ளது. ஆனால் பாடசாலைகளில் அல்லது கல்வி நிறுவனங்களில் கிண்டல் மற்றும் தொந்தரவினை எதிர்கொள்ளும் மாணவர்கள், பாதுகாப்பற்ற இடங்களில் இருக்கின்றனர். கிண்டல் செய்தல் என்பது பல வடிவங்களில் நேரலாம் என்பதுடன், பல்வேறு காரணிகளால் தூண்டிவிடப்படலாம்.

ஆண்மை அல்லது பெண்மை தொடர்பான பாரம்பரிய புரிந்துணர்வுகள் மீள்வலியுறுத்தப்படும் அதேவேளை, ஓரினச்சேர்க்கையைக் கிண்டல் செய்தல் தொடர்பான யுனெஸ்கோவின் பதிப்பிற்கு அமைய, கிண்டல் செய்தல் என்பது தற்போது பால் அல்லது பால்நிலை சார்ந்த வடிவங்களில் இருப்பதாக கூறப்படுகின்றது (UNESCO, 2012).சமபால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் மற்றும் திருநங்கை என்போர் இவ்வாறான கிண்டலில் பாதிக்கப்படுவதுண்டு (UNESCO, 2012). இளைஞர்கள் மத்தியில் தற்கொலை மற்றும் சுய தாக்கம் ஏற்படுத்திக் கொள்ளல் என்பன பாடசாலையில் ஏற்படும் கிண்டல் சார்ந்ததாக இருக்கின்றன. முழுமையான, ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் உள்ளடக்கமான கல்வி அனுபவத்தினுடன் பாதுகாப்பாகக் கல்வி கற்பதற்கும், சுற்றுச் சூழலை ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை பாடசாலை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். அடுத்த அபிவிருத்தி வலையமைப்புக்குள் சிறந்த விளைவுகளை அடைவதற்கு பாடவிதானத்தை அமைக்க வேண்டும் என்பதற்கு இது சிறந்த சந்தர்ப்பமாகும்.

இலங்கையில், சுகாதார பராமரிப்பு மற்றும், பிரதானமாக எச்.ஐ.வி பரவல் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டதாக பாலியல் அமைச்சு மற்றும் பால்நிலை அடையாளம் சார்ந்த விடயங்கள் உரையாடப்படுகின்றன. இதன் காரணமாக LGBT இனரை (பெண் ஓரினச்சேர்க்கையாளர், ஆண் ஓரினச் சேர்க்கையாளர், இரு பாலுறவினர், மற்றும் திருநங்கைகள்) மேலும் களங்கப்படுத்தலுக்கு காரணமாகின்றது. உடல் ஆரோக்கியம் என்பது மனித இருப்புக்கான மிகவும் அத்தியாவசிய அங்கமாக இருப்பதால், ஏனையோரை விட சுகாதாரத் துறைக்கு மேலதிக விழிப்புணர்வு அவசியமாகும்.

எனவே, அனைத்து சேவைநாடிகள் தொடர்பிலும் சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் சிறந்த புரிந்துணர்வைக் கொண்டிருக்க வேண்டும். ஹோர்மோன் சிகிச்சை அல்லது குடல் கோளாறு அல்லது சிறுநீர் தொற்று போன்ற நோய்களுடன் வரும் LGBT நபர்களுக்கு சிறந்த சேவையளிக்கும் மற்றும் கூருணர்வுடன் செயற்படும் வகையில் இலங்கையின் சுகாதாரத் துறை உள்ளதா? உயிரியல் அம்சங்கள் உள்ளடங்கலாக தமது வாழ்க்கையின் ஏனைய பல்வேறு முகங்களை LGBT நபர்கள் எத்தனை தடவை விளக்க வேண்டி நேரிடும் மற்றும் தற்போதைய நோய் மற்றும் தொற்றுக் குறித்து அறிந்து கொள்வதற்கு முன்னர் ஏன் அவர்கள் வேற்றுப் பாலின இச்சை கொண்டவர்கள் இல்லை என்ற கேள்வியை எதிர்கொள்ள நேரிடும்? உடல்ஆரோக்கியத்தின் சமூக தீர்மானிகளாக அங்கீகரிக்கப்படுவதால் பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பனவற்றில் இவை மிகவும் முக்கியமானவையாகும்.

பெருமளவில் விருப்புக்குரிய மற்றும் சீரற்ற வகையில் இந்த சமூக-மருத்துவ மற்றும் மானிடவியல் அம்சங்கள் கையாளப்படுகின்றன. நாட்டின் பெரும்பாலான நிறுவனங்களின் மருத்துவ மற்றும் சுகாதார பாடவிதானங்களில் அவை முறையாக உள்ளடக்கப்படவில்லை. இதுதான் நிலைமையெனின், சுகாதாரத்திற்கான தனிநபர்களின் உரிமைகளை பூர்த்தி செய்துள்ளோம் என நாம் உண்மையிலேயே கூற முடியுமா அல்லது நம்மிடம் உரிமைகள் சார் சுகாதார பராமரிப்பு சேவைகள் உள்ளனவா?

பல்வேறு சர்வதேச சாசனங்கள் மற்றும் பிரகடனங்களில் இலங்கையானது கையெழுத்திட்டுள்ள போதிலும், நாட்டிற்குள் அவற்றுக்கான கடப்பாடு மிகவும் குறைவாகவே இருக்கின்றது. ஏனெனில், இலங்கை நீதிமன்ற முறைமையில் பிரயோகிக்கப்படக் கூடியதாக அவை தேசிய சட்டங்களில் உள்ளடக்கப்படவில்லை. பல்வகை பாலியல் அமைப்புக்கள் மற்றும் பால்நிலை அடையாளங்களைக் (SOGI) கொண்டவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய சட்டங்கள் இலங்கையில் இல்லை. தமது உண்மையான அல்லது கருதப்பட்டவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக பல தனிநபர்கள் பாரபட்சத்தை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதற்கு போதியளவு ஆதாரம் உள்ளது. பாரபட்சமானது அவர்களது சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை நேரடியாக பாதித்துள்ளது. விசேடமாக, வேலைவாய்ப்புக்கான அவர்களது முயற்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வேலைவாய்ப்பு இல்லாத சந்தர்ப்பங்களில் பொது நிதிக்கான சந்தர்ப்பம் இல்லாத இலங்கை போன்ற நாடுகளில், பெரியவர்களுக்கான வேலைவாய்ப்பினை வசதியளிப்பதற்கு பொருத்தமான கொள்கை மற்றும் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். மேலும், எந்தவொரு சமூகப் பாதுகாப்பிற்குமான ஒரே வழியாக திருமணம் கருதப்படுகின்றது. ஏனெனில், பணியாளர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணையும், பிள்ளைகளும் ஓய்வூதியம், உள்வாங்கல் உரிமைகள், பெற்றோர் பராய விடுமுறை மற்றும் காணிக்கான உரிமையைப் பெறுவதற்கான முறையான வழி அதன் மூலமே கிடைக்கும். தனிநபர்களுக்கு வயதாகும் போது, சமூகப் பாதுகாப்பு பொறியமைப்பின் தாக்கங்கள் மிகவும் தீவிரமானதாக மாறும்.

தனிநபர்களின் கருதப்பட்ட அல்லது உண்மையான உறுதி செய்யப்படாத வேற்றுப்பால் இச்சை இல்லாத தன்மையின் (வேற்றுப் பால் இச்சையே சாதாரணமானது எனும் சமூக நம்பிக்கை) அடிப்படையில் பாரபட்சம் சார்ந்த கொள்கை, சட்ட மற்றும் அரசியலமைப்பு சார் இடைவெளிகளை அடையாளம் காண்பதற்கான நேரம் இதுவாகும். தனிநபர்களின் பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தின் ஏற்றுக்கொள்ளாத் தன்மை தொடர்பான பாரபட்சத்தை நாம் அடையாளம் காண வேண்டும். பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களின், சுகாதார பராமரிப்பு அமைப்புக்களின், மற்றும் வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பரந்தளவு ஏற்றுக்கொள்ளும் தன்மை உள்ளடங்கலாக சமூகத்தில் சிறந்த சகிப்புத் தன்மை மற்றும் ஏற்றுக் கொள்ளும் உளப்பாங்குகளுக்கு வழிகோலும். இவ்வாறான மாற்றங்கள் இலங்கை தமது அபிவிருத்திச் செயற்பாட்டில் முன்னோக்கிச் செல்வதற்கும், கல்வி, சுகாதார மற்றும் கண்ணியமான வேலைக்கு அணுகும் வசதியை அதிகரிக்கவும் வழிகோலும். ■

**மது திசாநாயக்க**


---


உதவிய ஆக்கங்கள்

ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார நிறுவனம் (2012). *Good Policy And Practice In HIV & AIDS and Health Education (Booklet 8): Education sector Responses to Homophobic Bullying*. Paris: UNESCO


■ ■ ■

**பொதுப் போக்குவரத்தில் பாதுகாப்பிற்கான உள்ளாடை...**



Facebookகில் வெளியாகிய காட்டூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவில் இனவிருத்தி மற்றும் பாலியல் உரிமைகளின் எதிர்காலம்

## சனத்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான 2015 ஆணைக்குழுவின் உட்குறிப்புகள்

*“2015 இற்குப் பின்னரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் உள்ளடங்கலாக நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தியில் சனத்தொகை விடயங்களை ஒன்றிணைத்தல்: நமக்குத் தேவையான எதிர்காலம்” என்பது குறித்து கலந்துரையாடிய 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சந்தித்த சர்வதேச மாநாட்டின் போது நடவடிக்கைக்கான நிகழ்ச்சியின் முழு நடைமுறைப்படுத்தலுக்காக சனத்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐ.நா ஆணைக்குழு (CPD), அமைக்கப்பட்டது. 20 வருடங்களில் முதன் முறையாக இணக்கப்பாட்டினை எட்டுவதற்கு அது தவறியது.*

சில உறுதியான நாடுகள் உள்ளடங்கலாக அரசுகளுக்கு இடையில் இணக்கப்பாடு மற்றும் கலந்துரையாடல் செயற்பாட்டின் ஊடாக வெளியீட்டு ஆவணங்களை CPD எப்போதும் தயாரித்தது. எவ்வாறாயினும், இந்த ஏப்ரல் மாதத்தில் CPD எம்மை ஏமாற்றிவிட்டது. முறைசாரா கூட்டங்கள் மற்றும் முறைசார் கூட்டங்கள் என்பன இரவு கடந்தும் கடுமையான இரண்டு வார காலம் தொடர்ந்து முரண்பாட்டிற்குப் பின்னரும் எவ்வித முடிவும் எட்டப்படாது CPD நிறைவு கண்டது. அரசுகளின் விருப்பின்மை தொடர்பான இந்த வருட CPDஇன் அம்சமானது இயலுமான சந்தர்ப்பங்களில் எட்டுவதற்கும், பாதி தூ ரம் செல்வதற்கும் உண்மையாக பேரம் பேசலுக்கு விருப்பின்றி செயற்பட்டன. அதற்குப் பதிலாக ஒவ்வொருவரும் தமது வசதியளித்தல் கருத்துக்களை கூறி முடித்தவுடன், இணக்கப்பாட்டு உடன்படிக்கையை பேரம் பேசலுக்கு CPDஇன் பயிற்சியை குறைவாக மதித்து, சளைக்காமல் தமது பதவி நிலையை மீள உறுதி செய்வதில் தனி நாடுகளும், அல்லது தொகுதிகளும் முனைப்புக் காட்டின.

பாலியல், இனவிருத்திச் சுகாதார உரிமைகள் பகுதிகளில் குறிப்பிட்ட தீவிரமான யதார்த்தங்களை உலகளாவிய மொழியில் CPD விளக்கியது. UNFPA factsheet[1]இல் பின்வரும் பகுதிகளில் அவற்றில் சில விளக்கப்பட்டுள்ளன. *Adding it up: Investing in Sexual and Reproductive Health and Rights*(December 2014):

"2014 ஆகும் போது அபிவிருத்தியடைந்து வரும் பிராந்தியங்களில் இனவிருத்தி வயதில் உள்ள பெண்கள் பாதியளவிற்கும் அதிகமானோர் கர்ப்பம் தரித்தலை தவிர்க்க விரும்பினர். எவ்வாறாயினும், இந்தப் பெண்களில் - 225 மில்லியனில்- நான்கில் ஒருவர் வினைத்திறன் மிக்க கருத்தடை முறையை பயன்படுத்தவில்லை."

"நவீன கருத்தடைக்கு எட்டப்படாத தேவை உள்ளது என விளக்கிய இந்தப் பெண்களில் 81 வீதமானோர் அபிவிருத்தியடைந்து வரும் பிராந்தியங்களில் திட்டமிடாத கர்ப்பம் தரித்தலுக்கு ஆளாகினர்"

"கர்ப்பம் தரித்தல் சம்பந்தப்பட்ட காரணிகளால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒவ்வொரு வருடமும் அண்ணளவாக 290,000 பெண்கள் உயிரிழக்கின்றனர்."

"எச்.ஐ.வி சம்பந்தப்பட்ட பராமரிப்பு உள்ளடங்கலாக அனைத்து கர்ப்பணிப் பெண்கள் மற்றும் புதிதாக பிறந்தவர்களுக்கு போதிய பராமரிப்பு உள்ளடங்கிய நவீன கருத்தடை வசதி முழுமையாக வழங்கப்பட்டால்,-- மகப்பேற்றின் போதான இறப்பு வருடாந்தம் 290,000 என்பதிலிருந்து 96,000ஆக குறையும்"

"நவீன கருத்தடையின் எட்டப்படாத அனைத்துத் தேவைகளும் திருப்திகரமாகுமாயின்,-- திட்டமிடப்படாத கர்ப்பம் தரித்தல் என்பது 70 வீதத்தால் குறைந்து, வருடாந்தம் 74 மில்லியன்

1 பார்க்கhttps://www.guttmacher.org/pubs/FB-AddingItUp2014.html. (Accessed 1 August 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதிலிருந்து 22 மில்லியனாக குறையும். அத்துடன், பாதுகாப்பற்ற கருக்கலைப்பானது 74 வீதத்தால் குறைந்து, வருடாந்தம் 74 மில்லியனிலிருந்து 22 மில்லியனாக குறையும்."

எவ்வாறாயினும், அனைத்து தனிநபர்களும் தமது முழுமையான பாலியல் மற்றும் இனவிருத்தி உரிமைகளை எட்டினால் மாத்திரமே நிலையான அபிவிருத்தி நிகழும் என்ற யதார்த்த நிலைக்கு அப்பால், தமது உடல்கள் மற்றும் பாலியல் அடையாளம் என்பவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பெரும்பாலான பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் உரிமை இல்லை. சிறுவயதுத் திருமணம் மற்றும் கர்ப்பம் தரித்தல் என்பன வன்முறை மற்றும் பலாத்காரம் இன்றி சுதந்திரமாக வாழ்வதற்கு உதவும் சிறுமியரின் கல்வி, வாழ்க்கை சந்தர்ப்பங்கள் மற்றும் வாய்ப்புக்களுக்கான உரிமையை பாதிக்கின்றன. பாலியல் கல்வி அல்லது பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதார சேவைகளுக்கான போதிய அணுகும் வசதி இன்மை, சிறுமியர் மற்றும் பெண்களின் சுகாதாரத்தை மாத்திரம் பாதிக்காது, பொருளாதார அபிவிருத்தியிலும் தாக்கம் புரிவதுடன், வறுமைக்கும் வழி வகுக்கின்றது. பெண்கள் மற்றும் சிறுமியர், விசேடமாக வறிய, கிராம, சுதேச, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த, பல்வகை பாலியல் அமைப்புக்களை மற்றும் பால்நிலை அடையாளங்களை, வயதான மற்றும் மாற்றுத்திறன் கொண்ட, பருவமான பெண்கள் (வயது 10-19), விசேடமாக ஒதுக்கப்படுவதுடன், பல்வேறு மனித உரிமை மீறல்களை எதிர்கொள்கின்றனர்.[22]

ஏப்ரலில் நடைபெற்ற CPDஇன் 48ஆவது அமர்வில் இப்பெண்கள் மற்றும் சிறுமியரின் எதிர்காலம் குறித்தே கலந்துரையாட திட்டமிடப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாக பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதாரம் மற்றும் உரிமைகளை அங்கீகரித்தல் என்பதில் இருந்து, முழுமையான பாலியல் கல்வி (CSE): பால்நிலை சமத்துவம்: குடும்பங்களின் பல்வகைத் தன்மை தொடர்பான அங்கீகாரம்: வெளிநாட்டுத் தொழில்: இறைமை சார்ந்த கேள்வி: மற்றும் அபிவிருத்திக்கான உரிமை தொடர்பான மொழிப்பிரயோகம் வரையான விடயங்களில், உலகளாவிய மற்றும் பிராந்தியம்சார் கடந்த உடன்படிக்கைகளில் போட்டியாக அமைந்தது. குறைந்தளவு கலந்துரையாடல் என்பது, இந்த எந்தவொரு சிக்கலான அக்கறைகளிலும் இணக்கப்பாடு சாத்தியமில்லை என்பதனை காட்டியது. இணக்கப்பாட்டினை நோக்கி செயற்படும் பொறுப்புக் கொண்ட அரசுகள், அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆவணத்தை தயாரிப்பது தொடர்பில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டன.

பேரம் பேசலின் இறுதியில், ஆர்ஜன்டீனாவில் அறிமுகப்படுத்தப்பட்ட பத்திக்கு அமைய சில நாடுகள் மற்றும் பிராந்தியங்களும் சட்டங்கள் மற்றும் வடிவமைப்பு என்பனை திருத்துவதற்கும், பாதுகாப்பதற்கு ஆதரவான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கும், பாலியல் உரிமைகளை மதிப்பதற்கும், பூர்த்தி செய்வதற்கும் இணக்கம் கண்டன. பாலியல் உரிமைகள் என்பன குறிப்பிட்டளவு எண்ணத்திற்கு அப்பாற்பட்டவை அல்லது உத்தேசமாக கலந்துரையாடலுக்கு உள்ளானவை என்பதனை அது கூறுகின்றன. இணக்கப்பாட்டு ஆவணங்களை பேரம்பேசுதலுக்கான அனைத்து வகையான மெய்நிகர் அரசாங்கங்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையின் ஒரு அங்கமாக அவை இருந்தன. 20 வருடங்களுக்கு முன்னர் பெய்ஜிங்கில் நடைபெற்ற நான்காவது உலக மாநாட்டில் எட்டப்பட்ட உடன்படிக்கைக்கு மத்தியில் அது இப்போதும் நேர்கின்றது. மனித உரிமைகள் என்பது கட்டுப்படுத்தப்பட வேண்டிய உரிமைகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒருவரின் பாலியல், பலாத்காரம், பாரபட்சம் மற்றும் வன்முறை இன்மை என்பதுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் அனைத்தும் அதனை நிர்ணயிக்கின்றன.

துரதிஷ்டவசமாக, இறுதிநாள் மதியத்தில் தலைவரினால் வெளியிடப்பட்ட நன்கு திட்டமிடப்பட்ட ஆவணமானது, பல்வேறு சிக்கலான மற்றும் பொதுவாகத் தொடர்ச்சியான விடயங்களில் அரசாங்கத்தின் பல்வேறு நிலைப்புள்ளிகளை பிரதிபலிப்பதாக இருந்ததுடன், மேலதிக கலந்துரையாடலுக்கான ஆவணத்தின் தேவையை கோரின.இந்த சங்கடத்தின் மத்தியில், உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய மட்டத்தில் பணியாற்றும் 64 சிவில் சமூக நிறுவனங்களைச் சேர்ந்த குழுவொன்று, பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதாரத்தினையும், உரிமைகளையும் பாதுகாத்ததுடன், 48ஆவது அமர்வின்

2 இந்த விவாதங்கள் CPDஇல் கோகஸில் நடைபெற்ற சர்வதேச இனவிருத்திச் சுகாதார மற்றும் பாலியல் உரிமைகள் மாநாட்டில் பயன்படுத்தப்பட்டப பிரசுரிக்கப்படாத கலந்துரையாடல் ஆவணங்களில் இருந்து பெறப்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவுக்கு கோரிக்கை விடுத்தன. இந்த ஒழுங்கின்மையானது எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.[33]

இந்த ஆவணத்தில் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்ன? இந்த ஆவணமானது இனவிருத்திச் சுகாதார உரிமைகள் தொடர்பான விளக்கத்தையும், தமது பாலியல் குறித்த கட்டுப்பாட்டினை கொண்டிருப்பதற்கான தனிநபர்களின் உரிமைகள் குறித்த முன்னுரைப் பந்தியையும் கொண்டிருந்தது. மிக முக்கியமாக, பாரபட்சத்தின் பல்வகை மற்றும் ஒன்றிணைந்த வடிவங்களையும் அது அங்கீகரித்தது. இது அங்கீகாரம் ஒருபோதும் CPDஇன் அங்கமாக இருந்ததில்லை. எந்தவொரு அடிப்படையிலும் அரசாங்கங்களுக்கு இடையில் சமத்துவமின்மையை அங்கீகரிப்பதற்கான எந்தவொரு அடிப்படை தொடர்பான சமத்துவமின்மை மற்றும் பாரபட்சத்தை ஒழிப்பதற்கான தேவையையும் உள்ளடக்கியுள்ளது. அபிவிருத்திக்கான உரிமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதில் ஒட்டுமொத்தச் செயற்பாட்டிற்கும் அதன் மீளாய்வு மாநாட்டினதும் ICPD, பிரதான செயற்பாடுகள் மற்றும் விளைவுகளை ஒன்றிணைப்பது தொடர்பான உறுதியான பந்தியையும் அது உள்ளடக்கியிருந்தது. தரம், ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் முழுமையான பாலியல், இனவிருத்திச் சுகாதார சேவைகள் மற்றும் மனித பாலியல் தொடர்பான முழுமையான கல்வி, மற்றும் பெண்கள் மற்றும் சிறுமியரின் இனவிருத்தி உரிமைகள் என்பவற்றுக்கான பரிந்துரைகளையும் அது உள்ளடக்கியிருந்தது. அது பாரபட்சமான சட்டங்கள் மற்றும் நீதியற்ற, பாரபட்சமான சட்டப் பிரயோகங்களையும் அது அடையாளப்படுத்தியது.

எவ்வாறாயினும்,ஒன்றுக்கு ஒன்று பொருந்தாத குறிப்புக்களையும் அது உள்ளடக்கியிருந்தது. உதாரணமாக,"வயதுக்கு பொருத்தமான" தகுதியை சுகாதார சேவைகளுடன் சம்பந்தப்பட்டதாக கொண்டிருந்தது. பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதாரம் சார்ந்த

**இந்த CPD செயற்பாட்டின் ஆரம்பத்தில், 2015இற்குப் பின்னரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு சிறந்த பேரம் பேசப்பட்ட வெளியீட்டு ஆவணம் அளிக்கப்படும் எனவும், இனவிருத்திச் சுகாதார தேவைகள் மற்றும் அனைவருக்குமான உரிமைகளுக்கு ஆதரவளிப்பதற்கு உண்மையான கொள்கைகளை உருவாக்குவதற்கும், வலுப்படுத்துவதற்கும் சிறந்த அடிப்படையாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. 2030இல் எட்டக் கூடிய தெளிவான குறிக்கோள்களையும், இலக்குகளையும் விளக்கும் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குகளாக பால்நிலை சமத்துவம் மற்றும் பெண் உரிமைகளை முழுமையாக எட்டுவதற்கான வழியாக முழுமையான பாலியல், இனவிருத்தி சுகாதாரம் மற்றும் உரிமைகளை 2015இற்குப் பின்னரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் கொண்டிருப்பதனை நாம் உறுதி செய்ய வேண்டும். இதனை எட்டுவதற்கு தேர்ச்சிகரமான அரசாங்கங்கள் மற்றும் சிவில் சமூகங்களின் ஒன்றிணைந்த முயற்சிகள் நமக்கு அவசியமாகும்.**

ஜி77 நாடுகள் மிகவும் ஆர்வமான இருந்தன. உறுதியான மனித உரிமைகள் வரைபுநகலின் அடிப்படையில் அபிவிருத்திக்கான உரிமை தொடர்பான மிகவும் உறுதியான நிகழ்வை வெளிப்படுத்தலுக்கான தேவையை தலைமை அங்கீகரித்தது. அனைத்து வகையான வன்முறை மற்றும் பாரபட்சத்தை தடுப்பதற்கு மற்றும் ஒழிப்பதற்கு எந்தவொரு வேறுபாடும் இன்றி அனைவருக்கும் மனித உரிமைகள் தொடர்பான உறுதியான அர்ப்பணிப்புக்கள் உள்ளடங்கலாக முன்னுரை மற்றும் செயற்பாட்டு பந்திகள் இரண்டினையுமே உள்ளடக்கியிருந்தது.

*2015இற்குப் பின்னரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் சம்பந்தப்பட்ட* இளைஞர்களுக்கு நட்புறவான சுகாதார சேவைகளை அணுகுவது தொடர்பில் சில நாடுகள் தயக்கம் காட்ட காரணமாக அமைந்தது. பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதார சேவைகள் உள்ளடங்கலாக சுகாதார சேவைகளுக்கான அணுகும் வசதியில் "வயதுக்கு பொருத்தமான" அல்லது "வளரும் இயலுமைகள்" என்பன அடிப்படையில் தகுதி பெறப்படக் கூடாது. குறித்த மட்டுப்படுத்தல்கள் முன்னர் இணக்கம் காணப்படவில்லை. அது பெரும் பின்னடைவாக இருக்கலாம். தேவையான அனைவருக்கும், வயது அல்லது வேறு எந்தக் காரணியின் அடிப்படையிலும் கட்டுப்பாடு இன்றி சுகாதார சேவைகள் வழங்கப்படல் வேண்டும். சுகாதாரத்திற்கான மனித உரிமைகள் "பொருத்தமான வகையில்"

3 கோகஸ் சர்வதேச பாலியல் மற்றும் இனவிருத்தி உரிமைகளின் பிரசுரிக்கப்பட்ட அறிக்கையில் பெறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என முன்னுரிமையளிக்கப்படக் கூடாது. வயதுக்குப் பொருத்தமான சுகாதாரப் பராமரிப்பு நிகழ்ச்சிகள் ஆலோசிக்கப்படக் கூடியன அல்ல. ஏனெனில், அவை பருவமானவர்களின் அத்தியாவசிய மற்றும் வாழ்க்கையை பராமரிக்கும் சுகாதார சேவைகளுக்கான அணுகும் வசதியை கட்டுப்படுத்துவதாக பயன்படுத்தப்படலாம். அத்துடன், தமக்குத் தேவையான சுகாதார பராமரிப்பினை மக்களுக்கு மறுப்பதாக அமையலாம். உலகம் முழுவதும் உள்ள அனைத்து அரசுகளிலும் முக்கியமானதாக இருக்கும் பல்வகையான குடும்பங்களின் யதார்த்தத்தை அங்கீகரிக்க இந்த ஆவணம் தவறியுள்ளது.

பேரம் பேசல்களின் போது, சனத்தொகைப் பிரிவு என அவர்கள் கூறும் விடயம் தொடர்பில் அரசுகள் மிகவும் வெளிப்படையாக கதைத்தன. இவை இளைஞர்களின் வளர்ச்சி மற்றும் குறிப்பிடத்தக்க சனத்தொகையை விளக்குவதாக அமைந்தன. பருவமானவர்கள் மற்றும் இளைஞர்களின் தேவைகளில் முதலீடு செய்வதன் மூலமே இந்த நிலையை எட்டமுடியும் என்பதனை அவர்கள் ஏற்றுக் கொள்வதாக இல்லை. வறுமையை குறைப்பதற்கு நிலையான அபிவிருத்தி மற்றும் சமூக, பொருளாதார நிலைமாற்றத்தை தூண்டுவதற்கு, வலுவாக்கல், தரமான கல்வி, சுகாதாரம் மற்றும் கண்ணியமான பணி என்பன ஊடாக உண்மையான அர்ப்பணிப்பு இந்த முதலீட்டுக்கு அவசியமாகும். மிகவும் முக்கியமாக இளைஞர்களின் பாலியல், இனவிருத்திச் சுகாதார மற்றும் உரிமைகளுக்கான தேவைகளை அடையாளப்படுத்துவதற்கு அது கருதியது. கோகஸில் நடைபெற்ற CPDஇன் 48ஆவது அமர்வான சர்வதேச பாலியல் மற்றும் இனவிருத்தி உரிமைகள் தொடர்பான நிகழ்வின் ஆரம்ப உரை பின்வருமாறு அமைந்திருந்தது.

> இளைஞர்கள் மற்றும் பருவமானவர்களுக்கு, விசேடமாக மிகவும் ஒதுக்கப்பட்ட, பலவீனமான மற்றும் களங்கப்படுத்தப்பட்ட சனத்தொகைக்கு, தமது பாலியல் உரிமைகளை முழுமையாக எட்டுவதில் பல்வேறு சமூக மற்றும் பொருளாதார தடைகள் உள்ளன. வாழ்க்கையின் இந்த சிக்கலான தருணத்தில், கற்கும் சந்தர்ப்பத்தில்,"முதலாவது", மற்றும் - மிகவும் அடிக்கடி —— வன்முறை, துஷ்பிரயோகம் மற்றும் பாரபட்சம் என்பவற்றில், பாலியல் உரிமைகளில் அந்த முதலீடுகள் உடனடியாக தேவையாகும். உறுதி செய்யப்பட முடியாத மற்றும் இளைஞர்களுக்கு நட்பான பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதார சேவைகளும், முழுமையான பாலியல் கல்வியும் தீங்கு விளைவிக்கும் பால்நிலை விடுமியங்களை சவாலுக்குட்படுத்தவும், உரிமைகள் குறித்துக் கற்கவும், கோரவும், ஆரோக்கியமான உறவினைப் பேணுவதற்கும் அவசியமாகும்.

உலக வர்த்தகம் சார்ந்த விடயங்கள், அபிவிருத்தி, கடன் மீள்கொடுப்பனவுக்கான கடன், அபிவிருத்திக்கான உரிமை என்பவற்றில் இருந்து இந்த இலக்குகளின் காரணமாக அரசுகளினால் எடுக்கப்பட்ட நிலைப்பாடுகள் தெளிவாக பிரச்சினையில் உள்ளது. அடிப்படையில், நெகிழ்வுத் தன்மை இல்லை. உலகளாவிய தெற்கு மற்றும் பாரம்பரிய மதக் குழுக்களிடம் இருந்து சமமான கடுமையான நிலைமைகளுக்கு எதிரானதாக உள்ளன. பால்நிலை சமத்துவம், கருக்கலைக் கலைப்பு மற்றும் பாலியல் உரிமைகளில் பிரதிபலிக்கும் மதம் மற்றும் பாரம்பரியத்தின் கலாசார யதார்த்தமான வெளிப்படுத்தலை முன்னோக்கி நகர்த்துகின்றன. இறுதிப் பகுப்பாய்வில், அதிகரித்தல அளவில் உலகளாவிய மற்றும் கடுமையான காட்சியமைவுகளில் பொருளாதார மற்றும் பால்நிலை சமத்துவத்திற்கு தேவைகளை எவ்வாறு முன்னிறுத்துவது என்பதே பெண்களிடம் உள்ள சவாலாகும்.

நிகழ்ச்சி நிரலை மேம்படுத்துவதற்கு தமது பொறுப்புக்கள் தொடர்பில் தமது அரசுகள் தயக்கம் காட்டுகின்ற நிலையில், கைவிட்டுள்ள நிலையில், பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதார மற்றும் உரிமைகள் தொடர்பான அதன் மீளாய்வு செயற்பாட்டின் விளைவுகள், 2015இற்குப் பின்னரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் உள்ளடங்கலாக நிலையான அபிவிருத்திக்கான இந்த உரிமைகளை எவ்வாறு உள்ளடக்குவது என்பதில் இணங்கத் தவறியுள்ளன. உடல்சார் நேர்மை மற்றும் தன்னாட்சிக்கான உரிமை சார்ந்த சிக்கலை நாம் ஒருபோதும் இல்லாதவாறு அறிந்து வைத்துள்ளோம். பால்நிலை சமத்துவத்தினை எட்டுவதற்கு பிரதானமாக இது உள்ளது. எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் மற்றும் இனவிருத்தி உரிமைகளின் ஏற்றுக் கொள்ளல் மற்றும் அங்கீகாரம் இன்றி, எமக்கு ஏனைய மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

CPDஇன் 49ஆவது அமர்வுகளில் அரசுகள் தவறியுள்ளன. இந்த CPDஆனது முன்னோடியாக அமையாது என்பதனை நாம் உறுதி செய்ய வேண்டும். அந்த உறுதியான தலைமைத்துவ, முகாமைத்துவ மற்றும் வசதியளித்தல் என்பன தேர்ச்சிகரமான இணக்கத்திற்கு வழி கோலுகின்றன. எனவே, 2015இற்குப் பின்னரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் அடுத்து வரும் வருடங்கள் சிக்கலாக அமைகின்ற நிலையில் எதிர்வரும் அரசாங்கங்களுக்கு இடையிலான செயற்பாடுகள் பின்னடைவு மற்றும் தயக்கத்தின் காரணமாக தடைப்படக் கூடாது. உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய மட்டங்களில், தனியார் மற்றும் பொதுத் தளங்களில் உடல்சார் நேர்மை மற்றும் தன்னாட்சி ஆகிய இரண்டையும் எட்டுவதற்கான எமது போராட்டத்தின் குரலை நாம் தொடர்ந்து எழுப்ப வேண்டும். பாலியல் உரிமைகளுக்கான போராட்டம் மற்றும் இனவிருத்திச் சுகாதாரம் மற்றும் உரிமைகளுக்கான போராட்டம் எதிர்கொள்ளப்படல் வேண்டும் என்பதனை நாம் மிகவும் முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டும். உலகளாவிய மட்டத்தில் எமது நாடுகளின் அரசியல் நிலைப்பாடு குறித்த அக்கறையின்றி சூழ்நிலைக்குள் அதனை எட்ட வேண்டும். ■

**குமுதினி சாமுவெல்**

■ ■ ■

# களவு போன கடந்த காலம்

உன்னோடு
என் வாழ்வை
இணைத்த நாள் முதலாக
உன் விருப்பப்படியே
எல்லாம் நடந்தது ...

என்னையும்
என் உணர்வுகளையும்
புரிந்து கொண்டதாக
நீ காட்டிக் கொண்ட போது
என்னால் நம்பாமல்
இருக்க முடியவில்லை.

ஆனால்
நான்
உதறித் தள்ளப்பட்ட போது
ஒன்றை மட்டும்
புரிந்து கொள்ள முடிந்தது.
இனி உன்னிடம் இருந்து
எனக்கு கிடைப்பது
ஒன்றுமே இல்லையென்று

**உமா சங்கர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பெண்களின் உடல்களும், இனவிருத்தி உரிமைகளும் :

## சேவை வழங்குனர் - பெறுனர் உறவுகளுக்கு அப்பால் நகர்தல்

"இனவிருத்தி உரிமைகள் குறித்த உங்களுடைய புரிந்துணர்வு என்ன?" கொழும்பில் நான் அண்மையில் சந்தித்த இளம் பெண் வைத்தியரிடம் இந்த கேள்வியை சாதாரணமாகக் கேட்டேன்.

சிறிது நேரம் சிந்தித்த பின்னர்,"எந்த சூழ்நிலையில் இந்தக் கேள்வியை கேட்கின்றீர்கள்? என அவர் என்னிடம் கேட்டார்.

"மருத்துவர் என்ற வகையில் இனவிருத்திச் சுகாதாரத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள் என அறிந்து கொள்ள விரும்புகின்றேன்" என நான் கூறினேன்.

அதன் பின்னர் அவர்,"உண்மையாகச் சொல்வதாயின் இனவிருத்திச் சுகாதாரம் குறித்து எமக்கு கற்பிக்கப்படவில்லை. ஆனால், என்னுடைய அனுபவத்தில் (உள்ளக பயிற்சியின் போது) நோயாளிக்கு மாத்திரமே வைத்தியர்கள் மருத்துவ நிலைமையை விளக்க முடியும். அதனால், மருத்துவ ஆலோசனையின் அடிப்படையில் தீர்மானிப்பதும், செயற்படுவதும் நோயாளி ஆகும். உதாரணமாக, சிறுநீரக குழாய் சார்ந்த நோய் உள்ளவர்களை குழந்தையைப் பெற்றுக் கொள்ள வேண்டாம் என நாம் ஆலோசனை வழங்குவோம். ஆனால், குழந்தையைப் பெற்றுக் கொள்வதா அல்லது இல்லையா என்ற முடிவு முழுமையாகக் குறிப்பிட்ட தம்பதியர்களினதாகும். பெற்றோராவதற்கு அவர்களிற்கு உரிமை உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில், வைத்தியர்களாக நாம் நோயாளிகளின் தீர்மானத்திற்கும், விருப்பத்திற்கும் மதிப்பளிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அமைதியாக இருப்பதன் மூலம் எமது தொழிலுக்கு உண்மையாக இருக்கின்றோமா என என்னால் கூற முடியாது. உண்மையாகஅவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் சங்கடத்தை எதிர்கொள்கின்றோம். உங்களுடைய கேள்விக்கு நான் பதிலளித்துவிட்டேனா?" என்றார்.

"ஆம். குறிப்பிட்டளவுக்கு. நன்றி" என நான் பதிலளித்தேன். "கருத்தடைப் பாவனை குறித்து என்ன நினைக்கின்றீர்கள்? இனவிருத்தி உரிமைகளுக்குள் கருத்தடைப் பயன்பாட்டினை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?"

"கருத்தடை குறித்த அறிவு இன்று எமது இளைஞர்கள் மத்தியில் மிகவும் மோசமாக உள்ளது என்றே நான் நினைக்கின்றேன்." என அவர் பதில் கூறினார்.

எமது கலாசாரத்தில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளே இந்த அறிவு மட்டுப்பாட்டுக்கு காரணமாகும் என நான் நினைக்கின்றேன். எனவே, பாடசாலை பாடவிதானம் இதனை உறுதியாக கவனிக்கவில்லையெனினன், நாம் நாடென்ற வகையில் திட்டமிடாத கர்ப்பம் தரித்தல், சிறுவயதுக் கர்ப்பம் தரித்தல் போன்ற பல்வேறு சமூக பிரச்சினைகளை எதிர்காலத்தில் எதிர்கொள்வோம்."



http://meaghanmorningstar.com/th-free-1/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 அல்லது 17 வயதாகும் போது, அவர்கள் பாலியல் ரீதியாக செயற்றிறனுடன் இருக்கின்றனர். ஆனால், பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் மற்றும் கருத்தடை தொடர்பில் அவர்களது அறிவு குறைவாகவே உள்ளது (மறுக்கும் வகையில் தலையை அசைக்கின்றார்). எமது கலாசாரத்தில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளே இந்த அறிவு மட்டுப்பாட்டுக்கு காரணமாகும் என நான் நினைக்கின்றேன். எனவே, பாடசாலை பாடவிதானம் இதனை உறுதியாக கவனிக்கவில்லையெனினன், நாம் நாடென்ற வகையில் திட்டமிடாத கர்ப்பம் தரித்தல், சிறுவயதுக் கர்ப்பம் தரித்தல் போன்ற பல்வேறு சமூக பிரச்சினைகளை எதிர்காலத்தில் எதிர்கொள்வோம்." என்றார்.

இந்த உரையாடல் குறித்து சிந்திக்கும் போது, இரண்டு கேள்விகள் என்னில் தோன்றின:

> இலங்கை நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் வெளிப்படுத்திய, கெய்ரோவின் 1994ஆம் ஆண்டு ICPDஇல் முன்வைக்கப்பட்ட இனவிருத்திச் சுகாதாரங்கள் மருத்துவ பாடவிதானத்தில் ஏன் உள்ளடக்கப்படவில்லை?
>
> இலங்கையில் இனவிருத்தி உரிமைகள் என்பது விளக்கப்பட்டனவா?

கெய்ரோ இல் "இனவிருத்தி உரிமைகள்" என்ற பதம் பிரயோகிக்கப்படவில்லை: 1970களின் பெண்ணியத்தின் இரண்டாவது அலையின் விளைவாக அதற்குப் பதிலாக 1980களில் அது உருவானது. வடஅமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா மற்றும் இலத்தீன் அமெரிக்காவில் தோன்றிய பெண்களின் முன்னெடுப்புக்களினால் இது பரந்தளவில் உருவானது.[1] 1990களில் உலகின் வடக்கு மற்றும் தெற்கில் பெண் உரிமை முன்னெடுப்புக்கள் விருத்தி செய்யப்பட்டு,"எண்ணங்களின் கலப்பு விதைத்தல் - பல நாடுகளில், கண்டங்களில்" இனவிருத்திச் சுகாதார மற்றும் பாலியல் உரிமைகள் என்ற எண்ணக்கரு பரவலாக்கப்பட்டது என Petchesky (1998) கூறுகின்றார் (ப. 3). 1993ஆம் ஆண்டு வியன்னாவில், நடைபெற்ற மனித உரிமைகள் தொடர்பான உலக மாநாட்டில், 1994ஆம் ஆண்டு கெய்ரோவில் நடைபெற்ற சனத்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச மாநாட்டில் மற்றும் 1995ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெற்ற பெண்கள் தொடர்பான நான்காவது சர்வதேச மாநாட்டில் என சர்வதேச மன்றில் இந்த எண்ணங்கள் முன்வைக்கப்பட்டன (Petchesky, 1998).

ஒரு புதிய விடுவிக்கப்பட்ட இனவிருத்திச் சுகாதார மற்றும் உரிமைகள் நிகழ்ச்சி நிரலை நோக்கிய சனத்தொகைக் கட்டுப்பாட்டின் இறுக்கமான பொறியமைப்புக்களிற்கு வெளியே செல்வதற்கு கெய்ரோ நடவடிக்கைக்கான நிகழ்ச்சி (PoA) துரிதப்படுத்தியது. முந்தைய பத்து வருடங்களுக்கு ஒரு முறையான மாநாடுகளைப் போலல்லாது, சனத்தொகை கட்டுப்பாடு தொடர்பான மல்துசியன் நோக்கிலிருந்து, இனவிருத்திச் சுகாதாரம் மற்றும் உரிமைகளுடனான பரந்த அக்கறை வரையானதாக கெய்ரோ மாநாட்டின் பண்புநலன்கள் பெண்களின் ஆரோக்கியம் தொடர்பான உலகளாவிய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட மாற்றத்தை குறித்தன (Simon-Kumar, 2006). கெய்ரோவின் நடவடிக்கைக்கான நிகழ்ச்சி மூன்று படிநிலைகளைக் கொண்டது என பெச்க்ஸ்கி (Petchesky 2003) கூறுகின்றார். குறுகலான சனத்தொகை இலக்குகளிலிருந்து, முழுமையான இனவிருத்திச் சுகாதார அணுகுமுறைக்கு அப்பால் செல்வதற்கு மேலதிகமாக,"சனத்தொகை மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்களில் பால்நிலை சமத்துவம், சமத்துவம் மற்றும் பெண் வலுவாக்கல் கோட்பாடுகள்" என்பவற்றை கெய்ரோ உள்ளடக்கியது. அத்துடன் "இனவிருத்தி உரிமைகள், அடிப்படை உரிமைகளாக மிகவும் பரவலாக விளக்கப்பட்ட இணைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார பராமரிப்பு" என்பவற்றை வெளிப்படையாக அங்கீகரித்தது (ப. 35).

பிள்ளைக் கட்டுப்பாடு (1950களில்), குடும்பத் திட்டமிடல் (1960களில்) மற்றும் இனவிருத்திச் சுகாதாரம் (1990களில்) போன்ற உலகளாவிய பதப்பிரயோகம் மற்றும் கருத்தாக்கங்களை தேசிய சுகாதார நிகழ்ச்சிகளில் உள்வாங்குவதில் இலங்கை விரைவாக இருந்தாலும், இலங்கையில் பெண்களின் சுகாதாரத்திற்கான இனவிருத்திச் சுகாதாரத்திற்கு தெளிவான ஒழிப்பு உள்ளது. இனவிருத்திச் சுகாதாரத்தை மருத்துவ அதிகாரிகள் உள்வாங்கியுள்ள போதிலும், பெண்களுக்கான சுகாதார நிகழ்ச்சியில் இனவிருத்தி உரிமைகள் நீக்கப்பட்டுள்ளன.

இந்த நீக்கத்திற்கான காரணம் என்ன? சுகாதாரம் என்பது உரிமை இல்லையா? அரசாங்கம் குறித்த அக்கறையின்றி, அனைத்து மக்களும் மகிழ்வதற்கான உரிமையாக சுகாதாரம் உள்ளது.

1 பார்க்க http://www.ghwatch.org/sites/www.ghwatch.org/files/B4.pdf (Accessed on 15 June 2011).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச் சுகாதாரத்தின் அறிமுகத்துடன் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் ஊடாக இலங்கைக்கு நலன்புரி அரச கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன (Jones, 2004). அன்று முதல் இலங்கையில் நலன்புரி கொள்கைகள் தொடர்கின்றன. விசேடமாக சுகாதாரம் மற்றும் கல்வியில் அதனை காணலாம். இதன் விளைவாக, பிராந்தியத்தில் சிறந்ததாக இலங்கையின் சமூக குறிகாட்டிகள் மாறியுள்ளன. 1970முதல், நாட்டின் குறைந்தளவு மகப்பேற்று உயிரிழப்பு வீதங்கள், அதிகரித்த ஆயுட்காலம், பாராட்டக் கூடிய பெண்களின் எழுத்தறிவு வீதம் மற்றும் சிறந்த பொது சுகாதார சேவைகள் என்பவற்றின் அடிப்படையில் சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற புள்ளி விபரவியலாளர்கள், அபிவிருத்தி பொருளியலாளர்கள் மற்றும் சுகாதார நிபுணர்கள் இலங்கையினை "அபிவிருத்தி மாதிரி" எனப் புகழ்ந்துள்ளனர்.

இவ்வாறான குறிகாட்டிகளை நாடு பெருமை பாராட்டுகின்ற போதிலும், ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலப்பகுதிக்கு இலவசமாக பொது சுகாதார சேவைகள் வழங்கப்படும் போது அரசுக்கும், பொது மக்களுக்கும் இடையிலான உறவுக்கு என்ன நேரும் என்ற கேள்வி எஞ்சியிருக்கின்றது. அரச நலன்புரி சேவைகளினைப் பெறுபவர்களாக மக்கள் மாறிவிடுவர். இது மறுபுறத்தில், அவர்களை மௌனிகளாக மாற்றி, அரசுடனான உரையாடல்களை தடுப்பதற்கு காரணமாகின்றன. வேறு சொற்களில் கூறுவதானால், நீண்ட காலத்திற்கு நலன்புரி கொள்கைகள் முன்னெடுக்கப்படும் போது, அரசுக்கும், மக்களுக்கும் இடையிலான உரிமைகள் சார் சமூக ஒப்பந்தத்தின் அபிவிருத்தியில் இடைஞ்சலை ஏற்படுத்துகின்றன.

கருத்தடைகள் பற்றிய விநியோகம் மற்றும் குடும்பத் திட்டமிடல் மற்றும் இனவிருத்திச் சுகாதாரம் தொடர்பான தகவல் விநியோகம் என்பன சார்ந்து இந்த சேவை வழங்குனர் — பெறுனர் உறவானது பொது சுகாதாரத் துறையில் தெளிவாகப் பார்க்கக் கூடியதாகும் (சுகாதாரச் செயற்பாடுகளின் மருத்துவ அதிகாரியின் கட்டமைப்புக்குள்). மக்களுக்கு, மிகவும் முக்கியமாக பெண்களுக்கு வழங்கப்பட்ட கருத்தடை ஆலோசனை குறித்து, பொது சுகாதாரப் பணியாளர்களுடன் நேரடியான உரையாடல் குறைவாக இருக்கின்றது.

மேலிருந்து கீழான அணுகுமுறையானது, பெண்களின் இனவிருத்திச் சுகாதாரம் எவ்வாறு திட்டமிடப்படல் மற்றும் முகாமை செய்யப்படல் வேண்டும் என அரசு தீர்மானிக்கச் செய்கின்றது. அத்துடன், பொது சுகாதாரப் பணியாளர்களால் அந்த தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கிளிநொச்சியின் வெருவில், கிராஞ்சி, மற்றும் வலைப்பாடு கருத்தடை உள்ளீடு, ஜெடெல், என்பன சார்ந்த சம்பவங்கள் சிறந்த உதாரணமாகும் (செப்டம்பர் 2013).[22] அவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக, பொதுச் சுகாதாரத்தை சேர்ந்த பெண் பயனாளிகள் சுகாதாரத்தை நோக்கிய உரிமைகள் சார் அணுகுமுறையில் இருந்து வெளியில் வைக்கப்பட்டுள்ளனர்.

1996களில் பெண்கள் சிகிச்சை நிலையத்தின் ஊடாக இனவிருத்திச் சுகாதார வெளிப்பாடு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், இனவிருத்தி உரிமைகள் என்ற கருத்தாக்கத்தினை அரசாங்கம் அறிமுகப்படுத்தவில்லை. தமது பாடவிதானத்தில் ஒரு அங்கமாக இனவிருத்திச் சுகாதாரம் இருக்கவில்லை எனமேற்குறிப்பிட்ட வகையில் குறித்த இளம் பெண் வைத்தியரினால் இந்த புரிந்துணர்வு குறைந்த தன்மை வெளிப்பட்டது. வைத்தியர்கள் மிகவும் தொழில்நுட்பம் சார்ந்தவர்களாக, மற்றும் நேரிடையான உயிரியல் நோக்கத்தை உள்வாங்குபவர்களாக இருந்தால் (சமூகச் சூழல் மற்றும் கலாசாரம் குறித்த கவனம் இன்றி), சுகாதாரம் நோக்கியதாக உரிமைகள் சார்ந்த அணுகுமுறையை கட்டியெழுப்புதவற்கான சந்தர்ப்பங்கள் குறையும்.

## இனவிருத்தி உரிமைகள் எவை?

- மேற்கூறியதைப் போன்று,நேரடியான அல்லது மறைமுகமான தொந்தரவு இன்றி இனவிருத்தித் தெரிவுகளை சுதந்திரமாக எடுப்பதற்கான அடிப்படை மனித உரிமை என்ற வகையில் ஆரம்ப சுகாதார பராமரிப்பிற்குள் இனவிருத்திச் சுகாதார உரிமைகள் பரந்த விளக்கத்தை கொண்டிருப்பதாக கெய்ரோ மாநாடு குறிப்பிட்டது. பெண்களின் இனவிருத்திச் சுகாதார உரிமைகளில் இலங்கை எந்த இடத்தில் உள்ளது? பல்வேறு கோணங்களில்

2 மேலதிக தகவல்களுக்கு பார்க்கhttp://groundviews.org/2013/10/11/above-the-law-violations-of-womens-reproductive-rights-in-northern-sri-lanka/ (accessed on 10 July 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கேள்வியை நாம் ஆராயலாம். நாட்டில் கருக்கலைப்புக்கான சட்டத்திற்காக இலங்கையில் உள்ள பெண்கள் நிறுவனங்கள் நீண்ட காலமாக பிரசாரம் செய்து வருகின்றன. ஆனால் இதுவரை இலங்கையில் அது சட்டமாக்கப்படவில்லை.

- 1974ஆம் ஆண்டு முதல் தன்னிச்சையான வகையிலேயே, மருந்துச் சீட்டுகள் இன்றி கருத்தடை மாத்திரைகள் விற்கப்படுகின்றன.
- மலடாக்கலுக்கான ஊக்குவிப்புகள் இன்றும் வழங்கப்படுகின்றன.
- பொது ஊடகங்களில் கருத்தடை முறைகள் பிரசாரம் செய்யப்படுவதில்லை.

இலங்கையில் தன்னிச்சையாக மருந்து வழங்கப்படுவதனால் மாத்திரையின் பலன்கள் எவை? அதாவது, மருந்துச் சீட்டு இன்றி பெண்கள் மருந்தினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதாகும். அத்துடன், தமது உடலுக்கு குறித்த மருந்து பொருத்தமானதா என அறிந்து கொள்வதற்கு எந்தவொரு மருத்துவ பரிசோதனையையும் எதிர்கொள்ளத் தேவையில்லை. மருந்துக்கான இலகுவான அணுகும் வசதி என்பதன் அர்த்தம், தமது உடல்கள் குறித்து பெண்களுக்கு போதிய கட்டுப்பாடு உண்டு என்பதில்லை. தேவையற்ற கர்ப்பம் தரித்தலை தடுப்பதற்கு மாத்திரை உதவி செய்தாலும், தனிப்பட்ட பெண்ணுக்கு பொருத்தமானது என்பது தவிர மருத்துவ பரிசோதனை இன்றி மருந்தினை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும் என்ற ஆபத்து நிலவுகின்றது. மாத்திரையானது தன்னிச்சையாக வழங்கப்படுவதாக இருக்கின்ற நிலையில், இலங்கையில் இனவிருத்திச் சுகாதார உரிமைகள் தகுதிபெறாத வெற்றியாகவா உள்ளன?

மலடாக்கல் செய்து கொள்வதற்காக அரசு ஏன் ஊக்குவிப்பு ஊதியம் வழங்குகின்றது? மறைமுகமான பலாத்காரத்திற்கு அது வழிகோலுமா? பெண்களின் உடல்நலம் குறித்த அல்லது நாட்டின் சனத்தொகை வளர்ச்சி குறித்தா அரசு கவனம் செலுத்துகின்றது? பெண்களின் உடல்நலம் குறித்து அரசு கவனம் கொள்ளுமாயின், மருத்துவ பரிசோதனையின்றி குறித்த மாத்திரையை பெண்கள் எடுப்பதற்கு எவ்வாறு அதன் செயற்பாடுகள் வழிவகுக்கலாம்? மலடாக்கலிற்கான ஊக்குவிப்பு ஊதியத்தின் காரணமான மறைமுகமான பலாத்காரம் இலங்கையில் இனவிருத்திச் சுகாதாரத்திற்கான வெளிப்பாட்டிற்கான அறிமுகத்தை உண்மையாக வசதியளிக்கின்றது.

இலங்கையில் பொது சுகாதாரத் துறையில் இனவிருத்திச் சுகாதார உள்ளீடுகள் இல்லை என்பதற்கு கருத்தடைகள் குறித்த பொது விழிப்புணர்வு இன்மை விளக்குகின்றது. இலங்கை அதனை எவ்வாறு எதிர்கொள்கின்றது எனப் பார்க்கும் போது, இனப்பெருக்கம் மற்றும் சனத்தொகை அதிகரிப்பில் அதன் தாக்கம் என்பன சார்ந்ததாகவே இனவிருத்திச் சுகாதாரம் என்பது பார்க்கப்படுகின்றது. இனவிருத்திச் சுகாதார உரிமை என்பது அடிப்படை மனித உரிமையாக முக்கியத்துவப்படுத்தப்படல் வேண்டும்.

விளம்பரத் தேவைகளுக்காக தனியார் துறை சுகாதார பராமரிப்பு நிலையங்கள் இந்தப் பதத்தினை சுதந்திரமாக பயன்படுத்திய போதிலும் மேற்கூறிய விடயங்களினை கவனத்தில் கொண்டு, இலங்கையில் இனவிருத்திச் சுகாதார உரிமைகள் விளக்கப்படவில்லை என்பது தெளிவாகும்.

எந்தவொரு நேரடி அல்லது மறைமுக பலாத்காரத்திற்கும் உள்ளாகாமல் ஒருவரின் உடலின் மீது முழுக் கட்டுப்பாடும் சார்ந்ததாக அக்கறை காட்டுவதாக இனவிருத்திச் சுகாதார உரிமைகள் உள்ளன. இலங்கையில் இனவிருத்திச் சுகாதார உரிமைகள் தொடர்பான வெளிப்பாடானது, மக்களின் கோரிக்கைக்கு அமைய அவர்களது சுகாதார சேவைகளை அரசு கவனம் செலுத்தும் வகையில் சேவை வழங்குனர் — பெறுநர் உறவுகள் வேறு நிலைக்கு மாறும் போது விருத்தியடையும் (கீழிருந்து மேல் நோக்கிய அணுகுமுறை). ■

**தர்ஷி தோரதெனிய**


உதவிய ஆக்கங்கள்:

Jones, M. (2004). *Health Policy in Britain's Model Colony, Ceylon (1900-1948).* New Delhi: Orient Longman Private Limited.

Petchesky, R.P. (1998). Introduction. In R. P. Petchesky, & K. Judd (Eds.), *Negotiating Reproductive Rights: Women's Perspectives Across Countries and Cultures* (pp. 1-30). London: Zed Books.

Petchesky, R.P. (2003). *Global Prescriptions: Gendering Health and Human Rights.* London: Zed Books.

Simon – Kumar, R. (2006). *'Marketing' Reproduction? Ideology and Population Policy in India.* New Delhi: Kali for Women, Zubaan.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணைத் தெய்வம் ஆக்கும் சமயங்களும், சமூகத் தளத்தில் பெண்ணை ஒடுக்கும் மதங்களும்

### ஒரு பால்நிலை அடிப்படையிலான மீள்கட்டவிழ்ப்புப் பார்வை

## அறிமுகம்

பெண்நிலைவாதப் புலமைத்துவம் (Feminist scholarship) ஆனது, இன்று சமகாலச் சமூக நிறுவனங்கள், சமூக நியமங்கள், வழக்காறுகள், பண்பாட்டு நடைமுறைகள் யாவற்றையும் கேள்விக்கு உள்ளாக்குகிறது. மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட சமூக யதார்த்தங்கள் உண்மை ஒளிகொண்டு மறுவாசிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன. பெண்களின் பார்வையில் சமூகவியலும், மானுடவியலும், சட்டமும், மெய்யியலும், வரலாறும் புதிய பார்வையில், மீள் கட்டவிழுத்துப் பார்க்கும் மரபிலே, புதிய சிந்தனை வீச்சுகளை எமக்குப் பெற்றுத்தருகின்றன. அந்த வகையிலே, புனிதத்துவம் வாய்ந்ததாக ஏற்றிப் போற்றப்படும் சமயக் கோட்பாடுகளும், சமயத் தத்துவங்களும், புராணப் புனைவுகளும் பெண் நிலைச் சிந்தனையாளர்களால் பகுத்தும், பிரித்தும், உடைத்தும் நோக்கப்படும் தன்மையை நாம் இன்றைக்கு அவதானிக்கிறோம். அவ்வடிப்படையில், மதக்கோட்பாடுகளை, பால்நிலை என்னும் தளத்தில் வைத்து சில பிரதானமான மாற்று சிந்தனைகளை முன்வைப்பதற்கு இக்கட்டுரை முற்படுகிறது.

## மதமும் பெண்களும்:

சமயத்தையும் ஒரு சமூக நிறுவனமாகவே, சமூகவியலாளர்கள் நோக்குவர். மதமானது குறிப்பிட்ட கருத்தியல், அர்த்தப்பாடுகள், மன எழுச்சிகள், சம்பிரதாயங்கள், விழுமியங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகச் சமூகவியலாளர்கள் சுட்டிக்காட்டுவர். இவ்வகையில் ஓடியா என்னும் அறிஞர் " பகுத்தறிவுக்கு எட்டாததும், செயலறிவுக்கு உட்படாததுமான ஓர் உலகத்துடன் தொடர்பு கொள்வதற்கு மக்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒரு வகையான தொடர்பாடல் முறைமையே சமயம்" என்று கூறுவது, கவனிக்கத்தக்கது.

இதேகருத்தில் Geert என்னும் அறிஞர் தெரிவிக்கும் கருத்தை நாம் மூல மொழியிலேயே எடுத்தாள்வது இங்கு பொருத்தமானதாகும்.

> "Religion is an ideology, meaning......... that part of culture which is actively concerned with the establishment and defence of patterns and values" (Geert,1964.P.64)

மதமும் மதக் கோட்பாடுகளும் உலகளாவிய நிலையில், மனித வாழ்வியலை மையப்படுத்திய பல்வேறு சிந்தனைகளையும், செயற்பாடுகளையும், தத்துவங்களையும் வடிவமைக்கின்றன. அதேவேளை சமூகக் கட்டுப்பாடு, சமூக ஒருங்கசைவு என்பவற்றையும் விதைக்கின்றன. ஆயின், எண்ணற்ற பல்வேறு முரண்பாடுகளும், கருத்தியல்களின் அசைவியக்கமும், தடுமாற்றமான தத்துவங்களும் கூட மத நடைமுறைகளிலும், மதத் தத்துவங்களிலும் விரவிக்கிடப்பதனை, நாம் அணுகி ஆராய்ந்தால் கண்டு கொள்ளலாம்.

பெண்நிலைவாத ஆய்வாளர்கள், சமய வரலாறுகளை எடுத்துக் கொண்டாலும், இறையியல் மரபுகளை எடுத்துக் கொண்டாலும் அங்கே பாலுணர்வு வாதம் (Sexism), பால்நிலை அசமத்துவம் என்பவற்றின் சுவடுகளை மிகத் துல்லியமாக அவதானிக்க முடியும் என்பதனைப் பரவலகவே ஒப்புக் கொள்கின்றனர். இறையியல் மரபுகளும், மதம் சார்ந்த புனைவுகளும் திட்டமிட்ட வகையில் பெண்மையை இழித்துரைக்கவும், குறைத்து மதிப்பீடு செய்யவும் முற்படுகின்றன. நேரடியாகவே அன்றேல் மறைமுகமாகவே மதக் கோட்பாடுகள், பெண்களைத் தாழ்வான நிலை உடையவர்கள் எனவும், ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்கள் தாழ்வானவர்கள் எனவும் ஒரு பாரபட்சமான கருத்தியலைக் கொண்டுள்ளன. அக்கருத்தியலை தொடர்ச்சியாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாகவும் சமூகக் கட்டமைப்பினுள் மீள் உற்பத்தி செய்யவும், நிலைநிறுத்தவும் பல்வேறு புராணப் புனைவுகள், மதக் கோட்பாடுகள், குறியீடுகள், கட்டளைப் படிமங்கள், சமயப் பிரமாணங்கள், விதிமுறைகளையும் உகந்த கருவிகளாகப் பிரயோகிக்கின்றன.

## பெண்நிலைவாதிகளின் பார்வையில் மதங்கள்

ஏனைய சமூக நிறுவனங்களைப் போல, மதமும் பெண்களை ஒடுக்குகிற, கீழ்மைப்படுத்துகிற ஒரு கருவியாகத் தொழிற்படுவதனைப் பெண் நிலைவாதிகள் பல்வேறு பகுப்பாய்வுகளை மேற்கொண்டு நிரூபித்துக் காட்டிவருகின்றனர். பெண்நிலைவாதிகள் பலரும் சமயமானது தந்தையாதிக்க மரபுகளை, நம்பிக்கைகளை உள்வாங்கிக் கொண்டு, அவற்றை அவ்வாறே பிரதிபலிப்பதாகவும் கருதுகின்றனர்.

பெண்களுக்கான வழிபாட்டுச் சுதந்திரம், வழிபாட்டு இடங்களை அனுகுவதற்கான அனுமதி, புனித நூல்களைப் படிப்பதற்கான அனுமதி, மதக் கிரியைகளை ஆற்றுவதற்கான தகைமை அல்லது உரிமை முதலான அம்சங்களில் தந்தையாதிக்கம் பலவேறு தடைகளையும், வரையறைகளையும் ஏற்படுத்தி உள்ளமையினைப் பெண்நிலைவாத ஆய்வாளர்கள் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றனர். எடுத்துக்காட்டாக சில மதங்களில், ஆண்கள் புனிதத் தலங்களில் பிரதான வகிபாகத்தை ஏற்கின்ற போது பெண்கள் திரை மறைவில் தம்மை "மறைத்துக் கொள்ள" வேண்டி இருக்கின்றது.

இயற்கையான உயிரியல் அம்சங்களான பெண்களின் மாதவிடாய்க் காலம், மகப்பேற்றுக்காலம் என்பவற்றின் போது, அவளை வழிபாட்டுத் தலத்தில் இருந்தும் விலக்கி வைக்கும் நிலை பல்வேறு சமய மரபுகளிலும் காணப்படுகிறது.

இவ்வாறே விவாகரத்துச் செய்வதற்கான உரிமை, திருமணம் செய்து கொள்ளும் உரிமை, தீர்மானம் மேற்கொள்ளும் உரிமை, ஆடைத் தெரிவுகள், பேச்சுரிமை முதலான பல்வேறு முக்கிய வாழ்வியல் அம்சங்களிலும் மதங்கள் "பண்பாட்டு நியமங்கள்" என்ற பெயரில் பெண்களின் உரிமைகளை ஒடுக்குவதில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துவதனைப் பெண்நிலைவாதிகள் எடுத்துக் காட்டுகின்றனர்.

இத்தகைய பெண் ஒடுக்குறை என்பது மதக் கட்டமைப்பினுள் தோன்றி வளர்ந்தமைக்கும் ஒரு வரலாறு உண்டு. ஏங்கல்ஸ் எடுத்துக் காட்டியதைப் போல, இத்தகைய சூழலை நாம் தனிச் சொத்துரிமையோடும், ஒரு தார மணம், குடும்ப அமைப்பு முறை ஆகியவற்றோடும் இணைத்துச் சிந்திக்க வேண்டும். "மதங்களுடன் தொடர்புபட்ட பெண்களின் ஒடுக்குமுறை என்பது இடைக்காலத்தில் ஏற்பட்டது" என்பதாக Armstrong என்பார் வாதிடுகிறார். எடுத்துக் காட்டாக, "பூமித்தாய் வழிபாடு" *(*Earth Mother Goddess*)* "கருவளம் சார்ந்த வழிபாடு" *(*Fertility cults), பெண் மதகுருமார்களின் பிரசன்னம் என்பவற்றை சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்பாகவே காணக் கூடியதாக இருந்தது என்று அவர் வலியுறுத்துகிறார்.

எவ்வாறாயினும் சுமார் 4000 வருடங்களுக்கு முன்பாக ஸ்தாபிக்கப்பட்ட ஓரிறைவாதத்தை மையப்படுத்திய சமயங்கள் *(*Monotheistic Religions*)* தனித்த, எல்லா வல்லமையும் பொருந்திய ஆண் தெய்வங்களின் உருவாக்கத்திற்கு வித்திட்டமையோடு, சமூகத் தளத்தில் பெண்களின் ஒடுக்கு முறை மேலும் பரவல் அடைந்தது.

இயற்கை அன்னையாகவும், பெண்ணாகவும் போற்றப்பட்ட நிலை மாறி, ஆண் முதன்மையானவனாகவும், எல்லா வல்லமையும் பொருந்தியவனாகவும் ஆக்கப்பட்டான். பெண் தெய்வங்கள் கூட ஆணுக்குத் துணையாகவே காட்டப்பட்டன.

இவ்வாறு பெண்நிலை ஆய்வாளர்கள், எவ்வெவ்வழிமுறைகளில் சமயங்களும், சமய நம்பிக்கை மரபுகளும் பால்நிலை சார் பாரபட்சத்தைப் பிரதிபலிக்கின்றன, அவற்றின் சமூகப் பின்புலம் யாது? அவற்றை எவ்வாறு நாம் உடைத்து நோக்க வேண்டும் என்பது தொடர்பில் ஒரு தெளிவான பார்வையினை எமக்கு வழங்குகின்றனர்.

குறிப்பாக மதங்களும், பெண்களும், அவற்றின் இடையே ஊடுருவி நிற்கும் ஆணாதிக்கப் பார்வைகள் பற்றியும் கல்வி கற்ற, பெண் உரிமை தொடர்பில் பிரக்ஞை பூர்வமாகச் சிந்திக்கத் தொடங்கிய பெண்கள் இது பற்றிய படைப்புகளை எழுத்தாவணப்படுத்தியும் உள்ளனர். அவ்வகையில் பின்வரும் ஆவணங்களைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. Vindication of the Rights of Women
By Mary Wollstonecraft (1792)
2. Clothed with the Sun
By Anna Kingsford (1889)
3. The Garden of Eden: or The Paradise Lost and Found
By Victona Clafin Wordhull (1890)
4. Woman, Church, and State
By Matilda Joslyn Gage (1893)
5. The Woman's Bible
By Elizabeth Cady Stanton (1895)

இவ்வாறே ஆசிய, தென்னாசிய மரபிலும் சென்ற நூற்றாண்டின் எண்பதுகள் தொடக்கம் மதக் கோட்பாடுகள் புனித நூல்களின் உள்ளடக்கம் பற்றிய "பெண் நிலை வாசிப்புகள்" பலராலும் மேள்கொள்ளப்பட்டுள்ளமையை இங்கே நாம் நினைவுபடுத்தலாம்.

## இந்துமத மரபு நிலையில் பெண்கள்

இயற்கை வழிபாடாக, சனாதன தர்மமாகப் போற்றப்படும், இந்து மதத்தில் ஆரம்ப கால கட்டத்தில் தாயித் தெய்வ வழிபாட்டுக்கான சுவடுகள் நிறையவே காணக்கிடக்கின்றன.

பெண் சக்தியின் வடிவமாகவும், உலகைப் படைத்து, இரட்சிப்பவளாகவும், தீமையை மாய்ப்பவளாகவும் தெய்வ வடிவில் போற்றப்பட்டாள். பஞ்ச பூதங்களிலும், பெண் தெய்வங்களின் சக்தியும், மாட்சியும், வரம்பு கடந்த ஆற்றலும் நிறைந்துகிடப்பதாகவே நம்பப்பட்டது. சிந்து வெளிக்கால புதைபொருட் சின்னங்கள் முதல், சங்க கால இலக்கியச் சான்று வரையிலும் இது பற்றிய செய்திகளை நாம் அறியலாம்.

எவ்வாறாயினும் தனிமையுடைமை வளர்ச்சி, தந்தையாதிக்க மரபு ஸ்தாபிக்கப்பட்டமை ஆகியவற்றோடு, இந்து மதத்திலும் பெண் அடிமைச் சிந்தனைகள் தலைதூக்க ஆரம்பித்தன.

இந்து மதத்தின் அடியாதார சுருதியான இருக்கு வேதத்தில் இடம்பெறும் பின்வரும் பகுதி இங்கே கவனிக்கத்தக்கது.

"பிரகஸ்பதி உன்னை எனக்காகக் கொடுத்திருக்கிறான் நீ தான் ஆகின்ற கணவனோடு சேர்ந்து சந்தானவாதியாக இருப்பாய். ஒரு நூறு சம்போகத்தின் ஆயுளை அனுபவித்துக் கொண்டு என்னுடைய அடிமையாக இருப்பாய்" இங்கு பெண்ணின் அடிமைத்தனம் மீள வலியுறுத்தப்படுகிறது.

இந்துமதத்தில் இடம்பெற்ற பல்வேறு சட்டங்களும் கூடப், பெண்களின் தன்னாற்றலையும், திறன்களையும் ஏன் உயிர் வாழ்வதற்கான உரிமையையும் கூட மறுப்பனவாகவே அமைந்திருந்தன. இங்கே சில சடங்குகளை நாம் எடுத்துக்காட்டலாம்.

"தேவதாசி பிரதா" என்ற சடங்கின் மூலம் தெய்வீகத் தொண்டு" என்கிற பெயரில் பெண்களின் விருப்புக்கு மாறாக அவர்கள் பாலியல் அடிமைகள் ஆக்கப்பட்டதாக இன்று விமர்சிக்கப்படுகிறது.

"சதிப்பிராரா" என்ற சடங்கானது, கணவனை இழந்த பெண்களை எரியும் சிதையில் வீழ்ந்து மடியச் செய்யும் வன்கொடுமைக்குக் காலாக அமைந்தது.

"கங்கா பிரவா" என்னும் சடங்கின் போது குழந்தை இல்லாத பெண்கள், கங்கையில் நீராடியதுடன், அவர்கள் தம் முதற் குழந்தையை கங்கை நீருக்குப் பலி கொடுக்கமாறு நிர்ப்பதந்திக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு மதச் சடங்குகள் என்கிற போர்வையில் பெண்ணின் பாலியல்பு, பாலுணர்ச்சி என்பன ஒடுக்கப்பட்டுள்ளதாகவும், பெண்ணின் தீர்மானம் எடுக்கும் உரிமை மறுக்கப்பட்டு, அவளின் சுயாதீனமும், ஆளுமையும் குறுக்கப்பட்டிருப்பதாகவும் பெண்நிலை சார் மானுடவியலாளர்கள் (Feminist Anthropologists) வியாக்கியானம் செய்கின்றமையையும் இங்கே அவதானிக்கலாம்.

இதனை விட இந்து மதத்தின் சாரமான வேதங்கள், உபநிஷதங்கள், பிரமாணங்கள், ஆகமங்கள், ஸ்மிருதி நூல்கள் என்பவற்றிலும் பெண் விரோதச் சிந்தனைகள் விரவி இருப்பதனை நாம் எடுத்து நோக்கலாம். ரிக் வேதம் *8.3.017*இல் "பெண்கள் நிலையற்ற புத்தி படைத்தவர்கள் அவர்கள் நம்பத்தகாதவர்கள்" என்று கூறப்பட்டு, பெண்களின் குணாம்சம் பற்றிய ஒருதலைப்பட்சமான ஆணாதிக்கச் சிந்தனை புலப்படுத்தப்படுகிறது. இதே ரிக் வேதம் *10.95.10* இல் "பெண்களின் நட்பு நீடித்ததன்று, அவர்கள் கழுதைப் புலியின் தன்மை உடையவர்கள்" என்ற கூற்றும் பெண்கள் பற்றிய ஒரு தாழ்வான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பதிவையே சமூகத் தளத்தினுள் விதைக்க முற்படுகிறது.

அதர்வண வேதம் 14.1.52 இல் "மேலும் அவள் (கணவனால்) அவனுடைய போஷ்யா (அடிமை) அல்லது அவனுக்கு (கணவனுக்கு) கீழ்ப்பட்டவள்" என்று கூறுவதானது, ஆணாதிக்கத்தின் தன்மையை வெளிப்படுத்துகின்றது.

மகாபாரத பீஷ்மர் ஓரிடத்திலே "வேதசாஸ்திரி கட்டளைப்படி, புருஷர்கள் தங்கள் மனைவிகளை, பூர்வ புண்ணியத்தினாலோ, அல்லது தெய்வ சங்கல்பத்தினாலோ தான் அடைந்து கொண்ட பொருளாகவே கருத வேண்டும்". எனக் கூறுவதன் மூலம், பெண்களை உயிரும், மனதும் உள்ள மனுஷி- களாகக் கருதாமல், வெறும் பண்டங்களாகக் கருதி உள்ளமையும், அத்தகைய ஆணாதிக்கச் சிந்தனை ஒரு சமூக ஏற்புடைமை வாய்ந்த தர்மமாகவும் நிலைநிறுத்தப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

உபநிஷதங்கள், இந்து மதத்தின் உன்னதமான தத்துவப் பொக்கிஷங்களாகப் போற்றப்பட்டாலும் கூட, அவற்றிலும் பெண்கள் பற்றிய சமூகப் பார்வை தாழ்வான முறையிலேயே பதியப் பெற்றுள்ளது.

"மனிதனுக்கு இன்பத்தை அளிக்கவும், (அவனின்) காம வேட்கையைத் தணிப்பதற்குமே பெண் படைக்கப்பட்டிருக்கிறாள்"

"மனிதன் தனக்கு உதவிக்காக நீண்டநாள் கஷ்டப்பட்டான். கடைசியாகத் தன்னுடைய இச்சைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தனக்கு எல்லா வகையான இன்பத்தையும் தரக் கூடிய ஒற்றை மனைவி என்ற உருவத்தில் பெற்றான்"

இவை எல்லாம் இந்து மதத்தின் தத்துவ சிகரமாகவும், வேதசாரமாகவும், அக உலகின் ஞானத் தேடலாகவும் உயர்த்திப் பேசப்படுகின்ற உப நிஷதங்களில் இடம் பெற்றிருக்கின்றமை சிந்தனைக்குரியது.

பார்ப்பன மேலாதிக்கத்துக்குட்பட்ட இந்து மதம், பெண்ணைத் தெய்வம் ஆக்கிய மறுபுறம், சமூகத்தில், தேசத்தில் நடமாடிய பெண்களை ஒரு பண்டமாகவும், ஆணின் தேவைகளைத் தீர்க்கும் கருவியாகவுமே ஒரு தாழ்வான கருத்துருவை நிலை நிறுத்தி உள்ளது.

## இதிகாசங்கள் சித்தரிக்கும் பெண்கள்

இன்றை வரையிலும் இந்து மக்களின் வாழ்வியலிலும், பண்பாட்டிலும், இதயத்தளத்திலும் மிகுந்த செல்வாக்கைப் பதிப்பனவாக இதிகாசங்கள் விளங்குகின்றன. இராமாயணமும், மகாபாரதமும் பெருங்கதையாடல் மரபுகளாக, மனப் படிமங்களாக, கருத்துச் சிதறல்களாக, யுகங்கள் தாண்டிய சிந்தனை நீட்சியாக இடம் பிடிக்கின்றன. நவீன தொலைக்காட்சித் தொடர்கள் இராமாயண, மகாபாரத கதையாடல்களை மீள உற்பத்தி செய்வதையும், பல்லாயிரக் கணக்கானோர் அக் கதைகளை ரசித்து மகிழ்வதும், அவை எத்துணை அளவு சக்தி வாய்ந்த சமூக பண்பாட்டுச் செல்வாக்கையும், கருத்தியல் நிலைப்பட்ட உள்ளார்ந்த வலுவையும் கொண்டுள்ளன என்பதனைப் புலப்படுத்துவதற்குப் போதுமானது.

எல்லா வகையான புருஷலட்சணங்களின் ஒட்டுமொத்த உறைவிடமாகவும், ஏகபத்தினி விரதனாகவும் போற்றப்படும் ஸ்ரீ இராமன் கருவுற்ற தன் மனைவியை அடர்ந்த காட்டில் தனித்து விடுகிறான். இதற்கு முன்பாக சமூக நியமங்களைத் திருப்திப்படுத்துகிறேன் எனச் சொல்லி கொண்டு சீதையை அக்கினிப் பரீட்சைக்கும் உள்ளாக்குகிறான். இவை எல்லாம் எத்தகைய கேள்விகளும் இன்றி சமூக மரபிலே சொல்லாடலாகவும், தத்துவ நியமங்களாகவும், மீள வலுயறுத்தப்படுகின்றன. இராமன் சீதையின் "தூய்மையைக்" கேள்விக்கு உள்ளாக்கிய போதிலும் அவள் எதிர்மறையான பிரதிபலிப்பு எதுவுமின்றி, அவனையே தன் தெய்வமாகக் கொண்டாடுகிறாள். இங்கே சீதைக்கென்று தனியான அல்லது தனித்துவமான பார்வை, தீர்மானம் எதுவுமே இல்லையா அல்லது அத்தகைய பார்வை ஆணாதிக்க இலக்கியவாதிகளினால் வெளிப்படுத்தப்படாமல் மறைக்கப்பட்டதா என்றே கேள்வி எழுகிறது.

மகாபாரதமும் பெண்கள் தொடர்பான இரண்டாம் பட்ச நிலைமையினைப் பல வேறு இடங்களிலும் ஒரு தர்மம் என்கிற அளவில் நிலைநிறுத்தி உள்ளது.

"பெண்ணாய்ப் பிறப்பதை விடவும் கெட்ட பிறப்பு வேறு எதுவும் இல்லை, எல்லாக் கேடுகளுக்கும் வேர் பெண்களே, எவ்வளவு விறகை இட்டாலும் அக்கினியானது திருப்தி அடைவதில்லை, நதிகள் கொணரும் எந்த அளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரினாலும் கடலுக்கு ஆசையானது தீர்வதில்லை. எத்தனை உயிர்களைக் கொன்றாலும் கொலைகாரன் சமதானம் அடைவதில்லை. இதுபோல பெண்கள் எவ்வளவு ஆண்களாலும் திருப்தி அடைந்து விடமாட்டார்கள் - நாசகாலன், ஊழிக்காற்று, பாதாளக் கடவுளாகிய எமன் இடைவிடாமல் நெருப்பைக் கக்குகின்ற அக்கினி, ஊற்றின் வாய், சவரக்கத்தியின் கூர்மை, கொடிய விஷம் கொண்ட பாம்பு ஆகியவைகள் ஒன்று சேர்ந்தால் எத்தனை கேடு விளையுமோ, அத்தனை கேட்டையும் விளைவிக்கத்தக்கவர்களே பெண்கள். இவ்வாறு மகாபாரதச் சிந்தனைகள் பெண்களைத் தாழ்வாகக் கற்பிதம் செய்துள்ளது.

இதனை விட குந்திதேவியின் வரலாறு, திரௌபதை பஞ்ச பாண்டவரை மணந்தமை, பஞ்சபாண்டவர்களுள் வீமன் அர்ச்சுனன் முதலானோர் தன்னிச்சையாகப் புரிந்து கொள்ளும் பலதார மணங்கள், திரௌபதியை சதுரங்க விளையாட்டின் போது பகடைக்காயாக வைக்கப்படுதல், சபையினர் மத்தியில் திரௌபதிக்கு துகில் உரியப்படுதல் முதலான நிகழ்வுகளும் அக்காலப் பெண்மையின் வீழ்ச்சி நிலையினையே எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.இன்றைக்கு சமூகத்தில் பிரதிபலிக்கப்படும் பெண் குழந்தை மீதான வெறுப்பு என்பது இன்றைய உற்பத்தி அன்று, அது யுகங்களுக்கு முன்பாகவே முளைத்து, நிலையூன்றி விட்டது என்பதை அதர்வண வேதம் நிரூபணம் செய்கிறது.

அதர்வண வேதம் *6.2.3* இல் "குடும்பத்தில் பெண் (குழந்தை) பிறந்தால் அது மகிழ்ச்சிக்குரியதன்று. (மாறாக) வருந்துவதற்குரியது, வியாகூலப்பட வேண்டியது (சமூகம்) ஆண் மகவை விரும்புகிறதே அல்லது பெண் மகவை விரும்புகிறதில்லை, பெண்மகவு வேறு எங்காவது பிறக்கட்டும்" எனக் கூறும் பகுதியை நாம் இங்கு சான்றாகக் குறிப்பிடலாம். அதாவது பெண் ஜன்மமே சாபப்பட்ட, பாவப்பட்ட பிறப்பாக அதர்வண வேதம் கூறுகின்றது.

## மனு தர்மத்தில் பெண் அடிமைச் சிந்தனைகள்

இந்து மதத்தின் பிரதான ஸ்மிருதி நூலாகப் போற்றப்படுவது மனு தர்மசாஸ்திரமாகும். அந்நூலை நாம் ஆழமாகப் பகுப்பாய்வு செய்யும் போது, மிகத்தெளிவான வகையில், அங்கே ஆணாதிக்கச் சிந்தனைகள் பிரதிபலிக்கப்படுவதனைக் காணலாம். பிறப்புத் தொடக்கம், இறப்பு வரையிலும் ஆணுக்கும், பெண்ணுக்கும் வெவ்வேறு நீதி விழுமியங்களைக் இந்நூல் கற்பிக்கிறது.

எடுத்துக்காட்டாக, மனு *2.213* இல் "இவ்வுலகில் ஆண்களை மயக்குவதே பெண்களின் இயல்பு. எனவேதான், பெண்களிடம் பழகும் போது, விவேகிகள் எப்போதும் விழிப்புடன் இருக்கிறார்கள்" என்ற கூற்று இடம் பெறுகிறது. இங்கே, பெண் விவேக வாழ்வுக்கு எதிரானவளாகவும், ஆண்களை மயக்குவது ஒன்றே பெண்களின் ஒரே இலக்கு என்பது போலவும் ஒரு கருத்துருவாக்கம் விதைக்கப்பட்டுள்ளது.

மனு *2.214* இல் "இந்த உலகில் முட்டாளை மட்டுமன்றி அறிவாளியையும் தவறான பாதைக்கு இட்டுச் செல்வதுடன் ஆசைக்கும், கோபத்திற்கும் அவர்களை அடிமையாக்குவதில் வல்லவர்கள் பெண்கள்" என்பதான ஆணாதிக்கத்தின் குரல் ஒலிப்பதையும் காணலாம்.

இதே மனு "ஒரு பெண் இளமைக் காலத்தில் தன் தந்தையையும், விவாகமான பின் கணவனையும், முதுமைப்பருவத்தில் தனது புதல்வனையும் சார்ந்திருக்க வேண்டியது கட்டாயம்" எனக் கூறி, பெண் என்பவள் எப்போது, எவ்விடத்தும் எவரையேனும் சார்ந்து வாழ வேண்டியவள் என்பதாகவும், அவள் சுயாதீனமாக வாழும் திறனற்றவள் என்பதாகவும் கருத்தேற்றம் செய்கிறது.

மனைவியின் கடமைகள் பற்றி எடுத்துரைக்க வரும் மனு ஆசிரியர், அப்பட்டமாக ஆணாதிக்கச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதையும் நாம் காணலாம். மனைவி கணவனுக்கு எப்போதும் அடங்கியவளாகவும், விசுவாசம் மிக்கவளாகவும் நடக்க வேண்டும். அவனுக்குரிய பனிவிடைகளைக் குறைவின்றி நிறைவேற்ற வேண்டும்.

மனைவியிடம் கணவன் எல்லா ரகசியங்களையும் கூறக் கூடாது மனைவியை எப்போதும் கணவன் கண்காணித்து வர வேண்டும். இத்தகைய பிற்போக்குத்தனமான கருத்துகளே மனு ஸ்மிருதியில் நிறைந்து காணப்படுகின்றன. இங்கே நாம் நுணுக்கமாக நோக்கிப் பார்க்க வேண்டிய ஓர் அம்சம் உளது. அதாவது "இந்துச் சட்ட நூலாக" (Hindu Law) மனு தர்ம சாஸ்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மைப்படுத்தப்படுகிறது. சட்டம் என்பது சமூகத்தில் யாவர்க்கும் சமமாக இருக்க வேண்டும். ஆயின் மனு தர்ம சாஸ்திரமோ, ஆணுக்கும், பெண்ணுக்கும் அசமத்துவப் பண்புள்ள நீதியையே நிலைநாட்டியுள்ளமை எத்துனை பொருத்தம் வாய்ந்தது என்பதும் கேள்விக்குரியதாகிறது.

## சித்தர் மரபில் வெளிப்படும் ஆணாதிக்கம்

இந்து மதம் என்கின்ற பெருநதியின் ஒரு கிளையாக நிற்பது சித்தர் மரபு எனலாம். சித்தர்கள் எளிமைத்தன்மையும், குறியீட்டுத் தன்மையும் கொண்ட, ஆழமான சிந்தனைகளைப் பாடல் வடிவில் வெளிப்படுத்தியவர்களாக உள்ளனர். ஆனால் சித்தர் பாடல்களிலும் பெண் வெறுப்புக் கருத்துகளே பரவலாக இடம் பெறுகின்றமை எம்மைச் சிந்திக்கத் தூண்டும் அம்சமாக உள்ளது. எடுத்துக் காட்டாக,

"பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசாம் பிடித்திட்டு என்னைக்

கண்ணால் வெருட்டி, முலையால் மயக்கிக் கடி தடத்து

புண்ணாங் குழியிடைத் தள்ளி என் போதப் பொருள் பறிக்க

எண்ணாதுனை மறந்தேன் இறைவா கச்சியேகம்பனே........."

என்னும் பட்டினத்தார் பாடலில் பெண்ணை ஞான வாழ்வுக்குத் தடைக்கல்லாகக் குறிப்பிடுகிறார். இதனை விட, பெண்ணின் அங்கங்கள் தொடர்பான இழிவுபடுத்தப்பட்ட, மலினப்படுத்தப்பட்ட, ஆணாதிக்கக் கண்ணோட்டத்துடன் கூடிய பல்வேறு சிந்தனைகளும் பல்வேறு சித்தர்களால் புலப்படுத்தப்பட்டுள்ளன.

பட்டினத்தார் பெண்களை ஒட்டுமொத்தமாக இழிவுபடுத்தும் அதேவேளை, தனது தாயார் மரணித்த போது, மிகுந்த கழிவிரக்கத்துடன் தாயின் புகழ்பாடுவதையும் அவதானிக்கலாம். இத்தகைய முரண்பாட்டினை விளக்கப் புகுந்த கலாநிதி, செல்வி, திருச்சந்திரன். "தாய்மை என்ற ரீதியில், வயது முதிர்ந்த நிலையில் பெண்ணை ஏற்றிப் போற்றும் சித்தர்கள், இளம் பெண்களின் இளமையையும், அழகையும் கண்டு அச்சமுற்றதன் வெளிப்பாடே இத்தகைய முரண்நிலை" என்ற கருத்துப்பட வியாக்கியானம் செய்வது குறிப்பிடற்பாலது.

## ஏனைய மதங்களில் பெண்களின் நிலை

இந்து மதம் போலவே ஏனைய மதங்களிலும் பெண்கள் பற்றிய தாழ்வான கருத்தியல்கள் புலப்படுத்தப்படுவதனை இங்கே நாம் சுருக்கமாகப் பகுப்பாய்வு செய்யலாம்.

கிறிஸ்தவ மதத்தின் புனித நூலான திருவிவிலியத்தின் பல இடங்களிலும் ஆணாதிக்கச் சிந்தனைகள் பதிவாகியுள்ளன. எடுத்துக்காட்டாக, புதிய ஏற்பாடு எபே **5.22** இல் "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிவது போலவே உங்கள் சொந்தப் புருஷருக்கும் கீழ்ப்படியுங்கள் எனவும், **5.23.24** ஆம் பிரிவுகளில் "கிறிஸ்து சபைக்குத் தலையாய் இருப்பது போலவே, புருஷனும் மனைவிக்குத் தலையாய் இருக்கின்றான்". "ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவது போலவே மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்" எனவும் எடுத்துரைக்கிறது.

ஆதியாகமம் *3.16* இலும், நாளாகமம் *13.21* இலும் ஆண்கள் பெண்களை ஆதிக்கம் செய்யப் பிறந்தவர்கள் என்ற பொருளில் வசனங்கள் இடம்பெறுகின்றன. இதற்கும் அப்பால், சமகாலத்திலும் திருச்சபை நிர்வாகத்திலும், குருத்துவ வாழ்க்கை சார்ந்தும், திருப்பலிப் பூசை நிகழ்த்துதல் தொடர்பிலும் கிறிஸ்தவ மதத்திலும் ஆணாதிக்க நடைமுறைகள் தொடர்ச்சியான விவாதங்களுக்கு வழிவகுத்து வருகின்றமையும் கவனிக்கத்தக்கது.

அடுத்து இஸ்லாமிய மதத்தை எடுத்துக் கொண்டால் எனைய மதங்களுக்குக் குறைவற்ற வகையில் பல்வேறு ஆணாதிக்கச் சிந்தனைக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப காலகட்டத்தில் வரைமுறையற்ற பாலியல் துன்புறுத்தலும், பெண் சிசுக் கொலைகளும் ஏராளமாக இடம் பெற்றதோடு, பெண்களுக்கான உரிமைகள் மிக மோசமாக மறுக்கப்பட்டதையும் வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

திருக்குர் ஆனிலும், பெண்கள் பற்றிய தாழ்வான பதிவுகளே இடம்பெறுகின்றன. அந்த **2.222.223** இல் "அது ஒர் தூய்மையற்ற நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, மாதவிடாய்க் காலத்தில் பெண்களை விட்டு விலகி இருங்கள்....." என்ற கட்டளை இடம்பெறுகிறது. பெண்கள் ஆண்களின் விளை நிலங்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர்.

இதேவேளை, இஸ்லாமிய மத நியமத்தின் படி, பெண்கள் மசூதிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு பெண்களின் வழிபாட்டுரிமை, பாலியல்பைக் காரணம் காட்டி, மறுக்கப்படுவதனை அவதானிக்கலாம். பெண் மீதான உரிமையை, ஆணுக்கு விலக்கப்பட்ட சூழ்நிலைகள் தவிர்த்து, மற்றைய சூழ்நிலைகளில் விரும்பியவாறு செயல்பட இஸ்லாம் கோருகின்றது. இங்கே, பெண்ணின் உரிமையை முற்று முழுதாகப் புறக்கணிக்கப்படுகின்றமையையும் நோக்கலாம். அத்துடன் ஆணின் வருங்கால வாரிசுகளை உருவாக்க பெண் "விளை நிலமாக" பயன்படுத்தப்படுதலைக் சுட்டிக்காட்டி, பெண், பாலியல் நுகர்வுக்கான ஊடகமாகவும், பிள்ளை பெறும் இயந்திரமாகவும் குர் ஆன் சமுதாயத்தவர் மனங்களில் நிலை நிறுத்த முற்படுகிறது.

இதனை விட, சொத்துரிமை, விவாகரத்து, வெளிநடமாட்டம் தொடர்பிலும் பெண்களுக்கென்று இறுக்கமானதும், பிரத்தியேகமானதுமான விதிமுறைகளை இஸ்லாம் கற்பிக்கின்றமை, அதனின் பால் உணர்வு வாதம் பற்றிய பிற்போக்குத்தனமான சட்டங்களையும், ஒழுக்கங்களையும் ஸ்தாபித்துள்ளமை புலனாகிறது.

அத் *4.15,16* இல் "உங்களுடைய பெண்களில் எவர் மானக்கேடான செயலைப் புரிந்து விடுகின்றார்களோ, அவர்களின் குற்றத்தை நிறுவ நான்கு சாட்சிகளைக் கொண்டு வாருங்கள். அவர்கள் சாட்சியளித்து விட்டால், அப்பெண்களுக்கு மரணம் நேரும் வரை, அல்லது அல்லாஹ் அவர்களுக்கு ஏதேனுமொரு தீர்ப்பை வழங்கும் வரை, அவர்களை வீடுகளில் தடுத்து வையுங்கள்" எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு இஸ்லாமிய மதக் கண்ணோட்டத்தில் பெண்களும், பெணகள் உரிமைகளும் ஓரங்கட்டப்படுவதை நோக்கலாம்.

இறுதியாக, பௌத்த மதத்தை எடுத்துக் கொண்டால், அங்கே பெண்களுக்கான சமத்துவம் நிலைநிறுத்தப்படுவதாக ஒரு "தோற்றப்பாடு" ஏற்படுத்தப்படுகிறதே அன்றி, உண்மை அதுவன்று. "உன்னுடன் கதைக்கும் போது, பிற பெண்களைச் சகோதரியாக நினைத்துப் பழகு எச்சந்தர்ப்பத்திலும் தனியாகப் பெண்ணுடன் கதைக்காதே. முடிந்தவரை இன்னொருவரை வைத்துக் கொண்டு பேசு" என்பதாகவே புத்தர் போதிக்கிறார்.

பௌத்த மகாசபையில் பெண்களுக்குப் பதவி கொடுப்பதை புத்தர் மூன்று முறை மறுத்தார். பெண்களுக்கான பௌத்த மத ஒழுக்கக் கோவையில் ஆணாதிக்க விழுமியங்களே நிறைத்துள்ளன. இதன் தொடர்ச்சியை இன்றைக்கும் பிக்குணிகள் சங்கத்தின் பிரச்சினைகள் ஊடாக அவதானிக்கலாம்.

## முடிவுரை

ஏனைய சமூக நிறுவனங்கள் போலவே, மதமும் பெண்ணையும், பெண் உரிமைகளையும் ஒடுக்குகின்ற ஒரு சமூக ஸ்தாபனமாகத் தொழிற்படுகிறது. ஆணாதிக்கச் சிந்தனைகளுக்கேற்ப, தந்தையாதிக்க நலன்களை முன்னிறுத்தியனவாக, பால்நிலைசார் பேதங்களை சந்ததி சந்ததியாக காவிச் செல்லும் ஊடகமாகவே தொழிற்பட்டு வருகின்றன. பெண்ணை தெய்வமாக மத நூல்களிலும், சடங்காசாரங்களிலும், விக்கிரக வடிவங்களிலும் ஏற்றிப் போற்றும், மதங்கள், மனித வாழ்வியலில் பெண்ணை ஒடுக்க முற்படுகின்றன. இயற்கையான, உரியல் அம்சங்கள் கூட "பாவமாகவும்" "தீட்டாகவும்" (Pollution) கொள்ளப்பட்டு பெண்களிடத்தும் மூளைச் சலவை செய்யப்படுகிறது.

காரைக்கால் என்னும் பெண் இந்து மதத்திலே பேயாக்கப்படுகிறாள். மீராவும், ஆண்டாளும் அக்க மகாதேவியும் பாலுணர்வு பற்றி சுயாதீனமாகவும், பெண்மையின் யதார்த்தம் தளும்பவும் பாடிய பாடல்கள், இறையுணர்ச்சி என்னும் தன்மையின் கீழ்தான் ஏற்புடைமை பெறுகின்றன. கற்பனைக்கும் அப்பாலான தகாப்புணர்ச்சி வன் கொடுமை, பாலியல் விகாரங்கள் யாவும் மதப் புரணங்களிலும், புனைவுகளிலும் மிகச் சாதாரணமாக இடம்பெறுகின்றன.

எனவே, ஆணாதிக்கத்தின் கருவியாகத் தொழிற்படும் மதங்களையும், மதக் கோட்பாடுகளையும் நாம் பெண்நிலைச் சிந்தனைப் பார்வையில் நின்று மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டியதும் கட்டவிழ்த்துப் பார்க்க வேண்டியதும் சமகாலத் தேவையாகிறது எனலாம். ■

**சந்திரசேகரன் சசீதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெண்கள் ஊடகக் கூட்டமைப்பு**
56/1, சரசவி லேன், காசல் வீதி,
கொழும்பு 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045 / 5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : wmcsrilanka@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூ. 50/-

Globe Printing Works - No. 5, Stork Place Colombo 10. Tel: 0777-315971